வெளியீடு: 2-4-2008 Issued: 2-4-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, பிப்ரவரி 1, 2008—தொகுதி 41 எண் 2**

**Friday the 1st February, 2008 —Volume 41 - No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

## 1–2–2008

## உள்ளடக்கம்

பக்கங்கள்

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 9) .. .. 165-197

**2. தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் .. 198

**3. அறிக்கைகள் அளித்தல்—**

அரசு உறுதிமொழிக் குழு .. .. 198

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. .. 198-199

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 .. .. 199-200

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்—** .. 200-270, 310-325

திரு. ஜி.கே. மணி .. .. 200-222

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் .. .. 222-242

*செல்வி ஜெ ஜெயலலிதா .. .. 243-260,262-270

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. .. 269-270, 310-322

**6. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல் .. ..

பக்கங்கள்

**6. அரசினர் தீர்மானங்கள்**—தொடர்ச்சி

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் .. .. 271

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் .. 30[illegible]

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**— .. 326

(அ) தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு, 2008 .. .. 271-288

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. .. 271-278

திரு. என். நன்மாறன் .. .. 272,277

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் .. .. 272

திரு. கி. ஆறுமுகம் .. .. 272-274

திரு. வை. சிவபுண்ணியம் .. .. 274

திரு. மு. கண்ணப்பன் .. .. 275

திரு. கு. செல்வம் .. .. 275-276

(ஆ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. .. 276

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி .. .. 278-280

(இ) திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 .. .. 278-279

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. .. 280-283

திரு. விடியல் எஸ். சேகர் .. .. 280-283

திரு. சி. கோவிந்தசாமி .. .. 281

திரு. வை. சிவபுண்ணியம் .. .. 281



பக்கங்கள்

. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(ஈ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 .. 282

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. .. 284-288

திரு. விடியல் எஸ். சேகர் .. .. 284,286,288

திரு. சி. கோவிந்தசாமி .. .. 284-285

திரு. கே.வீ. ராமநாதன் .. .. 285

(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. .. 285-286

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. .. 289-291

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. .. 290-291

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. .. 291-293

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. .. 292-293

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. .. 293-295

(ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. .. 294-295

*மாண்புமிகு திரு. கோ.சி. மணி .. .. 295-300

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் .. .. 296,298,300

திரு. சி. ஞானசேகரன் .. .. 296

திருமதி ஜி. லதா .. .. 296-297

பக்கங்கள்

7. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(ஐ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. 298

*மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் .. 300-305

திரு. தி. வேல்முருகன் .. .. 300,302-305

திரு. அருள் அன்பரசு .. .. 301-302

(ஒ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 .. .. 303

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் .. 307-308

(ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 .. .. 307-308

*மாண்புமிகு திரு. கோ.சி. மணி .. .. 308-310

8. **அறிவிப்புகள்**— 309-310

(அ) திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 (ஆஇ) .. ..

(ஆ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 (ஆஇ) .. .. 280

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆஇ) .. .. 284

(ஈ) சட்டமன்றப் பேரவையின் அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல் .. .. 306

9. **தீவிரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்—உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து பொதுப் பணி மற்றும் சட்ட[illegible]ரின் விளக்கம்** .. .. 325-326

10. **[illegible] வைக்கப்பட்ட [illegible]டுகள்** .. .. 288-289

327-329


228078
சென்னை-600 009
நூலகம்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, தை 18

## 2008 பிப்ரவரி 1, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்"*

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

### 1. வினாக்கள்—விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்**

**பட்டியல் - 9@**

V21, 3/PX
P08.41.2

1—

**உரிமம் வழங்குதல்**

**வினா எண் 1099—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனைமரத் தொழிலாளர்களின் வறுமை நிலையினைக் கருதி பதநீர் இறக்கும் உரிமம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா அல்லது பதநீர் விதிகளின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள பனை மரம், தென்னை மரம், ஈச்ச மரம் போன்ற

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2008 பிப்ரவரி 1

மரங்களிலிருந்து பதநீர் இறக்கவும், வெல்லம் காய்ச்சவும், விற்பனை செய்யவும், இடம் பெயர்ந்து எடுத்துச் செல்லவும் ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு பனைபொருள் வாரியத்திற்கு அரசினால் உரிய உரிமம் வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது *1-1-2007* முதல் *31-12-2009* வரை மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீட்டித்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**2—**

**பணி நிரந்தரம்**

**வினா எண் 8029—திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் டாஸ்மாக் அமைப்பின்கீழ் செயல்படும் 40 கிடங்குகளில் கடந்த 20 ஆண்டுகளாகப் பணியாற்றும் 1500 சுமை தூக்கும் தொழிலாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாடு முழுவதும் டாஸ்மாக் அமைப்பின்கீழ் செயல்படும் கிடங்குகளில் பணியாற்றும் அனைத்து சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கும், மதுபான வகைகளை ஏற்றி இறக்கும் போக்குவரத்து ஒப்பந்ததாரர்களால் நேரடியாக அன்றாடம் வேலை வழங்கப்பட்டு, ஏற்றி இறக்கப்படும் மதுபான வகைகளுக்கான பெட்டிகளுக்கு அன்றாடக் கூலி, போக்குவரத்து ஒப்பந்ததாரர்களால் வழங்கப்படுகிறது. மேற்கண்ட சுமை தூக்கும் பணியாளர்கள் கிடங்குகளில் தற்காலிகமாகப் பணிபுரிந்து வருவதால், மேற்கண்ட சுமை தூக்கும் பணியாளர்களுக்கும், டாஸ்மாக் நிறுவனத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. எனவே, இவர்களைப் பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக வினா ஏதும் எழவில்லை.

**3—**

**மதுக்கடை**

**வினா எண் [illegible]—திரு. [illegible]த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-600 008



2008 பிப்ரவரி 1]

திருப்போரூர் தொகுதி, கொளப்பாக்கம், மாம்பாக்கம் மதுபானக் கடைகளை மக்களுக்குத் தொல்லை இல்லாத இடத்தில் வைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வண்டலூர்-கேளம்பாக்கம் சாலையில், மாம்பாக்கம் கிராமத்தில் மதுபானக் கடை (எண் 4316) வண்டலூர்-கேளம்பாக்கம் நெடுஞ்சாலையில் இருந்தது. இக்கடைக்கு 100 மீட்டருக்கு அப்பால் பள்ளி அமைந்துள்ளது. இருப்பினும், பள்ளி மாணவ, மாணவிகள் இக்கடையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளதால் இவர்களின் நலன் கருதி இக்கடையானது *25-12-2006* அன்று வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**4—**

**விளம்பரம்**

**வினா எண் 10465—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுவினால் ஏற்படும் தீமைகளை விளக்கி விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மதுவினால் ஏற்படும் தீமைகளை விளக்கி விளம்பரம் செய்ய அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது:

மதுபாட்டில் மேல் உள்ள லேபில்களிலும், மதுபானம் விற்பனை செய்யும் டாஸ்மாக் சில்லரை விற்பனைக் கடைகளிலும், எப்.எல். 3 உரிமம் பெற்று இயங்கிவரும் ஹோட்டல்களில் உள்ள மதுபானக் கூடங்களிலும், எப்.எல். 2, எப்.எல்(3ஏ), எப்.எல் (3ஏஏ), எப்.எல். 8, எப்.எல்.9 மற்றும் எப்.எல்.10 உரிமம் பெற்று இயங்கிவரும் மதுபானக் கூடங்களிலும் கீழ்க்கண்ட வாசகங்கள் அடங்கிய விவரம் விளம்பரப்படுத்தப்படுகிறது:

[2008 பிப்ரவரி 1

- மது நாட்டுக்கு, வீட்டுக்கு, உயிருக்குக் கேடு
- குடி குடியைக் கெடுக்கும்
- குடிப்பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும்
- 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மது வழங்கப்படமாட்டாது

மதுவினால் ஏற்படும் தீமைகளை விளக்கும் வகையில் துண்டுப் பிரசுரங்கள், தெரு ஓர நாடகங்கள், மனிதச் சங்கிலி, திரை அரங்குகளில் சிலைடுமூலம் விளம்பரம் மற்றும் பிரச்சார இயக்கங்கள் ஆகியவையும் நடத்தப்படுகின்றன.

**5—**

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 6561—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மீனாட்சிபட்டியில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், மூணாண்டிபட்டி கிராமத்தில் மூணாண்டிபட்டி நியாய விலைக் கடை 853 குடும்ப அட்டைகளுடன் உசிலம்பட்டி தாலுகா கூட்டுறவு விற்பனைச் சங்கக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. மீனாட்சிபட்டி கிராமத்தில் 125 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் 1 கி.மீ. தூரத்தில் உள்ள மூணாண்டிபட்டி நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டு, அக்குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்களை மூணாண்டிபட்டி நியாயவிலைக் கடையில் பெற்று வருகின்றனர். இந்நிலையில், மீனாட்சிபட்டிக்கு நியாயவிலைக் கடைக் கட்டடம் தனியே கட்டித்தரவேண்டிய அவசியம் இல்லை.

**6—**

## அத்தியாவசியப் பொருட்கள்

**வினா எண் 7821—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 பிப்ரவரி 1]

வால்பாறை தொகுதியில் பிலிசின்னம்பாளையம், கரியான்செட்டிப்பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாப்பட்டி, அர்த்தநாரிப்பாளையம், தென்சங்கம்பாளையம், ஜல்லிப்பட்டி, சோமந்துரை, தென்சித்தூர், ரமணமுதலிப் புதூர், பெத்தநாயக்கனூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள நியாயவிலைக் கடைகளில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தடையின்றி தரமான முறையில் கிடைக்கச் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் பிலிசின்னம்பாளையம், கரியான்செட்டிப் பாளையம், அங்கலக்குறிச்சி, கம்பலாப்பட்டி அர்த்தநாரிப்பாளையம், தென்சங்கம்பாளையம், ஜல்லிப்பட்டி, சோமந்துரை, தென்சித்தூர், ரமணமுதலிப்புதூர், பெத்தநாயக்கனூர் ஆகிய ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் 13 முழு நேர நியாயவிலைக் கடைகளிலும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் அளவில் தடையின்றி தரமானதாக எவ்விதப் புகார்களுக்கும் இடமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அங்காடிகளில் தரமற்ற அரிசி காணப்படின் அதனை உடனடியாக மாற்றம் செய்யவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**7—**

## நவீன அச்சகம்

**வினா எண் 10421—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினத்தில் கூட்டுறவு நவீன அச்சகம் ஒன்று ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது கூட்டுறவு அச்சகம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களை உள்ளடக்கி தருமபுரியில்

[2008 பிப்ரவரி 1

ஒன்று செயல்பட்டு வருகிறது. தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம், தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு தனியாகச் செயல்பட்டு வருவதால், தேவைப்படும்பட்சத்தில் தருமபுரி மாவட்டத்தில் செயல்படும் கூட்டுறவு அச்சகத்தை இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கெனத் தனியாக ஒரு கூட்டுறவு அச்சகம் அமைக்க வாய்ப்புள்ளது. எனினும், காவேரிப்பட்டினம் தொகுதியில், காவேரிப்பட்டினத்தில் புதிய நவீன கூட்டுறவு அச்சகம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**8—**

**கூடுதல் விற்பனையாளர்**

**வினா எண் 16196—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியிலுள்ள நியாயவிலைக் கடைகளில் கூடுதலாக கட்டுனர், எடை போடுபவர்கள் நியமிக்கப்படுவார்களா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில், கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைமூலம் 17 நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகளில் குறைந்த அளவே குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளதால், விற்பனையாளர் அளவிலேயே அத்தியாவசியப் பொருட்கள் திருப்திகரமான முறையில் புகார்களுக்கிடமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி நியாயவிலைக் கடைகளுக்கென கூடுதல் எடையாளர்/அளவையாளர் நியமனம் செய்யவேண்டிய அவசியம் எழவில்லை.

**9—**

**நியாய விலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 18280—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 பிப்ரவரி 1]

மேல்மலையனூர் தொகுதி, மானந்தல் கிராமத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் வட்டம், மேல்மலையனூர் ஒன்றியத்தில் மானந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 5 முழுநேர நியாய விலைக் கடைகளும், இரண்டு பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. தற்போது மானந்தல் கிராமத்தில் ஒரு முழுநேர நியாய விலைக் கடை, மானந்தல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மானந்தல் கிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

**10—**

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 20385—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, கூளையூர் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, கூளையூர் நியாயவிலைக் கடை 518 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இந்நியாய விலைக் கடை அமைந்துள்ள பகுதியின் அருகில் அரசுப் புறம்போக்கு நிலம் இல்லாமையால், கூளையூர் நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 பிப்ரவரி 1

**11—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 29638—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, துரை குடியிருப்பு, பழவூர் ஊராட்சி, கே.சி. பழவூர் ஆகிய பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, துரை குடியிருப்பு, சமூகரெங்கபுரம் நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே, துரை குடியிருப்பு பகுதியிலுள்ள குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு, துரை குடியிருப்பு பகுதியில் ஒரு பகுதிநேரக் கடை 185 குடும்ப அட்டைகளுடன் 5-8-1988 முதல் செயல்பட்டுவரும் நிலையில், இப்பகுதியில் மீண்டும் ஒரு பகுதிநேரக் கடை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

ராதாபுரம் வட்டம், பழவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும், பழவூர் நியாய விலைக் கடையுடன் கே.சி.பழவூர் பகுதியின் 480 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டுள்ளன. புதிதாக பகுதிநேரக் கடை அமைக்கக் கோரும் கே.சி. பழவூர், தாய்க் கடையிலிருந்து 0.6 கி.மீ. தூரத்தில் மட்டுமே உள்ளது. இந்நேர்வில் இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், கே.சி. பழவூர் பகுதிக்கு பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**12—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 34368—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 பிப்ரவரி 1]

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், திருவடிசூலம் ஊராட்சி, பொருந்தவாக்கம் பகுதிக்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பெரிய புத்தேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில், திருவடிசூலம் ஊராட்சியைச் சேர்ந்த பொருந்தவாக்கம் பகுதியில் ஏற்கெனவே 44 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. எனவே, இப்பகுதியில் மேலும் ஒரு நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**13—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 38843—திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, சிவகங்கை ஒன்றியம், புதுப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, சிவகங்கை ஒன்றியம், புதுப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடைக்கான கட்டடம் ஏதுமில்லாததால் அக்கிராமத்தில் உள்ள 162 குடும்ப அட்டைகளையும் சேர்த்து இடையமேலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 428 குடும்ப அட்டைகளைக் கொண்டு புதுப்பட்டி என்ற பெயரில் முழுநேர நியாய விலைக் கடை காந்திநகர் கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. புதுப்பட்டி கிராமத்திற்கும் தாய் நியாய விலைக் கடைக்கும் 1.00 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளதாலும், இங்கு நியாய விலைக் கடைக்கான கட்டடம் ஏதுமில்லாததாலும் புதுப்பட்டியில் நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 பிப்ரவரி 1

**14—**

**கூட்டுறவுப் பணியாளர்கள்**

**வினா எண் 39867—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுப் பணியாளர்களை அரசு ஊழியர் ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டகசாலைகள், விற்பனைச் சங்கங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், ஆடு வளர்ப்போர் சங்கங்கள், பட்டுப் பூச்சி வளர்ப்போர் சங்கங்கள் போன்ற பல்வேறு சங்கங்கள், பதிவாளர் கட்டுப்பாட்டில் அல்லாமல் பிற செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு தனித்தனியாக (Corporate Body) செயல்படுகின்றன.

2. கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சம்பளம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களும் அச்சங்கங்களின் நிதி நிலைமை, வியாபாரத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அதன் நிர்வாகத்தால் வழங்கப்படுகிறது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களையும் அரசு ஊழியராக்கிடுவது சாத்தியமில்லை.

**15—**

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 20418—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 பிப்ரவரி 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் பத்து கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

இக்கல்லூரிகளில் தேவையான அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டு மாணவர்கள் படித்து வருகின்றனர். கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தலைமையிடம் அமைந்துள்ளது. அங்கு கீழ்க்கண்ட நான்கு வேளாண்மை சார்ந்த கல்லூரிகள் இயங்கி வருகின்றன:

1. வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.
2. தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.
3. வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.
4. வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.

மேற்கண்ட கல்லூரிகள் வால்பாறைக்கு அருகில் அமைந்துள்ளன. வால்பாறை தொகுதி மாணவ, மாணவிகள் மேற்கண்ட நான்கு கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஏதுவாக உள்ளது. மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள ஆழியாறு நகரில் தென்னை ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் வால்பாறை தொகுதி விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வருகின்றனர்.

புதிதாக ஒரு வேளாண் கல்லூரி தொடங்க ரூ.150 கோடி வரை நிதியும், 200 ஏக்கர் நிலமும் தேவைப்படுகின்றது. எனவே, கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் மேலும் ஒரு புதிய வேளாண் கல்லூரி அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2008 பிப்ரவரி 1

16—

## ஆலோசனை வழங்குதல்

**வினா எண் 23067—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் பயிர் சுழற்சி முறையைக் கடைப்பிடிக்கவும் மண் பரிசோதனை செய்யவும் வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள்மூலம் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறை விரிவாக்க அலுவலர்கள்மூலம் இலாபகரமான பயிர் சுழற்சி முறை, செங்கல்பட்டு தொகுதி விவசாயிகளுக்குச் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு தொகுதி விவசாயிகளின் நிலங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு முடிவுகளும், உரம் பரிந்துரைகளும், மண் வள அட்டைமூலம் வேளாண்மை விரிவாக்கத் துறை அலுவலர்கள்மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

17—

## மராமத்து செய்தல்

**வினா எண் 11900—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை, நரிக்குடி ஒன்றியம், கட்டனூர் பெரிய கண்மாயில் உள்ள மடைகளை மராமத்து செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2008 பிப்ரவரி 1]

(ஆ) கண்மாய் புனரமைத்தல் மற்றும் மடைகளைச் சீரமைக்க உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் நீர்வள, நிலவளத் (IAMWARM) திட்டத்தில், இரண்டாம் ஆண்டு திட்டத்தில் சேர்த்து செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

18—

## தடுப்புச் சுவர்

**வினா எண் 11902—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், டி. வாகைக்குளம் கண்மாய்க்கரையில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விருதுநகர் மாவட்டம், திருச்சுளி வட்டம், நரிக்குடி ஒன்றியம், கிருதுமால் உபவடி நிலத்தினைச் சார்ந்த டி. வாகைக்குளம் கண்மாய்க் கரையில் தடுப்புச் சுவர் கட்டுமானப் பணிகள் உலக வங்கி நிதியுதவியில் செயல்படுத்தப்படவுள்ள விவசாய பாசன சீரமைப்பு மற்றும் நீர்வள ஆதார மேலாண்மைத் (IAMWARM) திட்டத்தின்கீழ், கிருதுமால் உபவடி மேம்பாட்டுப் பணிகள்மூலம் மூன்றாம் வருட தொடக்கத் திட்டத்தில் இணைத்துச் செயல்படுத்தப்படும்.

19—

## வெளியேறும் தண்ணீர்

**வினா எண் 12395—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, வெங்கரை போக்கிலிருந்து வெளியேறும் நீரினை சிறிய வாய்க்கால்மூலம் குச்சிப்பாளையப் பகுதியில் உள்ள வாய்க்காலில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கரை போக்கிலிருந்து வெளியேறும் தண்ணீரைத் தடுப்பணை கட்டி குச்சிப்பாளையம் பகுதியுள்ள குமாரபாளையம் கால்வாயுடன் சேர்க்க திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீடுகள் பெறப்பட்டதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**20—**

**மதகு**

**வினா எண் 12396—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, மோகனூர் வாய்க்காலுக்கான தலைப்பு மதகினை அனுச்சம்பாளையம் கிராம ஆற்றுப் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

மோகனூர் கால்வாயின் தலைப்பு மதகினை அனுச்சம்பாளையம் கிராமத்திற்கு மாற்றும் கருத்துரு தற்சமயம் இல்லை. பாலப்பட்டி கிராமத்திற்கு அருகில் குமாரபாளையம் கிராமத்தில் தடுப்பணை கட்டும் திட்டம் தற்பொழுது மின்சார வாரியத்திடம் உள்ளதால் அத்திட்டம் நிறைவேறும்பட்சத்தில் மோகனூர் கால்வாயின் தலைமை மதகை அனுச்சம்பாளையம் கொண்டு செல்வது அவசியமற்றதாகும்.



**21—**

**வாய்க்கால் பராமரிப்பு**

**வினா எண் 12411—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் கோட்ட மேட்டுப்பட்டி பூலாவரி ஏரி முதல் புளியம்பட்டி தேசிய நெடுஞ்சாலை-7 தார்ச்சாலை வரை வாய்க்காலைப் பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில், கோட்ட மேட்டுப்பட்டி கிராமத்தில் உள்ள பூலாவரி ஏரியின் வழிந்தோடியிலிருந்து புளியம்பட்டி தேசிய நெடுஞ்சாலை-7 வழியாகச் செல்லும் வாய்க்காலைப் பராமரிப்பு செய்ய, தோராயமாக ரூ.5.00 இலட்சம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டில், இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**22—**

**கரை அகலப்படுத்துதல்**

**வினா எண் 13132—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, மோகனூர் வாய்க்கால் கரையை அகலப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதியில் உள்ள மோகனூர் கால்வாய் நீளம் 22.40 கி.மீ. ஆகும். இதில் 11.10 கி.மீ. நீளம் கரை ஏற்கெனவே

[2008 பிப்ரவரி 1

அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள 11.30 கி.மீ. நீளம் கரையை அகலப்படுத்துவது குறித்து மதிப்பீடுகள் பெறப்பட்ட பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**23—**

## சீர் செய்தல்

**வினா எண் 21825—திரு. ந. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், புல்வயல் ஊராட்சி, சுந்தரக்குளம் அணைக்கட்டின் உடைப்பைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த அணைக்கட்டின் முன்புற வலது பக்க வெள்ளக் கரையில் ஏற்பட்ட உடைப்பைச் சீர் செய்யும் பணி “பராமரிப்பு மராமத்து” நிதியின்கீழ் நடப்பாண்டில் (2007-2008) ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**24—**

## தூர் வாருதல்

**வினா எண் 22699—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேற்கு வடக்கு, கணக்கன்குடி, கே. பெத்தனேந்தல், செல்லப்பனேந்தல், அதிகரை சின்ன, பெரிய கண்மாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 பிப்ரவரி 1]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மேற்கு, வடக்கு, கணக்கன்குடி, கே. பெத்தானேந்தல், செல்லப்பனேந்தல், அதிகரை சின்ன மற்றும் பெரிய கண்மாய்களை வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25—**

## தூர் வாருதல்

**வினா எண் 22706—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஆணைக்குளம், அச்சங்குளம், வில்வம்பேட்டை, வேலமங்களம், வடக்கு திருப்பாச்சேத்தி, தாழிகுளம் கண்மாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஆணைக்குளம், அச்சங்குளம், வில்வம்பேட்டை, வேலமங்களம், வடக்கு திருப்பாச்சேத்தி, தாழிகுளம் கண்மாய்களை வரும் நிதி ஆண்டில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரி சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**26—**

## தூர் வாருதல்

**வினா எண் 22718—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 பிப்ரவரி 1

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஆலங்குளம், செம்பராயநேந்தல், பறையங்குளம், வீரனேந்தல், வல்லாரேந்தல், உலகனேந்தல் கண்மாய்களைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஆலங்குளம், செம்பராயனேந்தல், பறையன்குளம், வீரனேந்தல், வல்லாரேந்தல், உலகனேந்தல் கண்மாய்களை வரும் நிதி ஆண்டுகளில் பெறப்படும் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரி சீரமைக்கப் பொதுப் பணித் துறை, மதுரை மண்டல தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**27—**

## ஆற்றை ஆழப்படுத்துதல்

**வினா எண் 25080—திரு. வை. காவேரி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பொன்னிலாற்றை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, பொன்னிலாற்றை ஆழப்படுத்தி கரையை பலப்படுத்தும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.



2008 பிப்ரவரி 1]

**28—**

## மராமத்து செய்தல்

**வினா எண் 28364—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கீராத்தூர் கிளாங்காடு, முதலிப்பட்டி வழியாகச் செல்லும் காட்டாற்றை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது காட்டாறுகளைத் தூர் வாரும் சிறப்புத் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

**29—**

## உபரி நீர்

**வினா எண் 28433—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையின் உபரி நீரை மேச்சேரி ஏரியில் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையின் உபரி நீரை மேச்சேரி ஏரியில் நிரப்புவது புவியியல் ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியமற்றது.

[2008 பிப்ரவரி 1

30—

**தார்ச் சாலை**

**வினா எண் 28527—திரு பெ. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாப்பாக்காப்பட்டி ஏரியின் ஆக்கிரமிப்புகளை அகற்றி வடபுறமும், மேல்புறமும் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாப்பாக்காப்பட்டி ஏரியின் வடபுறம் மற்றும் மேல்புறத்தில் தார்ச் சாலை அமைக்கும் திட்டம் இத்துறையின் பரிசீலனையில் இல்லை. வருவாய்த் துறையுடன் கூட்டாய்வு மற்றும் நில அளவு செய்தபின் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

31—

**தூர் வாருதல்**

**வினா எண் 33789—திரு செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி, புத்தக்குடி கிராமம், புத்தக்குடி குளத்தை தூர் வாரி சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி, புத்தக்குடி கிராமம், புத்தக்குடி குளத்தினைச் சீரமைக்கும் பணி உலக வங்கி நிதி



2008 பிப்ரவரி 1]

உதவியுடன் நீர் வள, நில வளத் (IAMWARM) திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவங்கி முடிக்கப்படும்.

32—

**கலைக் கல்லூரி**

**வினா எண் 12302—திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வலங்கைமான் தொகுதி, வலங்கைமானில் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வலங்கைமானில் பெண்கள் கலைக் கல்லூரி ஆரம்பிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஒரு கோடி ரூபாய் நிதியும் 5 ஏக்கர் நிலமும் அந்த ஊர் மக்கள் கொடுத்தால் அங்கு கல்லூரி ஆரம்பிப்பது குறித்து தேவையின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும்.

33—

**பேருந்து இயக்கம்**

**வினா எண் 3530—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரிலிருந்து ஈரோடு செல்ல புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை—தஞ்சாவூர், தஞ்சாவூர்—திருச்சி, திருச்சி—ஈரோடு என பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளது. எனினும் கோரிக்கை

[2008 பிப்ரவரி 1

தடத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், பேருந்து வசதி உள்ளது. மன்னார்குடி—ஈரோடு, காரைக்கால்—ஈரோடு, காரைக்கால்—கோபிச்செட்டிப்பாளையம் (வழி) ஈரோடு, கும்பகோணம்—சத்தியமங்கலம் (வழி) ஈரோடு தடங்களில் தலா ஒரு பேருந்தும், நாகப்பட்டினம்—ஈரோடு தடத்தில் இரு பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. பட்டுக்கோட்டை—ஈரோடு (வழி) ஒரத்தநாடு, தஞ்சாவூர், திருச்சி, கரூர், கொடுமுடி தடத்தில் பகுதி, பகுதியாக கழகப் பேருந்து வசதி உள்ளது. கோரிக்கை தடம் புதிய வழித்தடமாகும். கோரிக்கை தடத்தில் புதிய வழித்தடப் பேருந்தாக இக்கழகத்தின்மூலம் இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை. தற்போதைய நிலையில் மாற்றம் ஏதும் இல்லை.

**34—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 3531—திரு என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம்—துவரங்குறிச்சி—மதுக்கூர்—மன்னார்குடி வரை புதிய வழித்தடம் ஏற்படுத்தி பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அதிராம்பட்டினம்—மன்னார்குடி (வழி) துவரங்குறிச்சி, மதுக்கூர் தடத்தில் பகுதி, பகுதியாக கழகம்/தனியார் பேருந்து வசதி உள்ளது. கோரிக்கை தடம் புதிய வழித்தடம் ஆகும். புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**35—**

## பேருந்து வசதி

**வினா எண் 6393—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 பிப்ரவரி 1]

உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து, உத்தப்பநாயக்கனூர், கல்லூத்து வழியாக விக்கிரமங்கலம் செல்லும் பேருந்தை மேலப்பெருமாள்பட்டியில் இருந்து சக்கரப்பநாயக்கனூர், அய்யம்பட்டி, கோழிப்பட்டிக்குச் சென்றுவர அரசு அனுமதி அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி—விக்கிரமங்கலம் சாலையில் உள்ள மேலப்பெருமாள்பட்டி கிராமத்திலிருந்து 0.7 கி.மீ. தூரத்தில் சக்கரப்பநாயக்கனூரும் அங்கிருந்து 0.6 கி.மீ. தூரத்தில் அய்யம்பட்டி கிராமமும் அமைந்துள்ளன. மேலப்பெருமாள்பட்டியிலிருந்து இதே சாலையில் 0.5 கி.மீ.-ல் பிரிந்து 12 கி.மீ. தூரத்தில் கோழிப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. மேலப்பெருமாள்பட்டியில் மேற்படி கிராமங்களுக்குச் செல்லும் அணுகுசாலை திருப்பம் மிகவும் குறுகலாக, பேருந்து திருப்புவதற்கு இயலாதவாறு உள்ளது. மேலும் கோழிப்பட்டி கிராமத்தில் பேருந்து ஊருக்குள் சென்று திரும்ப போதுமான இடவசதியில்லை. எனவே, தற்போதுள்ள நிலையில் உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து உத்தப்பநாயக்கனூர், கல்லூத்து வழியாக விக்கிரமங்கலம் செல்லும் பேருந்தை மேலப்பெருமாள்பட்டியில் இருந்து சக்கரப்பநாயக்கனூர், அய்யம்பட்டி, கோழிப்பட்டி ஆகிய கிராமங்களைத் தொட்டுச் செல்லுமாறு இயக்க இயலாது.

**36—**

## புதிய பேருந்து வழித்தடம்

**வினா எண் 6566—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரையிலிருந்து சோமாத்தூர், சின்னக்கண்ணனூர், சீனிக்காந்தல், மானாச்சாலை வழியாக வீரசோழன் வரை புதிய பேருந்து வழித்தடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மானாமதுரையிலிருந்து பார்த்திபனூர் வழியாக வீரசோழன் வரை 18 நடைகள் அரசு மற்றும் தனியார் பேருந்துகளால் இயக்கப்பட்டு

[2008 பிப்ரவரி 1

வருகின்றன. மானாமதுரை, சோமாத்தூர் வழியாக சின்னக்கண்ணனூர் வரை 10 நடைகள் அரசுப் பேருந்துகள்மூலம் இயக்கப்பட்டு வருகின்றன. சின்னக்கண்ணனூர் முதல் சீனிக்கரந்தல் விலக்கு வரையிலான 2.5 கி.மீ. சாலை பேருந்து இயக்கத் தகுதியற்று மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே, சாலை செப்பனிடப்பட்ட பிறகு தேவையின் அடிப்படையில் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**37—**

## நகரப் பேருந்து

**வினா எண் 9558—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து கால்பிரபு, மேலமேல்குடி, தீர்த்தான்பேட்டை, கொம்புக்காரனேந்தல், கட்டிக்குளம், விளத்தூர் வரை நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என்.நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை விளத்தூர்—கட்டிக்குளம், கொம்புக்காரனேந்தல், தீர்த்தான்பேட்டை, கால்பிரபு வழியாக அரசுப் பேருந்து ஒரு நடையும், மானாமதுரை—விளத்தூர் முத்தனேந்தல், கொம்புக்காரனேந்தல் மற்றும் கட்டிக்குளம் வழியாக ஒரு அரசுப் பேருந்து இரண்டு நடைகளும், மானாமதுரை, விளத்தூர், கால்பிரபு, மேலமேல்குடி, தீர்த்தான்பேட்டை, கொம்புக்காரனேந்தல், கட்டிக்குளம் வழியாக குவளைவேலிக்கு தனியார் சிற்றுந்து எட்டு நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

**38—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 10260—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 பிப்ரவரி 1]

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கிடையேயும் அரசுப் பேருந்துகள் மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், பள்ளி மாணவர்கள் பயனடையும் வகையில் பள்ளிகளுக்கு சென்று திரும்பும் நேரங்களில் இப்பேருந்துகள் இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு நகரில் உள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலம் பணிமனையில் இருந்து தற்பொழுது 12 நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவை அனைத்தும் செய்யாறைச் சுற்றி உள்ள கிராமங்களின் போக்குவரத்துத் தேவையை நன்கு பூர்த்தி செய்கின்றன. செய்யாறு பணிமனையிலிருந்து இயக்கப்பட்ட எந்த நகரப் பேருந்தும் நிறுத்தப்படவில்லை. மேலே குறிப்பிட்ட அனைத்து 12 நகரப் பேருந்துகளும் கிராமங்களிலிருந்து செய்யாறு வந்து பயிலும் மாணவ, மாணவியரின் தேவைக்கேற்ப காலை, மாலை வேளைகளில் இயக்கப்படுகின்றன.

**39—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 13417—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பணிமனையிலிருந்து, 86H தடம் கொண்ட பேருந்து மார்த்தாண்டம், ஞாறம்விளை, அருமனை, திருவரம்பு வழி குலசேகரம் இயக்கப்பட்டு, தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பேருந்தை மீண்டும் மேற்படி தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 பிப்ரவரி 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டத்திலிருந்து ஞாறம்விளை, அருமனை, திருவரம்பு வழியாக குலசேகரத்திற்கு இயக்கப்பட்ட தடம் எண் 86H பேருந்து 40 சதவிகிதத்திற்கும் குறைவான பயணி அடர்வுடன் இயக்கப்பட்டதால் பல வருடங்களுக்கு முன்னரே நிறுத்தப்பட்டது. தற்போது தடம் எண் 86A மூலம் மார்த்தாண்டத்திலிருந்து ஞாறம்விளை வழியாக அருமனைக்கு தினசரி 6 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மாத்தாண்டத்திலிருந்து ஆற்றூர், திருவட்டார் வழியாக குலசேகரத்திற்கு 74 தனி நடைகளில் பேருந்து வசதி உள்ளது. மேலும், தடம் எண் 89A-ன்மூலம் மார்த்தாண்டம்—கடையாலுமூடு, தடம் எண் 89B மார்த்தாண்டம்—பெருஞ்சானி, தடம் எண் 89H மார்த்தாண்டம்—அஞ்சுகண்டறை தடம் எண் 89M மார்த்தாண்டம்—குற்றியார் ஆகிய வழித்தடங்களில் குலசேகரம் வழியாக 68 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இது தவிர 19-9-2006 முதல் தடம் எண் 86H/89 வழித்தடங்கள் வாயிலாக மார்த்தாண்டத்திலிருந்து குலசேகரத்திற்கு கூடுதலாக 13 நடைகள் இயக்கப்படுகின்றன.

**40—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 18275—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரம் பேரூருக்கு விழுப்புரத்திலிருந்து பேருந்து தடம் எண் 216-ஐ இயக்கவும், 115.சி பேருந்தை திருவண்ணாமலையிலிருந்து பழவந்தாங்கல், பொன்னாங்குப்பம், அனந்தபுரம் வழியாக மீண்டும் இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விழுப்புரம்—வேலூர் இடையே தடம் எண் 216-ன்மூலம் இயக்கப்படும் பேருந்து சூரப்பட்டு கூட்டுசாலை, செஞ்சி, சேத்துப்பட்டு,



2008 பிப்ரவரி 1]

ஆரணி வழியாக இயக்கப்பட்டு வருகிறது. இதன் தட நீளம் 133 கி.மீ. ஆகும். விழுப்புரம்—வேலூர் வழி சூரப்பட்டு, அன்னியூர், அனந்தபுரம், செஞ்சி, சேத்பட்டு, ஆரணி தட நீளம் 143 கி.மீ. ஆகும். அனந்தபுரத்திற்கு விழுப்புரத்திலிருந்து நகரத் தடம் எண் 2பிஏ, டி8ஏ, டி8ஏ/எ, டி8டி, டி17, டி27, டி30 ஆகிய 7 நகரப் பேருந்துகள்மூலம் 54 சென்று வரும் நடைகளில் பேருந்து வசதி உள்ளது. அனந்தபுரத்துக்கு செஞ்சியிலிருந்து நகரத் தடம் டி4, டி8, டி18 மற்றும் புறநகரத் தடங்கள் 122 எஸ், 280 ஆகிய 5 பேருந்துகள்மூலம் 28 சென்று வரும் நடைகளில் பேருந்து வசதி உள்ளது. விழுப்புரம் மற்றும் செஞ்சி பேருந்து நிலையங்களிலிருந்து அனந்தபுரத்திற்கு பகுதிவாரியாகப் போதுமான பேருந்து வசதி உள்ளது. தடம் எண் 216–ல் இயக்கப்படும் பேருந்தினை (விழுப்புரம்—வேலூர்) அன்னியூர் அனந்தபுரம் வழியாக இயக்கினால் 10 கி.மீ. தூரம் அதிகப்படுவதாலும், இதனால் பேருந்துக் கட்டணம் (Bus Fare) மற்றும் பேருந்து நிலைகள் (Stage) அதிகரிக்க வேண்டி இருப்பதாலும், சுற்று வழி என்பதால் பயணிகள் இப்பேருந்தில் பயணிக்க விரும்ப மாட்டார்கள். எனவே, தடம் எண் 216–ல் இயக்கப்படும் பேருந்தினை அனந்தபுரம் வழியாக இயக்கிடத் திட்டம் இல்லை. மேலும், இப்பேருந்தினை அனந்தபுரம் மற்றும் அனந்தபுரத்தைச் சுற்றியுள்ள கிராம மக்கள் சுலபமாக விழுப்புரம் அல்லது செஞ்சி சென்றடைந்து இதனைப் பயன்படுத்தலாம். திருவண்ணாமலை, விழுப்புரம் வழி வேட்டவலம், சூரப்பட்டு, தட நீளம் 64 கி.மீ. திருவண்ணாமலை—விழுப்புரம் வழி வேட்டவலம், மழவந்தாங்கல், துத்திப்பட்டு, பொன்னங்குப்பம், அனந்தபுரம், சூரப்பட்டு தட நீளம் 64 கி.மீ.-ஐ விட அதிகமாகும். நேரடிப் பயணிகள் இதை விரும்பமாட்டார்கள்.

**41—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 32572—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, பரதன்தாங்கலிலிருந்து திருவண்ணாமலை வரை இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தினை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2008 பிப்ரவரி 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பரதன்தாங்கல்—திருவண்ணாமலை தடத்தில் 78 அரசுப் பேருந்துகள் தினசரி 250 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன மற்றும் 17 தனியார் பேருந்துகள் 70 நடைகள் இயக்கப்படுகின்றன. திருவண்ணாமலையிலிருந்து நல்லான்பிள்ளைபெற்றாள் (வழி) கீழ்பென்னாத்தூர் ஒரு நகரப் பேருந்து தினசரி 12 நடைகளும், திருவண்ணாமலை—அவலூர்பேட்டை (வழி) கீழ்பென்னாத்தூர் ஒரு நகரப் பேருந்து தினசரி 12 நடைகளும், தடம் டி16 திருவண்ணாமலை—மாதாபூண்டி தினசரி 4 நடைகளும், தடம் டி18 திருவண்ணாமலை—கீழ்பென்னாத்தூர் தினசரி 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றது. ஏற்கெனவே இத்தடத்தில் போதிய நகரப் பேருந்துகள் இயக்கப்படுவதாலும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் 5 நிமிட இடைவெளியில் இயக்கப்படுவதாலும் மீண்டும் திருவண்ணாமலை—பரதன்தாங்கல் எனத்தடம் இயக்க வேண்டிய அவசிய நிலை இல்லை.

**42—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 34060—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சி ஆரணியிலிருந்து களம்பூர் வழியாக படவேட்டுக்கு இயக்கப்படும் தடம் எண் 4 பேருந்தைக் கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண் ஏ4 ஆரணி—படவேடு (வழி) களம்பூர் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தில் பயணிகள் அடர்வு 47% தான் உள்ளது. பயணிகள் அடர்வு குறைவாக உள்ளதால் கூடுதல் பேருந்துகள் இயக்க சாத்தியமில்லை.



2008 பிப்ரவரி 1]

**43—**

## மாணவர் விடுதி

**வினா எண் 18549—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிகளில் கூடுதல் இடங்கள் ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதிகளும், 3 பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகளும் இயங்கி வருகின்றன. அவற்றில் பள்ளி விடுதிகளில் 150 இடங்களும், கல்லூரி விடுதிகளில் 155 இடங்களும் ஒப்பளிக்கப்பட்டதுடன் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் அதிகாரத்தின்கீழ் பள்ளி விடுதிகளில் 5 இடங்களும் கல்லூரி விடுதிகளில் 5 இடங்களும் கூடுதலாக நடப்பாண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**44—**

## திருப்பணி

**வினா எண் 31816—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, வீரசோழபுரம் கிராமம், அருள்மிகு ஈஸ்வான் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 பிப்ரவரி 1

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, வீரசோழபுரம் கிராமத்தில் அருள்மிகு ஈஸ்வரன் கோயில் என்று திருக்கோயில் ஏதும் இல்லை. இக்கிராமத்தில் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் உள்ளது. உபயதாரர்கள்மூலம் இத்திருக்கோயில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணி வேலைகள் முடிந்தவுடன் விரைவில் குடமுழுக்கு விழா நடத்தப்படும்.

**45—**

## காடு வளர்ப்பு

**வினா எண் 18518—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பாலமலை, கத்திரிமலைப் பகுதியில் காடு வளர்ப்புத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* I. சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பாலமலை கத்திரிமலைப் பகுதியில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காப்புக்காடுகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் கிராம முன்னேற்றப் பணிகளும் செயல்படுத்தப்படுகின்றன.

II. கடந்த 1997-1998 முதல் 2006-2007 ஆம் ஆண்டுகளில் பாலமலை காப்புக்காடு மற்றும் அதன் அருகில் உள்ள 9 திட்ட கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, 2360 எக்டேர் பரப்பளவில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை I மற்றும் II-லும் 50 எக்டேர் பரப்பளவில் தேசிய காடு வளர்ப்புத் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.



2008 பிப்ரவரி 1]

III. 2007-2008 ஆம் ஆண்டில் பாலமலை காப்புக்காட்டில் காமநாயக்கன்பட்டி என்ற கிராமத்தில் 250 எக்டேர் பரப்பில் செடி நடவுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

IV. அதேபோன்று ஈரோடு வன மண்டலத்தைச் சார்ந்த (வட பர்கூர் காப்புக்காடு) கத்திரிமலைப் பகுதியின் அருகில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை I-ன்கீழ் கடந்த 2001-2002 முதல் 2004-2005 வரை இக்காப்புக்காட்டினை ஒட்டிய 5 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு 1250 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளும், கிராம வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**46—**

## மரக்கன்று நடுதல்

**வினா எண் 33478—திரு. வை. காவேரி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், கொண்டயம்பாளையம் அணை ஏரியில் மரக்கன்று நட அரசு ஆவன செய்யுமா?"

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* எடப்பாடி தொகுதியிலுள்ள கொண்டயம்பாளையம் அணை ஏரியில் மரக்கன்றுகள் நடுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**47—**

## நெடுஞ்சாலைக் கோட்டம்

**வினா எண் 13496—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்திற்கெனத் தனியாக நெடுஞ்சாலைக் கோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

[2008 பிப்ரவரி 1

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்திற்கு தனிக் கோட்டம் அமைக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து இவ்வரசு ஆணையின் பேரில் 1-5-2007 முதல் நிரந்தர நெடுஞ்சாலைக் கோட்டம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**48—**

**சத்துணவு மையம்**

**வினா எண் 8648—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதி, திருப்போரூரிலுள்ள பட வேட்டம்மன் கோயில் தெருவில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு சத்துணவு மையம் அமைத்துக் கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், திருப்போரூர் தொகுதி, திருப்போரூரில் உள்ள படவேட்டம்மன் கோயில் தெருவிலுள்ள தொடக்கப் பள்ளிக்கு 1-11-2007 முதல் புதிய சத்துணவு மையம் துவங்கிட உரிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**49—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 14451—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள அப்பர்பாரளையில் உள்ள சத்துணவு கூடத்தையும் வகுப்பறைகளையும் யானைகள் இடித்துவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 பிப்ரவரி 1]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள அப்பர்பாரளையில் உள்ள பள்ளி வகுப்பறைக் கட்டடம் தனியார் தோட்ட நிறுவனமான பாரி அக்ரோவிற்குச் சொந்தமானதாகும். அதே இடத்தில் அருகில் மாணவ, மாணவியரின் நலன் கருதி நகராட்சிமூலம் சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கப்பட்டது.

(ஆ) மேலும், யானைகளால் இடிக்கப்பட்ட வகுப்பறைகள் மற்றும் சத்துணவுக் கூடங்களில் உள்ள பழுதுகள் தனியார் நிறுவனமான பாரி அக்ரோ நிறுவனத்தின்மூலம் நல்ல முறையில் பழுது நீக்கம் செய்து கொடுக்கப்பட்டு மையம் தொய்வின்றி இயங்கி வருகிறது.

**50—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 37586—திரு கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளி சத்துணவுக் கூடத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியில் கடந்த 2005-2006 ஆம் ஆண்டு ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் சத்துணவுக் கூடம் கட்டப்பட்டு நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2008 பிப்ரவரி 1

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு வேறு issue எதுவும் எடுப்பதாக இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதையுமே எடுப்பதில்லை என்று இன்றைக்கு முடிவு எடுத்தாகிவிட்டது. விடுங்கள். (குறுக்கீடுகள்) 11 Bills இருக்கின்றன. இன்றைக்கு வேறு எதையும் எடுப்பதாக இல்லை.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினெட்டாவது முதல் இருபத்து ஒன்றாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2008 பிப்ரவரி 1] [பேராசிரியர் க. அன்பழகன்]

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடியை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

[2008 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-வது பேரவையின் 7-வது கூட்டத் தொடரில் 2008 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பை அளித்த தங்களுக்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது, வரக்கூடிய நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதற்கேற்ப அரசினுடைய கொள்கை முடிவுகள், இந்த ஆண்டு நிறைவேற்ற இருக்கக்கூடிய திட்டங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றைப் பற்றி எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு முன்னோட்டமான உரைதான் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரையில் வரவேற்கக்கூடிய நல்ல அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. வரவேற்கக்கூடிய அம்சங்களை வரவேற்றுப் பாராட்டியும், அதேநேரத்தில் அரசு இதைச் செய்ய வேண்டும் என்று



2008 பிப்ரவரி 1] [திரு. ஜி.கே. மணி]

வலியுறுத்தி, சில நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டக்கூடிய வகையிலேயும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இங்கே நான் கருத்துகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

என்கிறார் வள்ளுவர். அதாவது நோயின்மை, செல்வம், விளைவு, மகிழ்ச்சி, காவல் எனும் ஐந்தினையும் பெற்றிருத்தல் நாட்டிற்கு அழகு என்று அய்யன் வள்ளுவர் கூறுகிறார். ஆகவே, இந்த ஐந்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு நல்ல தமிழகமாக இம்மாநிலம் வளர வேண்டும், அது கலைஞர் ஆட்சியிலே மலர வேண்டும் என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே வரவேற்றுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-35

அதே வேளையில்,

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

அதாவது நட்பு செய்தல், ஒருவரோடொருவர் சிரித்து மகிழ்வதற்கன்று, அவரிடத்தில் சில தீய செய்கைகளைக் கண்டபோது, முற்பட்டுச் சென்று கண்டித்து அறிவுரை சொல்லுவதற்கே ஆகும் என்று வள்ளுவப் பெருந்தகை அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலேதான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இங்கே சமூகச் சீரழிவுகள், தமிழ் வளர்ச்சிக்கான தடைகள், மேலும் தேவைப்படும் வேளாண் வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குதல், இளைஞர்கள் சீரழிவு என்று பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசுக்கு கோரிக்கை வைத்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சிலவற்றை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த உலகத்தினுடைய மூத்த குடியாக இருக்கிற தமிழனுடைய தாய்மொழி சிறப்பிக்கப்பட வேண்டும், ஓங்கி வளர வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிற வேளையில், தமிழர்களுக்கு சிறப்பு சேர்க்கிற வகையில், உலகெங்கும் வாழக்கூடிய தமிழன், பாராட்டுகிற வகையில் நம்முடைய மறைமலை அடிகள் முதலாக, தமிழ் அறிஞர்கள் எல்லாம் தொன்றுதொட்டு வைத்து வந்த கோரிக்கைப்படி தைத் திங்கள் முதல்

[திரு. ஜி.கே. மணி] [2008 பிப்ரவரி 1

நாளை, தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாளாக அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது; நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டுக்குரியவர். அது எந்த வகையிலே என்று சொன்னால், இது தமிழ்நாட்டுத் தமிழர்கள், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் பாராட்டக்கூடிய ஒன்று, இதனைத் தமிழன் மனம் திறந்து பாராட்ட வேண்டும். யாராக இருந்தாலும், அரசியல் பாகுபாடுகளை மறந்து தமிழர்கள் அனைவரும் பாராட்ட வேண்டும். இது தமிழன் வரலாற்றில், உலக வரலாற்றில் நிலைத்திருக்கக்கூடிய, மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என்ற காரணத்தினாலேதான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ இங்கு அவையிலே மட்டும் பாராட்டவில்லை. சில தினங்களுக்கு முன்பு எங்கள் கட்சியினுடைய தலைமைச் செயற்குழு கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திலே முதலமைச்சர் கலைஞர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டித் தீர்மானங்கள் வடித்தோம். அங்கே பேசிய நேரத்திலேகூட எங்களுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் பாராட்டி இதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தவகையிலே, இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் வளர்ச்சிக்காக, செம்மொழி தமிழ் மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதையும் நாங்கள் வரவேற்றுப் பாராட்டுகிறோம். அதைப்போல, நடுவண் அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழ் அரங்கேற வேண்டும் என்று முயற்சிப்பதாக ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் மனதாரப் பாராட்டுகிறோம்.

நேற்றைய முன்தினம் இங்கே தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டோம். உறுதிமொழி எடுக்கிற நேரத்தில் அணி வகுப்பு மரியாதை செய்தவர், அணி வகுப்பு முடிவில், "அணி வகுப்பு மரியாதையை நிறைவு செய்ய அனுமதி கோருகிறேன், அய்யா" என்று முதல்வரிடத்திலே வேண்டியது தமிழுக்குப் பெருமை சேர்த்த நிகழ்வாக இருந்தது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படித் தமிழுக்கு பெருமை சேர்க்கிற நிகழ்வுகளை நம்முடைய அரசு, முத்தமிழறிஞர் கலைஞர் அரசு, செய்கிற வேளையில் இங்கே இன்னொன்றையும் வருத்தத்தோடு சுட்டிக்காட்டுகிறேன். நம்முடைய தமிழக அரசினுடைய அரசாணைகள், விளம்பரங்கள், அறிவிக்கைகள், நடவடிக்கைகள் ஆங்கிலத்திலே வந்து கொண்டிருக்கின்றன.



2008 பிப்ரவரி 1] [திரு. ஜி.கே. மணி]

நேற்றைய முன்தினம்கூட, செய்தித்தாள்களிலே அரசு விளம்பரம் ஆங்கிலத்திலே வந்தது. இதையெல்லாம் செழுமைப்படுத்த வேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் மெட்ரோ தொடர் வண்டித் திட்டம், சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்தி, தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு என்று பல்வேறு நல்ல அம்சங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அதைப்போல அருந்ததியர்களுக்கு ஒதுக்கீடு, ஆறுகள், நீர்நிலைகள் மாசுபடாமல் பொது சுத்திகரிப்பு நிலையம் உருவாக்குவது, தமிழகத்தில் மத்திய பல்கலைக்கழகம் உருவாக்குவது போன்ற பல்வேறு நல்ல அம்சங்கள் இடம் பெற்றிருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்றுப் பாராட்டுகிறோம். இப்படிப் பாராட்டுகிற வேளையில், சமூகச் சீரழிவுகளைத் தடுத்தல், மொழி வளர்ச்சி, அனைவருக்கும் உரியவாறு சமூக நீதி கிடைத்தல், எல்லோருக்கும், ஒரே தரமான சீரான கட்டாயக் கல்வி கிடைத்திடல், குடியரசுத் தலைவருக்குக் கிடைத்திடும் மருத்துவ வசதி கிராமப்புறத்தில் வாழக்கூடிய கூலித் தொழிலாளி சுப்பனுக்கும், குப்பனுக்கும் கிடைத்திடல் வேண்டும். வேளாண்மை வளர்ந்திட, நெசவுத் தொழில் செழித்திட, மீனவர்கள் காக்கப்பட, இளைஞர்கள் சக்தி வீணாகாமல் முறைப்படுத்திட, மகளிர் மேம்பட நடவடிக்கைகள், தொழில் வளர்ச்சி, தொழிலாளர் பாதுகாப்பு, அரசு ஊழியர்கள் நலன், ஆசிரியர்கள் நலன் எனப் பல்வேறு நிலைகள் குறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அரசுக்கு வேண்டுகோள் வைத்திருக்கிறோம்.

*முற்பகல் 9-40*

அந்த வகையிலேதான், இங்கே அரசின் சார்பிலே சரியான, தரமான கல்வி அளித்திட சமச்சீர் கல்வி வேண்டும் என்று கேட்டோம். கோரிக்கை, வேண்டுகோள் வைத்தோம். வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கலைஞர் அவர்கள், சமச்சீர் கல்விக்காக திரு. முத்துக்குமரன் குழுவை நியமித்தார்கள். குழுவினுடைய அறிக்கை வேண்டுமென்று கேட்டோம். அறிக்கையையும் அவையிலே வைத்தார்கள். வரவேற்றோம்; பாராட்டினோம். அதேவேளையில், எல்லாப் பாடப் பிரிவுகளுக்கும் 500 மதிப்பெண்கள் என்று சொன்னீர்கள். இது சமச்சீர் கல்வியினுடைய முதற்படி. பாராட்டுக்குரியது; அதையும் வரவேற்கிறோம். ஆனால், மேலும் இப்பொழுது ஒரு ஆலோசனைக் குழு போட்டிருக்கிறீர்கள். இந்த ஆலோசனைக் குழு, எதை எடுத்துக்கொள்ள வேண்டியது, எதை நீக்க

வேண்டியது என்று ஆராய்ந்து, இங்கே நடைமுறைப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதற்கு எவ்வளவு காலம் ஆகும்? நம்முடைய நடுவண் அரசானாலும் சரி, அல்லது மாநில அரசானாலும்சரி, பல்வேறு குழுக்களைப் போட்டிருக்கின்றன. கோத்தாரி குழு, ஆச்சாரியார் இராமமூர்த்தி குழு என்று பல்வேறு குழுக்கள் போட்டும்கூட நடைமுறைக்கு வரவில்லை. இந்த முத்துக்குமரன் குழு பரிந்துரையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சொன்னால், தமிழ்நாட்டிலே சமச்சீர் கல்விக்கும், தரமான கல்விக்கும் வாய்ப்பில்லாமல் போய்விடும். ஆகவே, சமச்சீர் கல்வி முறையை எப்பொழுது நீங்கள் நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள் என்பதை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே தனியார் கல்வி நிறுவனங்களிலே கட்டாய நன்கொடை, கல்விக் கட்டணம் கடுமையாக இருக்கிறது. இதை நெறிப்படுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். ஆனாலும்கூட, இப்பொழுதும் சொல்கிறேன், 33 கல்வி நிறுவனங்களிலே முறைகேடுகள் என்று சொன்னீர்கள். அவற்றினுடைய நடவடிக்கை எந்த அளவிலே இருக்கிறது? அவைமீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். 33 கல்லூரிகள் மட்டுமல்ல, இன்னும் ஏராளமான கல்லூரிகளிலே முறைகேடுகள் நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நெறிப்படுத்த வேண்டும். அடுத்த கல்வியாண்டிலே எந்த முறைகேடும் இல்லாத அளவிற்கு இவற்றைச் சீர்படுத்துவதற்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்லூரிகளிலே இப்படிச் செய்தால் மட்டும் போதாது. பள்ளிகளிலே, மெட்ரிக் பள்ளிகளிலே முதல் வகுப்பிலே, மழலையர் பள்ளி என்று சொல்லக்கூடிய வகுப்பிலேயிருந்து அதாவது L.K.G., U.K.G.-யிலிருந்து கட்டணம் ரூபாய் ஐம்பதாயிரம், ஒரு இலட்சம் என்று சொல்கிறார்கள். அந்த நிலை கூடாது. ஆகவே, அப்படி பள்ளிக்கூடங்களிலேயும் இந்தக் கட்டாய நன்கொடையை, அதிகக் கல்விக் கட்டண வசூலை நெறிப்படுத்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டினுடைய முதல் நிலைத் தொழிலாக இருக்கிற வேளாண் தொழில் சீரழிந்துகொண்டிருக்கிறது. விவசாயிகள், வாழ்வதா நாங்கள் எல்லாம் சாவதா என்று கேட்டுக்கொண்டிருக்கிற வேளையில், விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்து, அவர்கள் வயிற்றிலே பால் வார்த்தீர்கள்; வரவேற்கிறோம். ஆனாலும்கூட, விவசாயிகளுடைய





பிரச்சினைகள் இன்னும் ஏராளம் இருக்கின்றன. விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடுவண் அரசிலே தொடர்வண்டித் துறைக்கு ஒரு நிதிநிலை அறிக்கை இருப்பதைப்போல, நம்முடைய தமிழக அரசு வேளாண்மைக்காக ஒரு தனி நிதிநிலை அறிக்கை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இங்கேகூட, விவசாயிகள் கடனைத் தள்ளுபடி செய்தீர்கள். எல்லோரும் பாராட்டினோம், விவசாயிகள் பாராட்டினார்கள். ஆனால், தள்ளுபடி செய்த கடனுக்கு இன்றைய வரையிலே தமிழகத்திலே பரவலாக சான்றுகள் வழங்கப்படவில்லை. உதாரணத்திற்கு வேலூர் மாவட்டத்திலே கிரிசமுத்திரம் என்ற இடத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி உள்ளது. அங்கே 2,623 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவேயில்லை. ஆனால், அங்கேயிருந்து அந்த அதிகாரி அரசுக்கும், மேலதிகாரிகளுக்கும் பதில் அனுப்பி, "நாங்கள் தள்ளுபடி சான்று வழங்கிவிட்டோம்" என்ற ஒரு தவறான அறிக்கையை கொடுத்துக்கொண்டு இருக்கிறார். அதேபோல, தருமபுரி மாவட்டத்திலேகூட; எட்டிமரத்துப்பட்டி, கொளகத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே இன்னும் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. ஆகவே, இதையெல்லாம் விவசாயிகள் அறிந்துகொள்வதற்கு, இதையெல்லாம் திறந்தவெளியாக அறிந்துகொள்வதற்கு கடன் தள்ளுபடி வழங்கப்பட்ட விவசாயிகளுடைய பெயர்ப் பட்டியலை ஒவ்வொரு வங்கியிலேயும் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் இன்று விவசாயிகள் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான சான்றிதழ், வேலூர் மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும் இரண்டு தொடக்க வேளாண்மை வங்கிகளில் தரப்படவில்லை என்று சொன்னார். இதுவரை அரசுக்கு அப்படிப்பட்ட ஒரு புகாரே வரவில்லை. அவருக்கு வந்திருக்குமானால், அதை இந்த அரசுக்குத் தெரிவித்திருந்தால், நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்போம். ஆனால், எங்களுக்கு கிடைத்திருக்கின்ற தகவல், நாங்கள் அறிந்தவரை எல்லா கூட்டுறவு வங்கிகளிலும் நேரடியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய கடன் தள்ளுபடி செய்ததற்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2008 பிப்ரவரி 1

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். எந்தெந்த வங்கியில் யார், எவ்வளவு பேர் என்பதை பட்டியலிட்டு கையிலே வைத்திருக்கிறேன். உங்களுக்குக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் தெரிவிக்கிற அந்தக் குற்றச்சாட்டினை அரசாங்கத்திற்கு தனிப்பட்ட முறையில் யாராவது தெரிவித்திருந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். அரசாங்கத்திற்கே தெரியாத ஒரு நிலையில், சட்டமன்றத்திலே குற்றச்சாட்டாகச் சொல்வது என்பது அவ்வளவு நியாயம் அல்ல.

*முற்பகல் 9-45*

அந்தப் பிரச்சினையை திரு. மணி அவர்களேகூட எங்களுக்கு எழுதியிருந்தால், கடிதம் அனுப்பியிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். அது தனிப்பட்ட பிரச்சினையே தவிர, ஒரு இடத்தில் நடைபெற்ற குற்றமே தவிர, குறையாக இருக்கலாமே தவிர அரசாங்கத்தினுடைய நிர்வாக முறையிலே உள்ள குறைபாடு அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குற்றச்சாட்டுக்காக சொல்வது அல்ல. தமிழ்நாட்டிலே நடக்கக்கூடிய பிரச்சினைகளை, பாதிப்புகளை இங்கே சொல்வதில் தவறு இல்லை. குற்றச்சாட்டாக எடுத்துக்கொள்ளக்கூடாது. தகவலுக்காகச் சொல்கிறோம். இன்னுங்கூட ஒருபடி மேலே சென்று சொல்கிறேன், இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே நடக்கிற மோசடிகள் சொல்லி மாளாது, ஏராளமாக இருக்கின்றன. அங்கேயிருக்கக்கூடிய அந்தச் செயலர்கள் எல்லாம் குட்டி ராசாக்களைப்போல செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு மாறுதலே கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 பிப்ரவரி 1]

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? எந்தெந்த வங்கிகள், யார் சம்பந்தப்பட்டவர்கள், என்ன செய்தார்கள் என்ற விவரங்களைத் தெரிவித்தால் உடனடி நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம் கிரிசமுத்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி; தருமபுரி மாவட்டம், எட்டிமரத்துப்பட்டி, கொளகத்தூர் வங்கி, இப்படிப் பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், இப்படிப் பல்வேறு வங்கிகள் இருக்கின்றன. நான் அந்த விவரங்களைக் கொடுக்கிறேன். (குறுக்கீடு) கொடுக்கிறேன். கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** என்ன குளறுபடி, என்ன தவறு நடந்திருக்கிறது என்பதை மட்டும் விளக்கிச் சொன்னால் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால், தனிப்பட்ட முறையிலே எழுதிக் கொடுத்தால், அதற்காக சில பேரை வைத்திருக்கிறேன். நாளைக்கே அவர்கள்போய் விசாரித்து அதன்மீது முடிவு எடுத்து, தங்களுக்கும் அதைப்பற்றி நான் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இன்னும் ஆழமாகச் சொல்கிறேன். நிறைய கூட்டுறவு வங்கிகளினுடைய செயலாளர்கள், விவசாயிகளே இல்லாமல் அவர்களாகவே விவசாயிகள் பெயரிலே கடனை எடுத்துக்கொண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிற உண்மை பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. இது நிறைய உறுப்பினர்களுக்குத் தெரியும். கொஞ்சநஞ்சமல்ல. ஆகவே, இதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த முறைகேடு கொஞ்சநஞ்சமல்ல; திரு. ஞானசேகரனைக் கேளுங்கள். நிறைய பேருக்குத் தெரியும். உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுப்பான பேரவை உறுப்பினர் அவர்கள், விவசாயிகளின் பெயரால் அந்த வங்கிகளில் பணியாற்றக்கூடிய செயலாளர்களே கடனைப் பல பேர் பெயரிலே எடுத்திருக்கிறார்கள் என்று தெரிந்திருந்தால் அதை உடனடியாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்குப் புகாராகவே எழுதிக் கொடுத்திருக்கலாம். ஆனால், சட்டப்பேரவையிலே வந்து இப்படிப் பொதுவாகப் பேசிவிட்டு அதை ஒரு குற்றச்சாட்டாக்கிவிடலாம் என்று கருதக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ஞானசேகரன் உட்காருங்கள். No, உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு அல்ல. திருவண்ணாமலை மாவட்டத்திலே போளூர் வட்டத்திலே நடந்திருக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டத்திலே புலியூர் கூட்டுறவு வங்கியில் நடந்திருக்கிறது. இதற்குக் கடிதம் மூலமாகக் கொடுத்தாகி விட்டது. கொடுத்தும் நடவடிக்கை இல்லை. ஆகவே, தான் சொல்கிறோம். இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கடனைத் தள்ளுபடி செய்து இருக்கிறது. கடன் கொடுத்தது இந்த ஆட்சியில் அல்ல. தள்ளுபடி செய்த கடன் போன ஆட்சியில் கொடுக்கப்பட்ட கடன். அந்தத் தவறுகள் அதுமாதிரி நடந்திருக்கின்றன என்று சொன்னால், உரிய முறையிலே அதுபற்றிப் புகார் கொடுங்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சியைப் பற்றி நான் சொல்லவில்லை. அதிகாரிகள் முறைகேடு, வழங்கப்படாமல் இருக்கிற உண்மைச் சம்பவங்களைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, பொத்தாம்பொதுவாகச் சொல்லாதீர்கள். ஏதாவது குறிப்பிட்டு அது எந்த வங்கி என்பதை மட்டும் சொல்லுங்கள். புகார் இருந்தால் எழுத்து மூலமாகக் கொடுங்கள் என்று அமைச்சரே சொல்லியிருக்கிறார்.



2008 பிப்ரவரி 1]

**திரு. ஜி.கே. மணி:** அதைத்தான் சொல்லிவிட்டேனே! திருவண்ணாமலை மாவட்டம், போளூர், காஞ்சிபுரம் மாவட்டம் புலியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி—இதையெல்லாம் பெயர் சொல்லித்தானே சொல்கிறேன். என்னிடத்திலே பட்டியல் இருக்கிறது. பட்டியலோடு தருகிறேன். அடுத்து ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கடந்த ஆட்சியில் நடந்ததைப் பற்றிச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். எந்த ஆட்சியில் அந்தத் தவறு நடந்திருந்தாலும் அதைச் சுட்டிக்காட்டுவதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. ஆகவே, எந்த ஆட்சியிலே அந்தத் தவறுகள் இருந்தாலும் அந்தத் தவறைக் களைவதற்கு எல்லோரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. மணி பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், nothing doing உட்காருங்கள். நீங்கள் தேவையில்லாமல் எழுந்திருக்காதீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளிலே பரவலாக துணைச் சுகாதார நிலையம், ஆரம்பச் சுகாதார நிலையம், வட்ட மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என எல்லா இடங்களிலும் மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், மருந்தாளுநர்கள் பணியிடங்கள் ஏராளமாக காலியாக இருக்கின்றன. அந்த வகையில் பரவலாக இருக்கிறது என்பதைச் சான்றோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சேலம் மருத்துவமனை, 1990-லே மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது. அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினுடைய பணியிடங்கள் ஏராளமாக காலியாக இருக்கின்றன. என்றைக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தினார்களோ, அதற்குப் பிறகு ஒரு மருத்துவக் கல்லூரிக்குத் தகுதியான மருத்துவர்கள், பணியாளர்கள் இதுவரையிலே நியமிக்கப்படவில்லை. அரசாணை எண் 111, 13-6-2002-லே போட்டது. அதன்படி ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்—தொழில்நுட்ப உதவியாளர்கள் (Technical Assistants)-29. 29 இடங்களும் இன்றுவரை

காலியாக இருக்கின்றன 2002—லே உத்தரவு போட்டது. 29 இடங்களும் இன்று வரை காலி. அலுவலக உதவியாளர்கள்—24. 24 இடங்களும் காலியாக இருக்கின்றன. Radiographer Technician-5. இப்படி மொத்த அமைச்சுப் பணியாளர்கள், அந்தப் பணியாளர்கள் உட்பட . . .

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** இதிலே நடைமுறைச் சிக்கல்களைச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, 144 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அதைப்போல 2007 ஆம் ஆண்டு அரசாணை 101-லே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதிலேயும் காலியிடங்கள் உள்ளன. எவ்வளவு என்று சொன்னால், மருத்துவர்கள்-15. செவிலியர் கண்காணிப்பாளர்-5. செவிலியர்கள்-36. செவிலியர் உதவியாளர்கள்-30. இப்படி, ஏராளமான பணியிடங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் தன்னுடைய புகாரைத் தெரிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். தலைவர் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கிட்டத்தட்ட 3,000 மருத்துவர்களை பணி நியமனம் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் 3,400 செவிலியர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளார்கள். ஒரே நேரத்தில் பணியமர்த்த முடியாது. படிப்படியாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த 31 ஆம் தேதி அன்று, டி.எம்.இ. சைடில் கிட்டத்தட்ட 591 பணியிடங்களுக்கு நேர்காணல் அழைப்பு அனுப்பப்பட்டு, இப்போது அதற்கும் பணியமர்த்தப்படவிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய செயல்கள் எல்லாம் படிப்படியாகத்தான் செய்ய முடியும். ஒரே நேரத்தில் முடியாது. இது சர்வீஸ் கமிஷன் மூலமாகச் செய்யவேண்டிய பணி என்பதாலும், வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமாக பணியமர்த்தப்பட வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு, அவர்கள் அந்த அடிப்படையில் 1:1 என்ற அடிப்படையில் பணியமர்த்த உத்தரவிட்டார்கள். அதில் போதிய மருத்துவர்கள்





கலந்துகொள்ளவில்லை. அதனால் அந்த விதியைத் தளர்த்தி 1:5 என்ற ratio அடிப்படையில் நேர்காணலுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு, இப்போது இங்கே மருத்துவர்களைப் பணி நியமனம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று குறுகிய காலத்தில், 19 மாத ஆட்சிக் காலத்தில் இத்தகைய பணியிடங்களை நிரப்பியது கலைஞர் ஆட்சியினுடைய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், இந்த ஆட்சி பொறுப்பேற்கும்போது, கிட்டத்தட்ட 45 சதவிகித மருத்துவப் பணியிடங்கள் காலியாக இருந்தன. அ.தி.மு.க. ஆட்சியில் மருத்துவர்களே இல்லாத நிலைமை இருந்தது. செவிலியர்கள் இல்லை. இப்போது நாங்கள் நியமித்துக் கொண்டிருக்கிறோம். இது பாராட்டக்கூடிய செயல். இதைப் பாராட்டுங்கள். மனந்திறந்து பாராட்டுங்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் நியமனத்தை நான் பாராட்டுகிறேன். குறை சொல்லவில்லை. ஆனால், 1990-லே மருத்துவக் கல்லூரியாக உயர்த்தப்பட்டது. (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன். மருத்துவக் கல்லூரியிலே இருக்கக்கூடிய காலியிடங்கள், இளநிலை பேராசிரியர்கள்-29. உதவிப் பேராசிரியர்கள்-32. மருத்துவமனை உதவிப் பேராசிரியர்கள்-7. இவ்வளவு பணியிடங்கள் காலியாக இருந்தால், ஒரு மருத்துவக் கல்லூரி எப்படிச் சரியாக இருக்கும்? சரி. அரசாணை எப்பொழுது போட்டது? 13-6-2002 அன்று அரசாணை எண் 111. 2002-லே போட்டு இன்றைக்கு வரைக்கும் காலியா? சரி, அடுத்து அரசாணை எண் 101 - நாள் 12-3-2007. எவ்வளவு நாள் ஆயிற்று? அப்போது அந்த அரசாணை எதற்கு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002 ஆம் ஆண்டு யார் ஆட்சியிலே இருந்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் 1996-லேதான் ஆட்சிக்கு வந்தோம். (குறுக்கீடு) 2006-லே மீண்டும் வந்திருக்கிறோம். வந்தவுடனே, செய்யப்பட்ட நியமனத்தைப்பற்றி மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, யாரோ உத்தரவு போட்டு, அந்தக் காலத்திலிருந்து நியமிக்காததெல்லாம் இந்த அரசு செய்யாததைப்போல பேசுவதுதான் தவறு.

[2008 பிப்ரவரி 11

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இருக்கிற காலியிடத்தை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சின்னய்யா அவர்கள் மத்தியிலே சுகாதாரத் துறை அமைச்சராக இருக்கிறார்கள். இந்த டாக்டர் பற்றாக்குறை என்பது இந்தியா முழுவதும் மிக மோசமாக இருக்கிறது என்பது அவருக்கே தெரியும். இந்த 1½ ஆண்டு காலத்தில், நம்முடைய முதலமைச்சர் கலைஞர் பொறுப்பேற்ற பிறகு, எந்த அளவிற்கு பணி நியமனம் செய்திருக்கிறோம் என்பது உங்களுக்கும் தெரியும். உங்களுடைய சின்னய்யா அவர்களுக்கும் தெரியும். மிக அதிகமான பணத்தை நாம் வாங்கி, இந்தியாவிலேயே அதிகமாகச் செலவழித்த மாநிலம் தமிழ்நாடுதான் என்று உங்களுடைய சின்னய்யா அவர்களே பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1½ ஆண்டு காலத்தில் இந்தியாவிலேயே அதிகமான மருத்துவர்களை நியமித்த மாநிலமும் நம்முடைய மாநிலம்தான். Voluntary retirement கொடுக்காமல், வெளியே போகாமல் தடுத்து, அந்த மருத்துவர்களை பணியமர்த்தல் செய்து இதுவரைக்கும் வெளியே போகாமல் வைத்திருக்கிற அரசாங்கமும் நம்முடைய அரசாங்கம்தான்.

முற்பகல் 9-55

இந்த 1½ ஆண்டு காலத்தில் 13 ஆயிரம் காலியிடப் பணிகளில், ஏறத்தாழ 8 ஆயிரம் பேர் வரையில் நாங்கள் நியமித்திருக்கிறோம். இப்போதுகூட 850 பேர் வரைக்கும் மருத்துவர்களை நியமிப்பதற்கு order வழங்கியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு, இந்த அரசாங்கம் முடிந்த அளவுக்குத் தன்னுடைய பணிகளைச் செய்து வருகிறது. மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலம்தான் சிறப்பாகச் செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் மணிதான் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசுகிறார். அவர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள்.



2008 பிப்ரவரி 11]

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் நியமித்ததைப் பாராட்டித்தான் சொன்னேன். இவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, அடுத்த சப்ஜெக்டுக்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** எங்களுடைய மேட்டூர் தொகுதியில் 1997 ஆம் ஆண்டு மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1997-ல் மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டும் இன்றுவரையில் வட்ட மருத்துவமனைக்கு என்ன தகுதியோ அதுதான் இருந்துகொண்டிருக்கிறது. ஒரு மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியாக மாற்றினால் அடுத்ததை மாவட்ட மருத்துவமனையாக உயர்த்துகிறார்கள். அதற்குண்டான தகுதி இன்னும் வழங்கப்படவில்லை. அதைத்தான் சொல்கிறேன். அதில் பணியிடங்கள் ஏராளமாக காலியாக இருக்கின்றன. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிமிட்டி விலை. சிமிட்டி ஏழையெளியவர்களுக்குக் கிடைக்கவில்லை. இறக்குமதி செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தோம். இறக்குமதி செய்தீர்கள். அதேநேரத்தில் ஆலை அதிபர்களையும் அழைத்துப் பேசினீர்கள். அந்த ஆலை அதிபர்கள் உற்பத்தியில் 20 இலட்சம் மூட்டைகள் வழங்குவதாகச் சொன்னார்கள். அந்த 20 இலட்சம் மூட்டைகள் என்பது மொத்த உற்பத்தியிலே வெறும் 9 விழுக்காடு மட்டுமே. 10 விழுக்காடுகூட இல்லை. 91 விழுக்காடு வெளியிலே விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் நெறிப்படுத்த வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

இன்னொன்று, நீங்கள் துறைமுகத்திலேயே சிமிட்டி வேண்டுவோர் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். பெரும் முதலாளிகள், பெரிய ஒப்பந்ததாரர்கள் எடுத்துக்கொள்ள முடியும். சாதாரண விலைக்கு, மலிவு விலைக்கு, குறைந்த விலைக்கு சாதாரண சிறிய வீடு கட்டக்கூடியவர்கள் 100 மூட்டை, 200 மூட்டை சிமிட்டியை எப்படி துறைமுகத்திலிருந்து எடுத்துச் செல்ல முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் விநியோகத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு மூன்று நிலைகளில் வியாபாரத்தைச் செய்ய முன்வந்திருக்கிறது. முதலாவதாக, TANCEM மூலமாக இங்கே உற்பத்தி செய்பவர்களிடமிருந்து சிமெண்டைப் பெற்று மாதம் 20 இலட்சம் மூட்டைகள் 200 ரூபாய்க்கு விற்பது, 1,000 சதுர அடிகளுக்குள் கட்டுபவர்களுக்கு விற்பது என்பது ஒன்று. இரண்டாவதாக, பெரிய கட்டட முதலாளிகள் அவர்களே 160 ரூபாய்க்கு அங்கே F.O.B. என்ற கட்டணம் செலுத்தி கப்பலிலேயே சென்று அவர்கள் சிமெண்டைப் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு வேண்டிய மற்ற clearance charges, அதேபோல transport,—போக்குவரத்து போன்றவற்றை எல்லாம் அவர்களே செய்து கொள்ள வேண்டும் என்பது இரண்டாவது. மூன்றாவதாக, அரசே நேரடியாக இறக்குமதி செய்து அந்த இறக்குமதியை அவர்களே கொண்டுவந்து Civil supplies C ͲTporation-ல் வைத்து யாருக்கு வேண்டுமானாலும் வழங்குவது என்று மூன்று முறைகளில் அது எல்லோருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால், அதனுடைய விலை எப்படி இருக்கும் என்றால், 160 ரூபாய்க்குதான் அவர்களும் வாங்குகிறார்கள். அங்கிருந்து clearance charges, மற்ற transport charges எல்லாம் கணக்கிட்டு 200, 210, 220 ரூபாய் என்று வருகிறபோது அதை அனைவருக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறது. ஆகவே, மூன்று முறைகளிலே—ஏழையெளிய மக்களுக்கு 200 ரூபாய், தேவைப்படுபவர்களுக்கு 160 ரூபாய்க்கு அங்கே பெற்று TANCEM transport செய்து Civil supplies Corporation மூலமாக விற்பது இரண்டாவது முறை. மூன்றாவதாக அவர்களே, transport எல்லாவற்றையும் பார்த்து 160 ரூபாய்க்கு அங்கேயே வாங்கிக்கொள்ளுங்கள் என்ற மூன்று முறைகளிலேயும் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. நிச்சயமாக சிமெண்ட் விலை குறைவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, 160 ரூபாய்க்கு, சாதாரண மக்கள், ஏழையெளியவர்கள் சென்று துறைமுகத்திலிருந்து சிமிட்டி எடுக்க முடியாது. நீங்களே எடுத்து குறைந்த விலையில் கொடுத்தால் வாய்ப்பாக இருக்குமே என்பதுதான் கேள்வி. அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று மாநிலங்களுடைய உரிமையைப் பேசிக்கொண்டிருக்கிறோம்.



அதைப்போல, உள்ளாட்சிக்கு கூடுதல் அதிகாரம் வேண்டுமென்பது எல்லோருடைய கோரிக்கை. அந்தக் கோரிக்கையை ஏற்ற தமிழக அரசு, சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்தது. இப்போது அந்தக் குழு எடுத்த நடவடிக்கை அறிக்கையைப் பற்றி வரக்கூடிய நிதிநிலை அறிக்கையிலே சொல்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். பாராட்டற்குரியது, வரவேற்கக்கூடியது. ஆனால், ஒரு வேண்டுகோள் என்னவென்றால் அந்தக் குழுவுக்கு என்னென்ன கோரிக்கைகள் வந்தன, அவற்றில் எந்தெந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறீர்கள், எதை நிறைவேற்ற இயலவில்லை என்ற அந்த A.T.R.-ஐ, நடவடிக்கை எடுக்கப்பட்ட அறிக்கையை முழுவதுமாக நீங்கள் அளிக்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். நான் வரவேற்கிறேன். அதில் எல்லாவற்றையும் கொடுத்தீர்கள் என்றால் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கை குறித்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். வரக்கூடிய நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெறுகிற நேரத்தில், அந்தக் கூட்டத் தொடரில் நிச்சயமாக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் வழங்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு மிக்க நன்றி.

இன்று பள்ளிகளிலே தமிழ் ஆசிரியர், வேளாண் ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர், ஓவிய ஆசிரியர், தையல் உட்பட கைத்தொழில் ஆசிரியர்கள் ஏராளமாக நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதைப்போல, பட்டதாரி ஆசிரியர்களை வணிகம், பொருளாதாரம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு எல்லாம் நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

சத்துணவு அமைப்பாளர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் நீண்ட காலமாகப் பணிப் பாதுகாப்பில்லாமல் குறைந்த ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது

ஓய்வுபெறும் நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலே அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைக்கிறேன்.

அதைப்போல, இந்த தற்காலிக உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் எல்லாம் கல்வித் தகுதி அடிப்படையிலே வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். அவர்களுக்கு மீண்டும் ஒரு தேர்வு வைத்து வடிகட்டி அவர்களை ஒதுக்காமல், எல்லோரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளையும் இங்கே நான் முன்வைக்கிறேன்.

அதைப்போல, மிகக் கடினத் தன்மை கொண்ட பணி, காவல் துறைப் பணி. அதிலே ஆண்கள், பெண்கள் என இரு பாலரும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறையில் இரண்டாம் நிலைக் காவலர்கள், காவலர்கள், முதல்நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், துணைக் கண்காணிப்பாளர்கள், கண்காணிப்பாளர்கள், இந்திய காவல் பணி அலுவலர்கள் உட்பட ஆரம்பத்திலேயிருந்து உயர் அதிகாரிகள் வரையிலும் இருக்கக்கூடிய காவல் துறையினுடைய பணித் தன்மை கடினமானது. ஆகவே, அந்தப் பணித் தன்மையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு 8 மணி நேரம் பணி வரம்பு, ஊதிய உயர்வு, 8 ஆண்டுகளுக்கு ஒரு படி பதவி உயர்வு என்ற அந்த நிலையை நீங்கள் கட்டாயம் கொண்டுவர வேண்டும். இது காவல் துறையினருடைய நீண்டகாலக் கோரிக்கை. இப்படிப் பல்வேறு பிரச்சினைகளைச் சொல்வதற்குக் காரணம், இவை ஆளுநர் உரையிலே இல்லை என்று சொன்னாலும்கூட, இவற்றையெல்லாம் வரக்கூடிய நிதிநிலை அறிக்கையிலே சீர் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் முன்வைக்கிறேன்.

அதைப்போலவே, என்னுடைய தொகுதியிலே ஒரு சில பிரச்சினைகள். மேட்டூருக்கு தொழிற்பேட்டை வழங்குவதாக அப்போதிருந்த சிறு தொழில் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நிலம் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். தொழில் முனைவோரும் இருக்கின்ற காரணத்தினாலே, அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேட்டூரிலே நகராட்சிப் பேருந்து நிலையம் ரொம்பச் சரிவாகவும், குறுகலாகவும் இருக்கிறது. பக்கத்திலே மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடம் காலியாக இருக்கிறது. அங்கேயிருக்கிற மின் வாரிய கண்காணிப்புப் பொறியாளர் வழங்குவதாக ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கு இடம் ஒதுக்கி, மேட்டூர் பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தோணிமடுவு அணைத் திட்டம் மிகப் பெரிய திட்டம். அதையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களினுடைய நீண்டநாள் குடிநீர் கோரிக்கை, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அங்கே புளோரைடு நச்சுத் தன்மை அதிகமாக இருக்கிறது. நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்திற்கு காவிரிக் குடிநீர் கொண்டுவருவதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். ஆனால், காவிரிக் கரையில் இருக்கிற மாவட்டங்களுக்கு பெருந்தலைவர் காமராஜர் காலத்திலேயிருந்து இன்று வரையிலும் கிடைக்கவில்லை. அவர் போட்ட திட்டம். அதனை நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதைப்போல, சேலத்திற்கு வானூர்தி சேவை தேவை. அதை உடனடியாகத் தொடங்க வேண்டும். மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை.

நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், வேண்டுகோளை ஏற்று ஒரு நல்ல அறிவிப்பைச் செய்தார்கள், 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என்று. இப்போது தொகுதி மறு சீரமைப்புக் குழுப் பணிகள் முடிந்துவிட்ட காரணத்தால், 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என்ற அளவிலே விழுப்புரம், வேலூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் போன்ற பெரிய மாவட்டங்களையெல்லாம் பிரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பணி நியமனத்திலே எல்லோருடைய வேண்டுகோளையும் ஏற்று முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பைச் செய்தார்கள். ஒரு பணிக்கு ஒருவருக்கு நேர்காணல், 1 : 1 என்று சொன்னார்கள். அதையும் நடைமுறைப்படுத்த வேண்டும். பதிவு மூப்பு அடிப்படையிலே அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நீதித் துறையிலே உரிமையியல் நீதிபதி, நீதிமன்ற நீதிபதி, நீதிமன்ற நடுவர்கள் நியமனம் குறித்து உயர் நீதிமன்றம் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதிலே இதுவரை 35 வயது என்று வயது வரம்பே இல்லை. ஆனால், பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, மிகப் பிற்படுத்தப்பட்டோராக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் 35 வயது என்று இப்போது உயர் நீதிமன்றம் நிர்ணயித்துவிட்டது. ஆகவே, அதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவுத் துறையில் 24-8-2007-லே ஓர் உத்தரவு. அதாவது, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வயது வரம்பு 35-லேயிருந்து 32 ஆகக் குறைத்துவிட்டார்கள். ஏற்கெனவே கடந்த 5 வருடங்களாக நியமனமே இல்லை. இப்போது 32 வயது என்று ஆகிவிட்டால் பணி நியமனமே கிடைக்காமல் போய்விடும். ஆகவே, அதையும் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ததைப்போல, வீட்டு வசதி வாரியத்திலும் கடன்பட்டவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ளார்கள். ஏழை எளியவர்கள், 10,000 ரூபாய் வாங்கியவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் கட்ட வேண்டியதாக இருக்கிறது. கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கடனைத் தள்ளுபடி செய்யுங்கள். இயலவில்லை என்று சொன்னால், வட்டியையாவது தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கை வைத்திருந்தோம். அதை ஏற்றுக்கொண்டார்கள். இருப்பினும் இப்போது தடை செய்யப்பட்ட லாட்டரிச் சீட்டுகளை இன்னும் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். தங்குதடையில்லாமல் விற்கப்படுகிறது. நேற்றுகூட சென்னையிலேயே லாட்டரிச் சீட்டு வாங்கி வந்தேன். 30 ஆம் தேதி குலுக்கல். அவை, கணபதி, ரோசா, தங்கம் இப்படி நிறைய பெயர்களில் இருக்கின்றன. இதை வேண்டுமென்றால் நான் இப்போது நேரடியாகக் கொடுக்கிறேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, எங்கே விற்கிறது, எந்தக் கடை என்று எழுத்துமூலமாகக் கொடுப்பதற்குக்கூட நான் தயாராக இருக்கிறேன். ஆகவே, இந்த லாட்டரிச் சீட்டை உடனடியாக ஒழிக்க வேண்டும். அதைப்போல, கஞ்சா விற்பனையும் நடந்துகொண்டிருக்கிறது.





முற்பகல் 10-05

இன்னொரு முக்கியமான பிரச்சினையை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நடுவண் அரசினுடைய பணிகளிலே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், பட்டியலின மக்களுக்கும் மிகப் பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. இதை இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், சமூக நீதிக்கு அடித்தளம் இட்ட மண் தமிழ்நாடு. தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்திலே இதைச் சீர் செய்ய வேண்டும் என்பதற்காக நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

மத்திய அரசாங்கத்தினுடைய மொத்தப் பணியிடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு முதல் நிலையில் (Group-I), 2.3 விழுக்காடு; நிலை-2-ல் (Group-II) 4.7 விழுக்காடு; நிலை-3-ல் (Group-III) 5.9 விழுக்காடு, நிலை-4-ல் (Group-IV) 4.3 விழுக்காடு. ஆக, ஒட்டுமொத்தமாக நடுவண் அரசுப் பணிகளிலே இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கிடைத்த இடங்கள் வெறும் 5.21 சதவிகிதம். ஆனால், மண்டல் குழு பரிந்துரைப்படி இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு கிடைக்க வேண்டியது 27 விழுக்காடு. 27 விழுக்காட்டிற்கு மாறாக இப்போது கிடைத்திருக்கிற இடம் என்பது வெறும் 5.21 சதவிகிதம் என்றால், இந்த நாட்டினுடைய மிகப் பெரிய மக்கள் தொகையாக இருக்கக்கூடிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு எவ்வளவு பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப்போல ஆதி திராவிட மக்கள், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களுக்கு நிலை–IV, Group-D–ல் தான் கிடைத்திருக்கிறது. நிலை–1, நிலை–2–ல் கிடைக்கவில்லை. ஏன் ஆதி திராவிடர்களுக்குத் தகுதி இல்லையா? இதையெல்லாம் கவனத்தில்கொள்ள வேண்டும். முன்னேறிய வகுப்பினருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற இடங்கள் 69.32 சதவிகிதம். அவர்களது மக்கள் தொகை எவ்வளவு? மொத்த மத்திய அரசுப் பணிகளில் 69.32 விழுக்காடு முன்னேறிய வகுப்பினருக்கு. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வெறும் 5.21 விழுக்காடு. இந்த அநீதியைப் போக்குவதற்கு தமிழக அரசு முயற்சிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாட்டில் எல்லாத் துறைகளினுடைய அரசுப் பணியிடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், ஆதி திராவிட மக்களுக்கும் இட

ஒதுக்கீட்டு அடிப்படையில் இன்னும் நிரப்பப்படாத பற்றாக்குறை இடங்கள் இருக்கின்றன. அதாவது, backlog vacancies, பின்னடைவுக் காலியிடங்கள். இதுபற்றி கடந்த ஆட்சிக் காலத்தில், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், ஒரு வெள்ளை அறிக்கை கொடுத்தீர்கள். உங்களை நாங்கள் பாராட்டினோம். மனதார வாழ்த்தினோம். வெள்ளை அறிக்கையிலே காலியிடங்களை நிரப்புவதாகச் சொன்னீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, முடியுங்கள். பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். அந்த இடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தமிழ்நாட்டில் வருவாய்த் துறையில் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. எல்லா இலவசத் திட்டங்களையும், அரசுத் திட்டங்களையும் அவர்களைத்தான் நிறைவேற்றச் சொல்கிறீர்கள். ஆள் இல்லாமல் நிறைவேற்ற முடியவில்லை. மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் கொடுத்து தற்காலிகமாகக் கூட நீங்கள் பணியாளர்களைப் போடலாம் என்று சொல்லலாம். அதையும் செய்யவேண்டும்.

நடுவண் அரசால் தேசிய இந்திரா காந்தி நினைவு முதியோர் உதவித் தொகைத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மாநில அரசாங்கத்தினுடைய முதியோர் உதவித்தொகை வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும் என்று சொன்ன காரணத்தினாலே, ஏழைகள் கல் உடைக்க மாநிலம் கடந்து போய்விடுகிறார்கள். 6 மாதம், 7 மாதம் வருவதில்லை. வயதானவர்கள் இங்கே சோற்றுக்கு வழியில்லாமல் இருக்கிறார்கள். அதைத்தான் தலைவர்கூட, முதலமைச்சர் அவர்கள்கூட, இங்கே அறிவித்தார்கள். ஆண் வாரிசு இருந்தாலும், அவர்கள் வெளியூர் சென்றுவிட்டால் அந்த முதியோருக்கு உதவித்தொகை உண்டு என்று சொன்னீர்கள். ஆனால், கீழ்மட்டத்தில் பணிகள் நடக்கவில்லை. எங்களுக்கு உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். அதை நீங்கள் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்னொரு பிரச்சினை. பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியினர்மீது வழக்கு





போடப்பட்டது. பொங்கல் திருநாளிலே சிறையிலே இருந்தார்கள். அந்த வழக்கு என்னவென்று சொன்னால், இளைஞரணி மாநாட்டிற்கு மிரட்டி நிதி கேட்டதாக ஒரு வழக்கு. இளைஞரணி மாநாடு நடந்தது 2007 ஆம் ஆண்டு ஒன்பதாவது மாதம். ஆனால், வழக்குப் போட்டது 2008 ஜனவரி மாதம். பொங்கல் நாளன்று சிறை. அப்போது மாநாடு நடத்தியதற்கும், இப்போதைய வழக்குக்கும் எப்படி சம்பந்தம் இருக்கும்? புகார் தந்தது யார் என்று சொன்னால் ஒரு ஒப்பந்ததாரர். Oriental நிறுவனம் என்று சொல்லி அவர்கள் புகார் கொடுத்ததாகச் சொன்னார்கள். அந்த Oriental நிறுவனம், நாங்கள் புகாரே கொடுக்கவில்லை, எப்படிப் போனீர்கள் என்று கேட்டார்கள். ஆண்டிமடம் சட்டமன்ற உறுப்பினருடைய ஓர் உறவினர், பொறியாளர் வீரமணி, அவர் பெயரில் ஒரு புகார் வாங்கி, வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள். அங்கு இருக்கக்கூடிய எங்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. குரு அவர்கள்மீது ஒரு வழக்கு. என்னவென்று சொன்னால், அங்கே மாவட்ட செயற்குழுவில் வரம்பு மீறிப் பேசினார் என்று ஒரு வழக்கு. செயற்குழுவில் எல்லாரும் பேசுகிறார்கள். ஒவ்வொரு கட்சியும் அவர்களுடைய நிலைப்பாட்டைச் சொல்கிறார்கள். அதற்குப்போய் ஒரு வழக்கா? ஆகவே, இப்படி அவதூறான, உண்மைக்கு மாறான வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஆதரவு கொடுத்திருக்கின்ற கட்சியையும் நீங்கள் பொங்கல் திருநாளிலே சிறையிலே அடைத்தீர்கள் என்ற குற்றச்சாட்டினை நான் இங்கே பகிரங்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நிறைய நேரம் எடுத்திருக்கிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். அதைப்போல மது ஒழிப்பு அவசியமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நீண்டநாட்களாக வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். நீங்கள் வருவாயைப் பார்க்காமல், மக்களுடைய வாழ்க்கைச் சீரழிவைப் பார்க்க வேண்டும். முதல் கட்டமாக குடிப்பகங்களை மூடவேண்டும். Bar-களை மூடுங்கள். விற்பனை நேரத்தைக் குறையுங்கள். கடைகளின் எண்ணிக்கையைக் குறையுங்கள். மராட்டிய மாநிலத்திலே இருக்கிற அந்த சட்ட நடைமுறையையும் பின்பற்ற வேண்டும்.

[திரு. ஜி.கே. மணி] [2008 பிப்ரவரி 1

முற்பகல் 10-10

அடுத்து, பாலாறு பிரச்சினை. அது நிலுவையிலே இருக்கிறது. பாலாறுக்குப் பக்கத்திலே பொன்னை ஆறு. பொன்னை ஆற்றிலே ஆந்திர அரசு கலவகுண்டா என்கிற இடத்திலே ஓர் அணை கட்டினார்கள். 1996-லே ஆரம்பிக்கப்பட்டு 2005-லே முடித்தார்கள். 2006-லே திறப்பு விழா. இப்போது என்ன பண்ணுகிறார்கள் என்று சொன்னால், திருவலம் பக்கத்திலே பொன்னை ஆற்றிலே கங்காதரநல்லூரில் ஒரு அணை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். இதை நாம் தடுக்க வேண்டும். பேசாமலே விட்டதனாலேதான் தொடர்ந்து எல்லா அணையையும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படி நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தால் அவை தொடர்பான விவரங்களை நான் இங்கே முதலமைச்சர் அவர்களுக்கும், உரியவர்களுக்கும் கொடுத்து விடுகிறேன். அதேநேரத்தில், ஒரு பணிவான வேண்டுகோள். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்தில் தமிழகத்தில் ஊழல் இல்லாத நிர்வாகம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற நிலையை உருவாக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்து, இந்த ஆளுநர் உரையைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுகிறேன். இது கசப்பு இல்லாத ஆளுநர் உரை. இதில் இனிப்பு இருக்கிறது, அதோடு புளிப்பும் இருக்கிறது. புளிப்பை நீக்கி ஒரு நல்ல நிர்வாகத்தைக் கொடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கூறி இந்த ஆளுநர் உரையை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரையின்மீது நடக்கின்ற இந்த விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக பங்குபெற்று உரையாற்ற அனுமதி தந்தமைக்கு தங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது மூன்றாவது ஆளுநர் உரை. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு 5 ஆண்டுகள் பதவி வகிக்கின்றபோது அதனுடைய பதவிக் காலத்தை ஒரு நெற்பயிரினுடைய வாழ்க்கையோடு ஒப்பிடலாம். நட்டல், கதிர்



2008 பிப்ரவரி 1] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பிடித்தல், விளைத்தல், அறுவடை என்கிற 4 கட்டங்களில் எப்படி நெற்பயிரினுடைய வாழ்க்கையைப் பார்க்கிறோமோ அதைப்போல தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு 5 ஆண்டு காலத்தில் அது நடப்படுக்கின்ற நாட்கள், திட்டங்களை உள்வாங்கிக் கொள்கின்ற நாட்கள், திட்டங்களை நெல் மணியாக மாற்றுகின்ற நாட்கள், அதற்குப் பிறகு அதை அறுவடை செய்து மக்களுக்குப் படைக்கின்ற நாட்கள் என்று இந்த ஆட்சிக் காலத்தை ஒரு நான்கு பகுதியாகப் பிரித்தால் இப்பொழுது மணி பிடித்து, மணி திரள்கின்ற பருவம் என்று அதைச் சொல்வார்கள்.

கடந்த 1½, 2 ஆண்டுகளிலே பல்வேறு முக்கியமான முடிவுகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. பல்வேறு செயல்பாடுகளுக்குப் புதிய பார்வையும், புதிய அணுகுமுறையும் தந்திருக்கின்றது. ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்பது சாதாரண மக்களுடைய வாழ்க்கையிலே ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், இன்று இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் அத்தகைய குறைந்த விலையிலே எளிய மக்களுக்கு அரிசி வழங்கப்படுகின்ற நடைமுறை இல்லை என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கின்ற காரணத்தினால் கிராமத்திலே பசி, பட்டினி, வறுமையினுடைய கோரத் தாக்குதல் இல்லாமல் ஓரளவுக்கு வயிறு நிரம்ப சாப்பிடக்கூடிய சூழ்நிலையை தமிழகத்தினுடைய கிராமங்களில் எல்லாம் உருவாக்கி வைத்திருக்கிறோம் என்கிற நம்பிக்கையும், நல்லெண்ணமும் நமக்கு இன்று இருக்கிறது.

அதைப்போலவே விவசாயிகளுக்கான கடன்களை முதல்முறையாகத் தள்ளுபடி செய்திருக்கிறோம். பல்வேறு அரசுகள், பல்வேறு ஆட்சிகள் விவசாயிகளுடைய துயர்களை, துயரங்களை அவர்கள் படுகின்ற வேதனைகளை வெளியிலே அறிக்கையாகச் சொல்லி, அதற்குக் கரம் நீட்டி, துடைப்பதற்கான முயற்சிகள் பல்லாண்டுகாலமாக ஒவ்வோர் அரசாலும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு குறைந்த காலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாக மாற்றித் தரப்பட்டிருக்கின்றன. ஆனால், முழு அசல், வட்டி முழுமையும் தள்ளுபடி செய்வது என்கிற ஒரு அறிவிப்பு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு புதிய சிந்தனை. அந்தச் சிந்தனையைத் தொடர்ந்து இன்று மத்திய அரசாங்கம்கூட அத்தகைய கடன்களை இந்தியா

முழுவதும் தள்ளுபடி செய்யலாமா என்கிற ஆராய்ச்சிகூடச் செய்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள், நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் அவர்கள், நம்முடைய பிரதமரோடு ஆலோசித்து அதற்கான ஒரு திட்டத்தைக்கூட இப்போது சமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகின்றபோது இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய அந்த நல்ல திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேயிருந்து புறப்பட்டிருக்கிறது என்பதை நாம் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*முற்பகல் 10-15*

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே சில தகவல்கள்கூட நமக்கு வருகின்றன. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் விற்கப்படுகின்றன என்று நம்முடைய அரசுகூட ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டது. யாராவது அப்படி விற்றால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு வந்தவுடனே, அந்த விற்பனையிலே சற்று மந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். ஏனென்று சொன்னால், இந்த நாட்டினுடைய சில பகுதிகளிலே, இருக்கின்ற ஏழ்மை காரணமாக kidney-யைக்கூட விற்றுச் சாப்பிடக்கூடிய நிலையிலே சில மக்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. அப்படிப்பட்ட மக்கள் வாழ்கின்றபோது, அவர்களுக்கு ஒரு தேவை, ஒரு நிர்பந்தம் என்று வருகின்றபோது, எதை வேண்டுமானாலும் எடுத்து விற்றுச் சாப்பிடலாம் என்கிற எண்ணம் இருக்கிறது. அந்த மக்களுடைய வாழ்க்கை நிலையை மாற்றுவதற்கான அடையாளங்கள், அறிகுறிகள்தான் என்று நாம் அதை ஏற்றுக்கொள்கிறோம். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒரு முறைப்படி, குறைந்த எண்ணிக்கையுடைய ரேஷன் கார்டுகள் இருக்கின்ற ஊர்களிலிருந்து படிப்படியாகக் கொடுக்க வேண்டும். என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலேயே ஏறக்குறைய 12, 13 ஊராட்சிகள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. சில இடங்களிலே சில குறைகள் இருக்கின்றன. நியாயமாகவே தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கப்பட வேண்டியவர்களுக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கான கணக்கெடுப்பு முடிந்தாலும்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் வழங்கி முடிந்த பிறகு, தகுதி உள்ள யாராவது விடப்பட்டிருந்தால் அவர்களுக்கு இறுதியாக ஒரு சுற்று



எல்லோருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்கிற அறிவிப்பை நம்முடைய அரசு வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, அரசுப் பணி நியமனங்கள். கடந்த 2 ஆண்டுகளிலே ஏறக்குறைய 2 இலட்சத்திற்கும் அதிகமான அரசுப் பணியிடங்களில் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது உண்மையிலேயே வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க ஓர் அம்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சில முக்கியமான துறைகளிலேகூட குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பார்த்திருக்கிறோம். உள்ளாட்சித் துறையிலே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழகம் எங்கும் சுற்றுப் பயணம் செய்து, ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவரையும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினரையும், ஒவ்வொரு பேரூராட்சித் தலைவரையும் நேரிலே சந்தித்து உரையாடுகிறார் என்பதே அவர்களுக்கெல்லாம் உள்ளாட்சி நிருவாகத்திலே ஒரு புதிய பார்வையைத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சிகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. புதிய குடிநீர்த் திட்டங்கள் நிறைய அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போதுகூட, நம்முடைய மத்திய அரசு, சென்னையிலே முழுக்க, முழுக்க 1,000 கோடி ரூபாய் செலவிலே கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான நிதியொதுக்கீட்டைத் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நீண்ட வழிக் குடிநீர்த் திட்டங்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு, திருநெல்வேலி மாவட்டத்திற்கு, வறட்சியான திருவண்ணாமலை, வேலூர் போன்ற மாவட்டங்களுக்கு எல்லாம் அதிகமான நீராதாரங்கள் இருக்கின்ற இடங்களிலேயிருந்து நீரைக் கொண்டு போகின்றபோது, அந்தத் திட்டங்கள் 600, 700, 1,000 கோடி ரூபாய் என்று பிரம்மாண்டமான முதலீடுகளிலே செய்யப்படுகின்றபோது, அந்தத் திட்டங்களிலே சில நேரங்களிலே, சில சங்கடங்கள் இருக்கின்றன. உதாரணமாக, தாமிரபரணி குடிநீர்த் திட்டம் எங்களுடைய மாவட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தாமிரபரணி நீர்த் திட்டத்தைச் செயல்படுத்துகின்றபோது, தாமிரபரணி தண்ணீர் எங்கே வழங்கப்படுகின்றது என்று சொன்னால், ஏற்கெனவே அந்த ஊரிலிருந்த குடிநீர் ஆதாரங்கள் இருந்த அதே தொட்டிகளிலே அந்த நீர்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 பிப்ரவரி 1

பெருக்கப்படுகிறது. ஏற்கெனவே உள்ளூரிலே இருக்கின்ற நீராதாரங்களும் தாமிரபரணி தண்ணீரும் ஒரே நீர்த் தொட்டியிலே பெருக்கப்படுகின்றபோது அந்த மக்களுக்கு உண்மையிலேயே அந்த உப்பு கலந்த தண்ணீர்தான் கிடைக்கிறதேயொழிய அந்த original தாமிரபரணி water கிடைக்கவில்லை. ஆகவே, இனிமேல் இதைப்போன்ற திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது இந்தக் குடிநீர் வருவதற்கான தனித் தொட்டிகள் கட்டப்பட வேண்டும். அதைத் தயவுசெய்து கவனித்து, இப்பொழுது நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களிலாவது அதை நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டும். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்ற திட்டங்களிலே எங்கெல்லாம் தனியாகத் தண்ணீர் தொட்டி தேவைப்படுகிறதோ அந்த இடங்களுக்கு எல்லாம் தண்ணீர் தொட்டி சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையிலே நல்ல மாற்றங்களைப் பார்க்கிறோம். நம்முடைய 'இந்து' பத்திரிகைகூட அதை நன்றாக எழுதியிருக்கிறது. போக்குவரத்துத் துறையிலே நம்முடைய அருமைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு இடையிலே—ஏனென்று சொன்னால் தமிழ்நாட்டில் இருக்கின்ற அரசியல் கட்சிகள் அத்தனையும் ஒரு முடிவிலே நாம் தெளிவாக இருக்கிறோம். போக்குவரத்துக் கட்டணங்களைக் கூட்டுவதில்லை; ஏழையெளிய மக்களுக்கான சிரமங்களை மேலும் கூட்டுவதில்லை என்கிற முடிவிலே இங்கேயிருக்கின்ற எந்த அரசியல் கட்சிக்கும் மாற்றுக் கருத்து கிடையாது—ஆனால், கட்டணங்களைக் கூட்டுவதில்லை என்கிற முடிவு எடுத்திருக்கிறோமேயொழிய எரிபொருளின் விலையை யாராலும் கட்டுப்படுத்த முடியுமா என்றால் கட்டுப்படுத்த முடியவில்லை. இரண்டு, மூன்று ஆண்டுகளிலே நாம் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய எரிபொருள் 3 மடங்கு, 4 மடங்கு விலை ஏறியிருக்கிறது; உதிரிப் பாகங்களின் விலை 4 மடங்கு ஏறியிருக்கிறது. எது எவ்வளவு ஏறினாலும் போக்குவரத்துக் கட்டணத்தைக் கூட்டுவதில்லை என்கிற முடிவு எடுத்திருந்தாலும்கூட அந்தக் குறைந்த ஆதாரங்களை உள்ளே வைத்துக்கொண்டு இன்று பல நல்ல மாற்றங்களை—விரைவு சொகுசுப் பேருந்துகள், Air conditioned Buses, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 5 புதிய வழித் தடங்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்தப் போக்குவரத்துத் துறையினுடைய முயற்சிகளை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2008 பிப்ரவரி 1] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

*முற்பகல் 10–20*

அதைப்போல, வருவாய்த் துறையிலே ஏறக்குறைய 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியிருப்பது என்பது பாராட்டத்தக்கது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏனென்று சொன்னால், ஆங்கிலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். What is appreciated will be repeated; what is rewarded will also be repeated. எதைப் பாராட்டுகிறீர்களோ அது வளரும் என்று சொல்வார்கள். அந்த 3 இலட்சம் பட்டாக்களை, ஏழை எளிய மக்களுக்கு அளித்த பட்டாக்களை, அளிப்பதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய வருவாய்த் துறை அதிகாரிகள், வருவாய்த் துறை அலுவலர்கள், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து, கடலூர் துறைமுகம். பல ஆண்டுகளாக செயல் இழந்து கிடந்த துறைமுகம், இப்போது முதல் முறையாகச் செயல்பட்டு, அங்கே கப்பல்கள் வந்து உரத்தை இறக்கக்கூடிய அளவிற்கு அந்தத் துறைமுகத்தை நாம் நவீனப்படுத்திச் செயல்படுத்தியிருக்கிறோம். அதற்காக அந்தத் துறைமுகத்தைச் சார்ந்த அதிகாரிகளுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நான் அடிக்கடி சொல்வேன், மத்திய, மாநில அரசுகள், இரண்டும் ஒரே தளத்திலிருந்து மக்கள் பிரச்சினைகளை அணுகக்கூடிய விதத்திலே ஒன்று மற்றொன்றினுடைய எண்ண ஓட்டங்களைப் புரிந்துகொண்டு செயல்படுகின்ற அரசுகளாக இருந்தால் ஒரு மாநிலத்திற்கு எவ்வளவு நன்மை நடக்க முடியும் என்பதற்கு உதாரணமாக இந்த அரசியல் ஏற்பாடு இருக்கிறது என்று நான் அடிக்கடி சொல்வேன். அதற்கான ஒரு உதாரணத்தைக்கூட இந்த அவையிலே நான் பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். கடந்த ஓராண்டிலே, மனச்சாட்சி உள்ளவர்கள் எல்லோரும் எண்ணிப் பார்க்கக்கூடிய அளவிற்கு, மத்திய அரசின், மாநில அரசின் நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஊருக்கும் எவ்வளவு வந்திருக்கிறது என்பதற்கு ஒரு சிறிய புள்ளிவிவரம் தருகிறேன். என்னுடைய கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலே, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலே, கொடிக்குறிச்சி என்ற ஊராட்சி இருக்கிறது. இந்த கொடிக்குறிச்சி என்கிற ஊராட்சிக்கு கடந்த ஓராண்டு மட்டும் மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து தந்த தொகை ஏறக்குறைய ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 பிப்ரவரி 1

(மேசையைத் தட்டும் ஒலி) அது என்ன வழி என்று சொன்னால், சட்டமன்றத் தொகுதி உறுப்பினருடைய மேம்பாட்டுத் திட்டம், அரசு நிதி, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பன்னிரண்டாவது நிதிக் குழு தந்த நிதி, சம்பூர்ண கிராம மேம்பாட்டுத் திட்டம், நமது கிராமம் திட்டம், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், தொகுப்பு வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம், கச்சா வீடு பழுதுபார்க்கும் திட்டம், ஒன்றியக் குழு உறுப்பினர் நிதி, தேசிய நெடுஞ்சாலைத் துறை நிதி, முழுச் சுகாதார அரசு உதவி, மத்திய-மாநில அரசுகள் தரும் சுழல் நிதி, தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், ஊராட்சி நிதி என்று சொல்லி, மொத்தம் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை ஒரே ஊராட்சிக்குப் போயிருக்கிறது என்று சொன்னால் தமிழகத்திலே இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஊராட்சிகளுக்குக் கடந்த ஓராண்டு எவ்வளவு தொகை வந்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தொகை எப்படி செலவிடப்படுகிறது என்பதும் முக்கியம். இதைப்பற்றி ஒரு ஆராய்ச்சி செய்கின்றபோது நம்முடைய தமிழ்நாட்டிலே எப்படி பஞ்சாயத்து அமைப்புகள் செயல்படுகின்றன என்பது சொல்லப்பட்டிருக்கிறது. A Research Study was conducted by the Madras Institute of Development Studies covering Tamil Nadu, Karnataka and West Bengal. இந்த மூன்று மாநிலங்களிலே ஊராட்சி அமைப்புகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை The Madras Institute of Development Studies என்கிற ஆராய்ச்சி நிறுவனம் ஆராய்ச்சி செய்து தகவல் தரும் அறிக்கையிலே சொல்கிறது; அது என்ன சொல்கிறது என்று சொன்னால், மேற்கு வங்க மாநிலத்திலே ஊராட்சி நிறுவனங்களை அரசியல் கட்சிகள் மூலமாகத்தான் மக்கள் பார்க்கிறார்கள். கர்நாடகாவிலே ஊராட்சி நிர்வாகத்தை அந்த ஊர்த் தலைவர்கள் மூலமாக மக்கள் பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே ஊராட்சி நிர்வாகத்தை அதிகாரிகள்மூலமாக மக்கள் பார்க்கிறார்கள் என்கிற ஒரு ஆராய்ச்சிக் குறிப்பைத் தந்திருக்கிறது. ஆகவே, இந்த அதிகாரிகளுடைய செயல்பாடு களங்களிலே எப்படி இருக்கிறது என்பதுதான் இந்த அரசு கொடுக்கின்ற பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை முறையாகச் செயல்படுத்தித் தருவதற்கான வாய்ப்பு.

எனவே, இப்போது இவ்வளவு முன்னேற்றப் பாதைகள், இவ்வளவு அருமையான திட்டங்கள் வந்துள்ளன. நம்முடைய சிமெண்ட் விற்பனையைப்பற்றிக்கூட நம்முடைய மாண்புமிகு பா.ம.க. உறுப்பினர்



2008 பிப்ரவரி 1] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

திரு. மணி அவர்கள் சொல்லி வந்தார்கள். அரசு செய்துள்ளது ஒரு நல்ல முயற்சி. விலைவாசி உயர்வால் இன்று கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் இரண்டு பிரிவாக உள்ளனர். இந்தியா முழுவதும்—வளர்ச்சியும் முன்னேற்றமும் ஒரு சாராரை மட்டுமே சேர்ந்திருக்கிறது. தனிப்பட்ட நபருடைய வருமானம் என்று பேசுகிறோம். அன்னியச் செலாவணி இருப்பு என்று பேசுகிறோம். இந்த தேசத்தினுடைய பிரதமரே அதை ஒத்துக்கொள்கிறார். அவரே சொல்கிறார். The growth and development should be inclusive. முன்னேற்றமும் வளர்ச்சியும் ஒரு சாராரை மட்டுமே சேர்ந்து விடுவதால் இந்தியாவிலே புதிய கோடீஸ்வரர்கள் மட்டுமே உருவாவதால் இந்த நாடு வளர்ச்சி பெற்றதாக ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நாட்டிலே இருக்கின்ற சாதாரண ஏழைக்குக்கூட, அவனுடைய வாழ்க்கைக்குப் பாதுகாப்பும், சமூகப் பாதுகாப்பும் தந்தால்தான், நாம் உண்மையான வளர்ச்சி என்று சொல்லிக்கொள்ள முடியும்.

*முற்பகல் 10-25*

ஆகவேதான், இந்த சிமெண்ட் விலை, கம்பி விலை, மணல் விலை என்பது சாதாரண மனிதர்கள் மேலே மிகப்பெரிய சுமையை ஏற்றியிருக்கிறது. நேற்றைக்குக்கூட, நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி வந்தார்கள்; இங்கே நம்முடைய பிரதான எதிர்க்கட்சியிலேயிருந்துகூட விலைவாசிகளையெல்லாம் பட்டியலிட்டார்கள். விலைவாசி ஏறியிருக்கிறது என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை; அதை ஏற்பதற்கும் நமக்குத் தயக்கமில்லை. ஆனால், அந்த விலைவாசி உயர்வைச் சாதாரண மக்கள் சமாளிப்பதற்கான புதிய யுக்திகளை நாம்தான் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

ஏனென்று சொன்னால், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒன்றரை கோடி ரூபாய் வந்துவிடுகிறது. சம்பளங்கள் உயர்ந்திருக்கின்றன; வெளிநாட்டிலிருந்து வருகின்ற இறக்குமதியினுடைய விலைகள், எண்ணெய்யாக இருந்தாலும் சரி, சமையல் எண்ணெய்யாக இருந்தாலும் சரி, பருப்பு வகைகளாக இருந்தாலும் சரி, வெளிநாட்டிலிருந்து வருகின்ற இறக்குமதிக்கான அத்தனைத் தேவைகளும் அதிகமாகி, விலைகள் மூன்று மடங்கு, நான்கு மடங்காகியிருக்கின்றன. ஒரு சாராருக்குச் சம்பளம் அதிகம் கிடைக்கின்ற காரணத்தினால், அவர்கள் இருக்கின்ற பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, நிரந்தர வருமானம் இல்லாதவர்கள், தங்களுடைய அன்றாட வாழ்க்கையினுடைய பாதுகாப்புக்கு அரசாங்கத்தை எதிர்பார்த்து நிற்கின்றவர்கள், நாளை விடியல் எப்படி விடியும், நாளை உணவு யாரிடமிருந்து வரும் என்று ஏங்குகின்ற மிகப் பெரும்பான்மையான மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பு கொடுக்கவேண்டிய பொறுப்பு மத்திய, மாநில அரசுகளைச் சாரும். எனவே, அப்படிப்பட்ட மக்களுக்கான நல்ல உதவிகளைச் செய்வதற்கான எண்ணம் உங்களுக்கு இருக்கிறது.

ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும் அரிசியும், பருப்பும், எண்ணெய்யும் நியாய விலையில் வழங்கப்படுவதற்கான முயற்சி பாராட்டுதலுக்குரியது. அதை இன்னும் அருமையாக விஸ்தரித்து, அதிலே கட்டுமானப் பொருட்களைப் போன்ற, அத்தியாவசியமானப் பொருட்களுடைய விலையைக் குறைத்து,—அதை எப்ப க் குறைக்க முடியும்?—இதுவொரு அருமையான யுக்தி. இன்றைக்கு இந்தியாவிலே யாராவது, எந்தவொரு மாநிலத்திலாவது ஒரு அரசு, சிமெண்ட் உற்பத்தியாளர்களோடு நேரடியாகப் பேசி, சிமெண்ட் விலையைக் குறைத்திருக்கிறது என்று சொன்னால், அது தமிழகத்தில்தான். சாதாரண மக்களுக்கு மூட்டை 200 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். It may not be a complete remedy. அது எல்லோரும் எதிர்பார்க்கின்ற அளவிற்கு ஒரு மருந்தாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், ஒரு நல்ல முயற்சி; நல்ல தொடக்கம்; நல்ல சிந்தனை. அதை மேலும் விருத்தி செய்து, எப்படி அதைச் சாதாரண மக்களுக்கு, தமிழ்நாடு முழுவதும் நல்ல விலையிலே சிமெண்ட்டை விற்கமுடியும் என்பதைத் தாங்கள் தயவுசெய்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

N.R.E.G.P. என்பது ஒரு அருமையான திட்டம். நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய அருமைத் தலைவி, எங்கள் நெஞ்சம் நிறைந்த அன்னை சோனியா காந்தி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பெரும் முயற்சி எடுத்து, இந்தியாவிலே இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும், குடிமகளுக்கும் ஒரு வருடத்திலே 100 நாட்கள் நிச்சயமாக வேலை என்பதைச் சொல்லி, அதற்கு நாளொன்றுக்கு 80 ரூபாய் ஊதியம் என்று நிர்ணயித்து, அப்படி வேலை கொடுக்க முடியவில்லையென்று சொன்னால், அதற்கான சம்பளத்தை அரசே கொடுத்துவிடும் என்கிற உத்தரவாதத்தை, இன்றைக்குச் சட்டபூர்வமான உரிமையாக்கிக் கொடுத்திருக்கின்ற அந்தத் திட்டம், தமிழகத்திலே, வரக்கூடிய நிதியாண்டில், எல்லா மாவட்டங்களிலும் அமல்படுத்தப்பட இருக்கிறது.





என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே, கிராமங்களுக்குப் போய் நான் பார்த்தேன். பெண்கள் கூட்டம் கூட்டமாக வேலை செய்கிறார்கள்; மிகவும் சந்தோஷமாக வேலை செய்கிறார்கள். பெண்கள் வேலை பார்க்கின்ற இடத்திலே, அவர்களுடைய குழந்தைகளை உறங்காட்டுவதற்கும், அவர்களுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கும் அங்கே தாய்மார்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதற்காகத் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நடைமுறைப்படுத்துகின்றபோது சில இடங்களிலிருந்து சில புகார்கள் வருகின்றன. என்ன புகார் வருகிறதென்று சொன்னால், சில இடங்களிலே மண் கடினமாக இருந்தால், அதற்குக்கூட ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட அந்த விகிதத்தில்தான் ஊதியம் வழங்கப்படும் என்று சொல்லுகின்றபோது, சில இடங்களிலே கடினப் பாறைகள் இருக்கின்றபோது, பாறைகளைத் தோண்டுகின்ற மக்களுக்கு அந்த 80 ரூபாய்ச் சம்பளம் கிடைப்பதில்லை. எனவே, அந்தச் சட்டத்தைத் தளர்த்தி, அந்த விதியைத் தளர்த்தி, 8 மணி நேரம் உழைக்கின்றவர்களுக்கு 80 ரூபாய் கிடைப்பதற்கான ஏற்பாட்டை நீங்கள் செய்யவேண்டும்.

"The Social Audit" என்பதற்காக மத்திய அரசு நியமனம் செய்து, இந்த N.R.E.G.P. என்கிற பணியைப் பார்வையிடுவதற்காக இந்தியா முழுவதும் அனுப்பப்பட்டது ஒரு independent Committee, without any political connection or affiliation. அந்தக் குழு தமிழகத்தை வந்து பார்த்துவிட்டு, அற்புதமாகப் பாராட்டிச் சென்றிருக்கிறது. "இதைப்போன்ற பணிகள் நிறைவாகத் தமிழகத்திலே நடக்கின்றன; இதை நாங்கள் மனதாரப் பாராட்டுகின்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இன்னும் ஒரு படி அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். "The scheme here is functioning in the most transparent way; அதை நாங்கள் பாராட்டுகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற சில மாநிலங்களை ஒப்பிட்டு, இங்கே சிறப்பாக நடக்கிறது' என்று கூறியிருக்கிறார்கள்.

*முற்பகல் 10–30*

மத்திய அரசினுடைய திட்டங்களைப் பொறுத்தவரையில், நாம் சில திட்டங்களுடைய செயல்பாடுகளைப் பார்க்கின்றபோது, நமக்குச் சில குறைகள் இருக்கின்றன. உதாரணமாக, 'பாரத் நிர்மாண்' என்கிற மிகப் பெரிய திட்டத்தை நம்முடைய பிரதமர் அவர்கள்

அறிவித்திருக்கிறார். இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து இடங்களிலும், அடிப்படைக் கட்டுமானப் பணிகளை, சாலைப் போக்குவரத்து வசதிகள் போன்றவற்றைச் செய்கின்ற மிகப் பெரிய பணி. S.S.A. என்று சொல்லக்கூடிய சர்வ சிக்ஷா அபியான். இவையெல்லாம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மாநிலத்திற்குக் கொண்டுவருகிற மிகப்பெரிய மத்திய திட்டங்கள். ஆனால், இந்தத் திட்டங்களிலே கடந்த சில ஆண்டுகளிலே பார்க்கின்றபோது தமிழ்நாட்டினுடைய தேவைகளுக்கும், இந்தத் திட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிபந்தனைகளுக்கும் சற்று சம்பந்தம் இல்லாமல் இருப்பது போன்ற தோற்றம் வருகிறது. இப்பொழுது S.S.A. என்கிற சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தில், அதனுடைய நிதி ஒதுக்கீடு எப்படிச் செய்யப்படுகிறது என்று சொன்னால் ஒரு main criterion, drop outs-பள்ளிக்கூடங்களிலிருந்து விடுபட்டுப்போன மாணவர்கள்; left overs–பள்ளிக்கூடங்களுக்கே போகாதவர்கள்; illiterates–பள்ளிக்கூடங்களையே பார்க்காதவர்கள் என்ற எண்ணிக்கையினுடைய அடிப்படையிலே அந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படுகின்றபோது பல ஆண்டுகளாக ஏறக்குறைய கடந்த 40, 50 ஆண்டுகளாக, பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலேயிருந்து கல்விக்கு மிகப் பெரிய அடித்தளம் போட்டு வளர்த்த நம்முடைய தமிழகத்திலே, அத்தகைய மாணவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவு. உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலத்திலே என்ன நடக்கிறது என்று சொன்னால் அவர்களுக்கு அந்த நிதி ஒதுக்கீடு அதிகமாக வருகின்றபோது ஆயிரம் கோடி ரூபாய் அவர்களுக்கு கடந்த ஆண்டு கிடைத்து, அந்த ஆயிரம் கோடி ரூபாயையும் அவர்கள் செலவழிக்காமல் அதை அப்படியே வைத்துக்கொண்டு அதற்கு அடுத்த ஆண்டு அந்த மாநிலத்தினுடைய நிதிநிலை வளர்ந்துவிட்டதைப்போன்ற அல்லது சரி செய்யப்பட்டுவிட்டதைப்போன்ற தோற்றத்தை கணக்குகளிலே திருத்தி, அவர்கள் மீண்டும் அதிகமாகப் பணம் வாங்கிக்கொள்கிறார்கள். ஆனால், தமிழகம் போன்ற மாநிலங்கள் சிறப்பாக அந்தத் திட்டத்தை அமல்படுத்திய காரணத்தினால் அவர்கள் அந்த நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதற்கான வாய்ப்பு குறைகிறது.

அதைப்போல பாரத் நிர்மாண் திட்டம். இப்பொழுது 500 பேர் இருக்கின்ற குடியிருப்புக்குத்தான் சாலை வசதி என்று சொல்லுகிறார்கள். ஆனால், தமிழகத்திலே நாம் பல ஆண்டுகளாகவே அந்த இடங்களுக்கெல்லாம் சாலை வசதியை ஏற்கெனவே வழங்கியிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசு நிதி ஒதுக்கீடு





செய்கின்றபோது வளர்ந்துவிட்ட, நன்றாக நிருவகிக்கப்படுகின்ற மாநிலங்களில் ஒன்றான தமிழகத்திற்கு தனி நிதி ஒதுக்கீடும், நன்றாக நிருவகிப்பதற்கு அவர்களைப் பாராட்டுகின்ற வகையிலே அதிக நிதி ஒதுக்கீடும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவேண்டிய அவசியம் நமக்கு இருப்பதாக நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதைப்போன்ற பல்வேறு தளங்களிலே நாம் பார்க்கின்றபோது ஒட்டுமொத்தமான செயல்பாடுகள் நன்றாக உள்ளன. ஆங்காங்கே சில இடங்களிலே நிர்வாகச் சிக்கல்கள், சில இடங்களிலே நடைமுறை யதார்த்தங்கள், சில இடங்களிலே அதிகாரிகளுடைய மந்தம், அல்லது அதிகாரிகளுடைய மெத்தனம் இவற்றைப்போன்ற குறைகளால்கூட இந்த ஒட்டுமொத்தமான திட்டங்களில் சில இடங்களிலே முனைகள் மழுங்கியிருந்தாலுங்கூட ஒட்டுமொத்த பார்வையாகப் பார்க்கின்றபோது கடந்த இரண்டு ஆண்டுகள், நல்ல பலன்களை, நல்ல நிறைவான திட்டங்களை நிறைய அளித்திருக்கின்றன என்பதிலே மனச்சாட்சியுள்ள யாருக்கும் குறைபாடு இருக்கமுடியாது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆங்கிலத்திலே, ஒரு அற்புதமான அணுகுமுறையைச் சொல்வார்கள். "After my exit from the scene, I am not judged by what I thought, what I said, what I planned, what I proposed, but only by what I did". நான் இந்த இடத்தைவிட்டு வெளியே போகின்றபோது நான் இருந்த நாட்களில் என்னுடைய செயல்பாட்டை, நான் என்ன நினைத்தேன், நான் என்ன முயற்சித்தேன், நான் என்ன பேசினேன் என்பதை வைத்து யாரும் எடைபோடுவதில்லை. நான் என்ன செய்தேன் என்பதை வைத்து மட்டும்தான் நாட்டு மக்கள் எடைபோடுகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அந்த அணுகுமுறையைப் பார்க்கின்றபோது, நிச்சயமாக இந்த இரண்டு ஆண்டுகளிலே நாம் நிறைய சாதித்திருக்கிறோம். நிறைய பணியாற்றியிருக்கிறோம். ஆனால், success is not a destination, it is always a journey. வெற்றி என்பது இலக்கு அல்ல, அது ஏற்றுக்கொண்டிருக்கின்ற பயணம். ஆகவே, இன்னும் தொடர்ந்து 3 ஆண்டுகள் இந்த அரசை நிறைவாக நடத்தவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதிலே பல்வேறு விதமான மத்திய முதலீடுகளைப் பெறவேண்டிய கடமையில், இது ஒரு அற்புதமான நேரம். இப்போது மத்தியிலே ஆளுகின்ற ஆட்சி, தமிழகத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கின்ற

ஓர் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தலைவி, அன்னை சோனியா காந்தி அவர்களுடைய இதயத்திலே தமிழகத்திற்கென்று ஒரு தனி இடம் இருக்கிறது. தமிழ் மக்களுக்கென்று ஒரு தனி இடம் இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாட்டு அரசும் எதைக் கேட்டாலும் அதைக் கொடுத்தே தீரவேண்டுமென்கிற நிறைவான உள்ளம் இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அன்னை சோனியா காந்தி இருக்கின்ற காலத்திலே, அவர்கள் வழிகாட்டுதலைப் பெற்றிருக்கின்ற பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்கள் இருக்கின்ற காலத்திலே தமிழகத்திற்கு நிறைய வேலைகளை, நிறைய திட்டங்களைப் பெறவேண்டும்.

நேற்றுகூட நம்முடைய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், மரியாதைக்குரிய திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசுகின்றபோது சேது சமுத்திரத் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு அதிலே தயக்கம் காட்டுவதைப்போலக்கூட, அவர்களுக்கு லேசாக ஒரு மனக்குறை இருப்பதை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அதை உடனடியாகச் செய்யவேண்டும், அதை மாநில அரசு நிர்பந்திக்க வேண்டும் என்றெல்லாம் நேற்று சொன்னார்கள். நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். சேது சமுத்திரம் என்பது வாராது வந்த ஒரு மாமணி. இன்றல்ல, பல்வேறு அரசுகள். தமிழகத்திலே இன்றிருக்கிற அரசு அல்ல. நேற்று இருந்த அரசு அல்ல. முந்தாநாள் இருந்த அரசு அல்ல. இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தும் சுதந்திரத்திற்கு முன்பும் இருந்த அரசுகள், அன்னிய ஏகாதிபத்தியத்திலே இருந்த நாட்கள், பண்டித ஜவஹர்லால் நேருவினுடைய நாட்கள், இப்படிப்பட்ட நாட்களில் எல்லாம் நாம் கனவு கண்ட அந்த மாபெரும் திட்டம் நம் கைக்கு எட்டுகின்ற தூரத்திலே வருகின்றபோது, இன்று அதைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரு பெரிய முயற்சி நடப்பதைப் பார்க்கின்றபோது நமக்கு நெஞ்சமெல்லாம் வலிக்கிறது.

முற்பகல் *10-35*

தமிழகத்தினுடைய அடிப்படைக் கட்டுமானப் பணிக்கு சேது சமுத்திரத் திட்டம் என்பது ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதம். பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே நெய்வேலி அனல் மின் நிலையம் தொடங்குகின்றபோது, அவர்கள் அனல் மின் நிலையம் இத்தனை ஆயிரம் மெகா வாட்களைத் தமிழகத்திற்கு நிரந்தரமாகத் தரும் என்று ஒருவேளை கற்பனையிலே பார்த்திருப்பார்கள். அன்று ஒரு சிறிய முயற்சியாக 27 கோடி ரூபாயிலே துவங்கப்பட்ட



அந்த முயற்சி இன்று எவ்வளவு பெரிய ஆலமரமாக வளர்ந்து வருடம் ஒன்றிற்கு நாம் பெறுகின்ற ஈவுத் தொகை மட்டுமே ஆயிரக்கணக்கான கோடி ரூபாயைத் தொடுவது மட்டுமல்லாமல் மின்சாரத்தைத் தொடர்ந்து தருகிறது.

நம்முடைய அண்ணன் வீரபாண்டியார் இருக்கின்ற மாவட்டத்திலே இருக்கின்ற சேலம் உருக்குத் தொழிற்சாலை நம்முடைய கலைஞர் அவர்கள் காலத்தில், அன்னை இந்திரா காந்தி அவர்கள் இருந்த காலத்தில், ஒரு உருட்டுத் தொற்சாலையாக, Rolling Mill ஆகத்தான் தொடங்கப்பட்டது. ஆனால், இப்போது பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடுகளை அது பெற்றிருக்கிறது. அதைப்போல 'BHEL' நிறுவனம். இப்படிப்பட்ட பிரம்மாண்டங்களை அந்தக் காலத்திலே முன்வைத்த தலைவர்கள், அவர்கள் வாழ்ந்து இதையெல்லாம் பார்ப்போம் என்று எண்ணி அவற்றைப் பார்க்கவில்லை. அவர்களுக்குப் பிறகு, அவர்கள் தலைமுறைக்குப் பிறகு வருகிற தமிழகம் பல்வேறு அடிப்படைக் கட்டுமானப் பணிகளைப் பெறவேண்டும் என்கிற தொலைநோக்குப் பார்வையிலே சிந்தித்த திட்டங்கள்தான் இன்று நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலையாக, சேலம் உருக்காலையாக, Bharat Heavy Electricals தொழிற்சாலையாக தமிழகத்தினுடைய உயிரோட்டத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படையிலே வலு சேர்க்கின்ற மிகப் பெரிய நிறுவனங்களாக *25* ஆண்டுகளிலே, *30* ஆண்டுகளிலே, *40* ஆண்டுகளிலே வளர்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். அதைப்போல சேது சமுத்திரத் திட்டம் என்பது இன்று நாம் கனவு கண்டு நாம், இந்தத் தலைமுறை, வருங்காலத் தமிழ்த் தலைமுறைக்கு விட்டுச்செல்லுகின்ற மிகப் பெரிய கொடை. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. சிலர் சொல்லுகிறார்கள்—அது ஒரு பெரிய நினைவாலயம், ஒரு நினைவுச் சின்னம், இராமபிரானுடைய வாழ்க்கையினுடைய உச்சகட்டப் போரிலே விழப்பட்ட வரலாற்றுச் சின்னம் என்று சொன்னார்கள். அந்த உணர்வுகளையெல்லாம் நாங்கள் மதிக்கிறோம். இராமர் என்கிற தத்துவம் இந்த நாட்டிலே பிறந்த ஒவ்வொரு இந்தியனும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தத்துவம். அவன் இசுலாமியனாக இருக்கலாம், கிருஸ்துவனாக இருக்கலாம், ஆனால் காந்தியடிகளுடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றுகின்ற நாங்கள், 'இராம்' என்கிற அந்தத்

தத்துவத்தைப் பார்க்கின்றபோது 'Ram is a symbol of all that is noble in Indian culture, all that is noble in Indian spirituality and all that is the best in the Indian soil' என்றுதான் நாங்கள் இராமைப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எங்களுக்கு அதை ஊனப்படுத்த வேண்டுமென்கிற எண்ணம் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடைசியாகச் சொன்னார்கள். அந்தக் கால்வாய்க்கு வேண்டுமானலும் 'இராமன் கால்வாய்' என்று பேர் வைத்துக்கொள்ளலாமே என்று சொன்னார்கள். இதைவிட வேறு என்ன இராமனுக்கு மிகப்பெரிய அடையாளச் சின்னம், வரலாற்றுச் சின்னம் இருக்க முடியும்? இதைவிடப் பெரிய தத்துவம் எப்படி இருக்க முடியும்?

இப்போது மத்திய அரசு கங்கைக் கரையில், கங்கை நதியினுடைய பக்கத்திலே சாலைகள் போடுவதற்கு 40,000 கோடி ரூபாய் அறிவித்திருக்கிறது. கங்கை ஒரு புனிதமான நதி. ஆனால், கங்கை என்கிற புனிதமான நதியிலே பாலங்கள் கட்டுவதை அந்த மாநில மக்கள் யாரும் தடுப்பதில்லை. அந்தக் கங்கைக் கரையை அகழ்ந்து அதற்குக்கீழே கால்வாய்களை அமைப்பதை புனிதமான கங்கையைப் பாழ்படுத்துகிறீர்களே என்று எந்த அரசியல் இயக்கமும் கோஷம் போடவில்லை. 40,000 கோடி ரூபாய் மத்திய அரசு பணம் தருகிறது என்று சொன்னால் என் மடியைப் பிடி, என்னைப் பிடி என்று போய் வாங்கிக்கொள்கிறார்கள். அங்கெல்லாம் புண்படாத மத உணர்வு தமிழ்நாட்டினுடைய சேது சமுத்திரத்திற்கு வருகின்றபோது மட்டும் புண்பட்டுப்போவதைத்தான் எங்களைப் போன்றவர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு சின்ன சந்தேகம் வருகிறது. குஜராத்திலே இந்த ஆண்டு அங்கே இருக்கின்ற துறைமுகங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தி இந்தியாவினுடைய ஒட்டுமொத்த கடல் வணிகத்தையும் அங்கே குவிப்பதற்கான முயற்சிகளை அந்த மாநில அரசு மேற்கொண்டிருக்கிறது. A new project for Gujarat harbours. ஒருவேளை அந்த குஜராத் மாநில துறைமுகங்கள் செழிப்பாக வளர வேண்டுமென்பதற்காக துத்துக்குடி துறைமுகம் தேய வேண்டுமென்று சிலர் எதிர்பார்க்கிறார்களா என்கிற சந்தேகம்கூட எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒளி) அதனால்தான் நான் சொல்லுவேன். இன்னும் 50 ஆண்டுகள், 60 ஆண்டுகள் கழித்து வரப்போகின்ற தமிழ்த் தலைமுறை—யார் வருவார், யார் இருப்பார், யார் போவார் என்று





தெரியாது. அன்று யார் முதலமைச்சராக இருப்பார், அன்று யார் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று தெரியாது—தமிழ்ச் சமுதாயத்திலே வாழ்கின்ற மக்கள் சேது சமுத்திரம் என்கிற மிகப் பெரிய திட்டத்தை இன்று வாழ்ந்த தமிழர்கள் தங்களுக்கு விட்டுப்போனார்கள் என்ற உணர்வோடு நம்மை நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதுதான் எங்களைப் போன்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அருமைக்குரிய நண்பர் திரு. கோவிந்தசாமி அவர்கள்கூடக் கேட்டார்கள், மத்திய அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது என்று. சில நல்ல முயற்சிகளைச் செய்கின்றபோது அதற்கு வருகின்ற தடைகளை அரசியல்ரீதியாக எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள்கூட நந்திகிராமத்திலே ஒரு தொழிற்சாலை துவங்க வேண்டுமென்று முயற்சித்தீர்கள். ஆனால், நினைத்தபடி அதை நடத்த முடியவில்லை. அதற்கான எதிர்ப்பு வருகின்றபோது எதிர்க்கின்றவர்களையும் உள்ளடக்கி அவர்களையும் ஜனநாயகரீதியாக சந்தித்து அவர்கள் மனதிலே அந்தக் கருத்தினுடைய தாக்கத்தை அகற்றிய பிறகுதான் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பதுதான் ஜனநாயகத்தினுடைய தத்துவம்.

முற்பகல் 10-40

அதற்கான முயற்சிகளை நாம் எல்லோரும் கூட்டாக இருந்து, மதச்சார்பற்ற அரசியலில் முன்நிற்கின்ற கட்சிகள், அந்தச் சதியை முறியடித்து, இந்த மிகப்பெரிய திட்டத்தை நிறைவேற்றி, தமிழக மக்களுக்கு நல்வாழ்வு சேர்க்க வேண்டுமென்கிற எண்ணத்திலே, காங்கிரஸ் கட்சிக்கு சற்றும் மாற்றுக்கருத்து இல்லை என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன்.

கடந்த சில நாட்களாக இந்தச் சட்டமன்றத்திலே முக்கியமான சில விவாதங்கள் நடந்தன. அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைப் பற்றி மிக அதிகமாக நாம் பேசினோம். நம்மில் அநேகருக்கு, காங்கிரஸ் கட்சியைப் பார்க்கின்றவர்களுக்கு, நாங்கள் ஏன் விடுதலைப் புலிகளை எதிர்க்கிறோம் என்பதற்கு ஒரே காரணம் என்று மட்டும் நினைக்கிறார்கள். அதற்குக் காரணம், எங்கள் இனிய தலைவர், எங்கள் வாழ்க்கையிலே, எங்கள் கனவுகளின் நாயகனாக, எங்கள் கற்பனைகளுடைய கதாசிரியராக, எங்களைப்போன்ற இளைஞர்களையெல்லாம் காங்கிரஸ் கட்சியிலே அரவணைத்த எங்கள் அழகான தலைவன், அற்புதமான தலைவன், உலகம் முழுவதும் உற்றுப்பார்த்த எங்கள் தலைவன் இராஜிவ் காந்தி அவர்களைக்

கொன்றுவிட்டார்கள் என்பது மட்டுமல்ல, எங்கள் தலைவர்கள் கொல்லப்படுவதுதான் எங்களுடைய வரலாறு. எங்கள் தலைவர் மகாத்மா காந்தியிலிருந்து, எங்கள் அன்னை இந்திரா காந்தியிலிருந்து, எங்கள் தலைவர் இராஜிவ் காந்தி வரை, எங்கள் தலைவர்கள் எப்பொழுதெல்லாம் கொல்லப்பட்டிருக்கிறார்களோ, அப்பொழுதெல்லாம் இந்த நாட்டில் ஜனநாயகமும், மதச்சார்பின்மையும் தழைத்திருக்கிறது. ஆகவேதான், காங்கிரஸ் கட்சியினுடைய வீர வரலாற்றிலே ஒரு மரணத்திற்காக, ஒரு கொலைக்காக யாரையும் பழிவாங்குகிறோம், யாரையும் வெறுக்கிறோம் என்பதை காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற எந்த சாதாரணத் தொண்டனும்கூட ஏற்றுக்கொள்ளமாட்டான்.

நாங்கள் இன்று விடுதலைப் புலிகளை ஏன் எதிர்க்கிறோம் என்று சொன்னால், விடுதலைப் புலிகளினுடைய கருத்தியல் தாக்கத்தால், தமிழகத்திலே ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத ஒரு இளைஞர் கூட்டம் வளர்ந்துவிடக் கூடாது என்பதுதான் எங்களுக்கு இருக்கின்ற மிகப் பெரிய குறை. ஓர் ஆயுதக் கலாச்சாரம் பரவக்கூடாது. நேற்றுகூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது, கொஞ்சம் நெகிழ்ந்து சொன்னார்கள், “எப்படியெல்லாம் அவர்களுக்கு நான் எடுத்துச் சொன்னேன். அமரர் இராஜிவ் காந்தி அவர்கள், பிரபாகரனைப் பற்றி என்னிடம் எவ்வளவு புகழ்ந்து பேசினார். புகழ்ந்து சொன்ன அந்த வார்த்தைகளையெல்லாம் மறந்து விட்டார்களே” என்று அவர்கள் நெஞ்சம் நெகிழ்ந்து என்னிடம் சொல்கின்றபோது, நம் எதிர்காலத் தலைமுறைக்கு என்ன நினைக்கிறோம் என்று சொன்னால்—அற்புதமாகச் சொன்னார் நம்முடைய துணை சபாநாயகர்—தீவிரவாதம் என்பது வேறு, சட்டம் ஒழுங்கு என்பது வேறு. இந்த இலங்கைப் புலிப் பிரச்சினையை தீவிரவாதம் என்கிற அடிப்படையிலே பார்க்கிறோம்; இது இந்தியாவிலே இருக்கின்ற மிகப்பெரிய சவால். 21 ஆம் நூற்றாண்டிற்கு இருக்கின்ற மிகப் பெரிய சவால், இந்திய நாட்டிலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநில அரசுகளுக்கு, இந்திய நாட்டின் மத்திய அரசுக்கு இருக்கின்ற மிகப் பெரிய சவால் வளர்ச்சியும், முன்னேற்றமும் மட்டுமல்ல. வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் விரோதமாக இருக்கின்ற தீவிரவாதத்தைத் தடுப்பதுதான். இந்தியாவிலே 156 மாவட்டங்கள் முழுமையாக மாவோயிஸ்ட்டுகளுடைய control—ல் இருப்பதாக மத்திய அரசினுடைய புள்ளிவிவரம் சொல்கிறது. 156 மாவட்டங்கள். அந்த மாவட்டங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இருந்தாலும்கூட, ஆட்சி நிர்வாகம் இருந்தாலும்கூட, அந்த



மாவட்டங்களிலே மிகப் பெரும்பான்மையான பகுதிகள், அவர்களுடைய ஆளுகைக்குள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். தீவிரவாதிகளுடைய வருகையைத் தடுப்பது என்பது, ஒரே நாளில் நடந்துவிடக்கூடிய விஷயமல்ல.

இங்கிலாந்து தேசத்தினுடைய புகழ்பெற்ற பிரதமர் மார்க்கரெட் தாட்சர் அவர்களைக் கொலையாளிகள், தீவிரவாதிகள் சுடுவதற்கு முயற்சிக்கின்றபோது, அவர்கள் தப்பிவிட்டார்கள், இங்கிலாந்து தேசத்தினுடைய முன்னாள் பிரதமர் மார்க்கரெட் தாட்சர் அவர்களுக்கு அந்தத் தீவிரவாதி எழுதினான், “Mrs. Thatcher, we have to be lucky only once, you have to be lucky always.” நீங்கள் ஒவ்வொரு நாளும் அதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டும். ஆனால், உங்களைக் கொல்ல நினைக்கின்ற நாங்கள், ஒரு நாள் மட்டும் அதிர்ஷ்டசாலியாக இருந்தால்போதும் என்று சொன்னான்.

தீவிரவாதம் என்பது 24 மணி நேரமும் கண்காணிக்க வேண்டியது. நமக்கு பெரிய, நீண்ட கடற்கரை உள்ளது. நம் நாடு, மூன்று பக்கங்களும் கடலால் சூழ்ந்த மிகப் பெரிய நாடு. மிகப் பெரிய நிலப்பரப்பு. மிகப் பெரிய மொழிகளையும், சாதிகளையும் உள்ளடக்கிய நாட்டிலே, அடையாளம் பிரித்து, இவர்கள்தான் தீவிரவாதிகள் என்று யாரும் எழுதிக்கொண்டு வருவதில்லை. ஆனால், அதை அடிப்படையிலே கட்டுப்படுத்துவதற்கு உறுதியான கரம் வேண்டும். நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். நேற்றைய முன்தினம் அவர்கள் இந்த மன்றத்திலே பதில் சொன்னபோது, “உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இப்படி இருக்கின்றது. சட்டத்திலே இடம் இல்லை” என்று சொன்னார்கள். எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், “இல்லை இல்லை. இது சட்டத்திலே இருக்கிறது. நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம்” என்று சொன்னார்கள். “நான் பெரியவன்; எனக்கு 84 வயது; தமிழகத்தினுடைய மூத்த முதலமைச்சர், நான் என்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ள மாட்டேன்” என்று அவர்கள் சொல்லவில்லை. சட்ட ஆலோசகர்களைச் சந்தித்து, அதற்கான சட்டத்தைக் கண்டுபிடித்து, அந்தச் சட்டத்திலே நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மாதத்திற்கு முன்னால், இரண்டு மாதங்களுக்கு முன்னால், மாவோயிஸ்ட்டுகள்கூட, தமிழகத்திற்கு வந்ததாகத் தகவல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. தேனி பகுதியிலே அவர்களது

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 பிப்ரவரி 1

நடமாட்டம் இருப்பதை நம்முடைய 'க்யூ பிராஞ்ச்' போலீசார் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களையும் மிகக் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். இரவு நேரங்களிலே ஊடுருவுகின்ற சர்ப்பங்களைப்போன்று, விஷ நாகங்களைப்போன்று, அவர்கள் யாரும் அறியாமல், எப்போதும் நாம் பார்க்காமல் ஊடுருவி, ஒரு நாள் அவர்கள் காலைக் கடித்த பின்புதான் நமக்குத் தெரியும் என்கிற சூழ்நிலை ஏற்படுகின்றபோது, நமக்காகவே நாம் வருந்த வேண்டிய சூழ்நிலை வரும். எனவே, அந்த விடுதலைப் புலிகள் என்கிற அந்த அமைப்பினர்மீதும், தீவிரவாதத்தில் நம்பிக்கையுள்ள மற்ற யாராக இருந்தாலும், அவர்கள் மதவாத சக்திகளாக இருந்தாலும் சரி, மாவோயிஸ்ட்டுகளாக இருந்தாலும் சரி, விடுதலைப் புலிகளாக இருந்தாலும் சரி, அவர்கள்மீது மிகக் கடினமான நடவடிக்கை எடுத்து, தீவிரவாதத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

சமீப காலமாக, மத வெறியினுடைய அடிப்படையிலே ஒரு அணி திரட்டுவதற்கான அடிக்கல் நாட்டுகின்ற பணி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. சமீப காலமாக ஒடுங்கியிருந்த அந்த மதவெறி அரசியல், இப்பொழுது சற்று சற்று அதிகமாகி, அது மீண்டும் ஒரு பெரிய தாக்கத்திற்குத் தன்னைத் தயார் செய்வதை எங்களைப் போன்றவர்களால் உணர்ந்துகொள்ள முடிகிறது.

தென்காசி, கடையநல்லூர் பகுதிகளிலே தற்போது நடந்த சம்பவங்களைப்பற்றி நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அதிலே வழக்கு இருக்கிற காரணத்தால், நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. அதைப்போன்ற சக்திகள் யார், இதைப்போன்ற விஷ வித்துக்களை விதைப்பதற்காக அரசியல் ஆதாயம் தேடி தமிழகத்தை அரசியல் களமாகத் தயாரிப்பதற்கு எந்தெந்த சக்திகள், பிற மாநில சக்திகள், உள் மாநில சக்திகள் எவ்வாறு அவர்கள் வருகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் தாங்கள் தயவுசெய்து சற்று கவனமாக இருந்து அதைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அருமை நண்பர், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. மணி அவர்கள் புதிய மாவட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கோரிக்கையை காங்கிரஸ் கட்சியின் சார்பிலும்



2008 பிப்ரவரி 1] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். நம்முடைய 39 நாடாளுமன்றத் தொகுதிகளையும், 39 மாவட்டங்களாக அறிவிப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இப்பொழுது Delimitation Commission என்பது முடிந்துவிட்டது. எனவே, இந்த 39 நாடாளுமன்றத் தொகுதிகளையும் 39 மாவட்டங்களாக அறிவிக்கலாம். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியையும் ஒரு தாலுகாவாக அறிவிக்கலாம். ஏற்கெனவே நமக்கு 31 மாவட்டங்கள் இருக்கின்றன, இன்னும் ஒரு எட்டு மாவட்டங்கள்தான். அரசியல்ரீதியான நிர்வாகத்திற்கும், revenue நிர்வாகத்திற்கும். திட்டங்களை முறைப்படுத்தி மக்கள் பிரதிநிதிகள் அதை மேற்பார்வையிடுவதற்கும், ஒரே நாடாளுமன்ற உறுப்பினர், ஒரே சட்டமன்ற உறுப்பினர் இரண்டு, மூன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சென்று பார்ப்பதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்கும்வகையில், அதைப்போன்ற ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசினுடைய திட்டங்களைப் பெறவேண்டுமென்று நான் தொடக்கத்திலே வலியுறுத்தினேன். மத்திய அமைச்சர்கள் நம்முடைய அமைச்சர்களாக இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய மாநிலம் பெற்றிருக்கின்ற பெருமையை நாம் பதிவு செய்து அவர்களைப் பாராட்டவேண்டும். நேற்றுகூட ஒரு தகவல் வந்திருக்கிறது. நம்முடைய மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் சாலைப் போக்குவரத்திற்காக செய்திருக்கின்ற நிதி ஒதுக்கீட்டிலே, இந்தியாவிலேயே தமிழகத்திற்குத்தான் அதிகம் என்கிற செய்தி வருகின்றபோது நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, அருமைக்குரிய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த நம்முடைய இரயில்வே அமைச்சர் திரு. வேலு அவர்களும்கூட, நல்ல பல பணிகளைச் செய்து பல இடங்களிலே இரயில்வே துறையை நிறைய விருத்தி செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே மாற்றுக் கருத்து இல்லை.

அடிக்கடி தென் மாவட்ட மக்கள் கேட்கின்ற இந்த விழுப்புரம்— திண்டுக்கல் அகல இரயில் பாதைக்கு ஒரு விடிவு காலம் வேண்டும். அதற்கான கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 பிப்ரவரி 1

பிரதமரைச் சந்தித்தபோது நேரடியாக வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதிலே தமிழகத்திடம் பங்கு கேட்பதாக நான் அறிகிறேன். அப்படிப் பங்கு கேட்பதிலே நியாயம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏனென்று சொன்னால், we are not stakeholders in the Railways. இரயில்வேயிலே நாம் பங்குதாரர்கள் அல்ல. அதிலும், இன்று தமிழகத்திலே, இந்தியாவிலே அதிக இலாபகரமாக ஓடுகிற வழித்தடம் என்பது தென் மாவட்டங்களை இணைக்கின்ற வழித்தடம், கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வருகின்ற அந்த வழித்தடம் என்பது ஏறக்குறைய 15 விழுக்காடு இலாபத்தை ஈட்டித் தருகின்ற பயணப் பாதையாக இருக்கிறது. அந்தப் பயணப் பாதையை விரிவுபடுத்தித்தர, இரட்டைப் பாதையாக ஆக்கித்தர நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய செல்வாக்கை, தன்னுடைய நல்லெண்ணத்தை, நன்மதிப்பை மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லி, அதைப் பெற்றுத்தர வேண்டும். எங்கள் இயக்கத்தைச் சார்ந்த திரு. சுதர்சன நாச்சியப்பன் அவர்களும், திரு. கார்வேந்தன் அவர்களும், திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்களும் திட்டக் கமிஷனின் துணைத் தலைவரைப் பார்த்து, இதை வலியுறுத்தியிருக்கிறார்கள். திரு. சுதர்சன நாச்சியப்பன் அவர்களுக்கு திட்டக் கமிஷன் ஒரு உறுதியை வழங்கியிருக்கிறது. "இதை நாங்கள் மறு பரிசீலனை செய்கிறோம்" என்கிற உறுதியை திட்டக் கமிஷன் வழங்கியிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையிலே அதை எடுத்துப் பணியாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நல்ல நிர்வாகம் என்பது ஒரு கூட்டு முயற்சி. ஆளுகின்ற கட்சிக்கு மட்டுமே அந்தப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒதுங்கிக் கொள்வதென்பது நல்ல ஜனநாயகம் ஆகாது. ஆகவே, பாராட்டவேண்டிய இடத்திலே பாராட்டுவோம்; நீங்கள் தடுமாறுகிற இடத்திலே, தடுமாற்றலைச் சுட்டிக்காட்டுவோம்; தவறுகின்ற இடத்திலே, இதுதான் தவறு என்று சொல்லுவோம்; நாங்கள் கைப் பிடிக்க வருகின்ற நேரத்திலே, உங்களுக்குத் தோள் கொடுப்போம்; தொடரட்டும் உங்கள் பணி என்று சொல்லி காங்கிரஸ் கட்சி சார்பாக வாழ்த்தி, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.



2008 பிப்ரவரி 1]

முற்பகல் 10-50

***செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரைமீது பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துகளை இங்கே எடுத்துரைக்க வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், நான் சொல்லப்போகிற கருத்துகள் ஆளுங்கட்சியினருக்கு மகிழ்ச்சியை அளிக்குமா என்பது சந்தேகமே. (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர் உரை என்பது curtain raiser என்று சொல்வார்கள்; ஒரு நாடகம் தொடங்குவதற்கு முன்பாகத் திரையை உயர்த்துவார்கள், அதைப் போன்றது. வரப்போகும் நிதியாண்டில் அரசாங்கம் என்னென்ன திட்டங்களை நடைமுறைப்படுத்தப்போகிறது, என்னென்ன கொள்கைகளைக் கடைப்பிடிக்கப்போகிறது என்பதை எடுத்துரைத்து, அந்த இலக்குகளை அடைவதற்கு என்ன வழிமுறைகளைக் கையாளப்போகிறது என்று சொல்லுகின்ற ஒரு தொலைநோக்குப் பார்வையுடைய ஒரு கருவிதான் ஆளுநர் உரை. இத்தகைய, ஒரு vision என்பார்கள்—தொலைநோக்குப் பார்வையையும்—direction என்பார்கள்—வழிகாட்டுதலையும்தான் ஆளுநர் உரையில் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், துரதிருஷ்டவசமாக இங்கே வாசிக்கப்பட்ட ஆளுநர் உரையில் அத்தகைய தொலைநோக்குப் பார்வையும் இல்லை; அத்தகைய வழிகாட்டுதல் முறைகளும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரை என்பது மக்கள் நலன் என்னும் இலக்கை அடைவதற்கு, நம்மை அழைத்துச் செல்கின்ற, அரசை அழைத்துச் செல்கின்ற, ஒரு வாகனத்தைப் போன்றதாகும். ஒரு விமானத்தை ஓட்டுகின்ற பைலட்டிற்கு, விமானம் ஓட்டிக்கு, செல்கின்ற ஊர் பெயர் மட்டும் தெரிந்தால் போதாது. அந்த ஊரைச் சென்றடைவதற்கு என்ன வழி, எப்படிச் செல்லவேண்டும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும். கப்பலைச் செலுத்துகின்ற மாலுமிக்கு போகவேண்டிய இடத்தின் பெயர் மட்டும் தெரிந்தால் போதாது, அந்த ஊர் போய்ச் சேருவதற்கான வழியும் தெரியவேண்டும். அப்படி வழி தெரியாமல் கடலில் பயணம் செய்தால் ஆழ்கடலில் சிக்கிக்கொண்டு தத்தளிக்க வேண்டியதுதான். அப்படித் தத்தளிக்கின்ற ஒரு வாகனமாகத்தான் இந்த ஆளுநர் உரை எங்களுக்குக் காட்சியளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாமே நன்றாக இருக்கிறது; தமிழ்நாட்டில் இன்று எல்லாமே நன்றாக

இருக்கிறது என்று முதலமைச்சர் சொல்கிறார். அரசும் அப்படியே சொல்கிறது. இந்த அரசு தயாரித்துக் கொடுத்த ஆளுநர் உரையில் எல்லாமே நன்றாக இருக்கிறது என்று ஆளுநரும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இங்கே சற்று முன்பு பேசிய நண்பர் பேசிய பேச்சு ஆளுங்கட்சியினருக்கு, குறிப்பாக முதலமைச்சருக்கு இதமாக இருந்திருக்கும். கிட்டத்தட்ட இதுவரை பேசிய எல்லோருமே அப்படித்தான் அரசைத் தாலாட்டுவதுபோல், முதலமைச்சருக்கு லாலி பாடுவதைப்போல் பேசியிருக்கிறார்கள். ஆனால், யாராவது ஒருவர் உண்மையைப் பேச வேண்டும் அல்லவா? இன்று நாட்டின் நிலைமை மிகவும் மோசமான திசையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. யாராவது ஒருவர் உண்மையை எடுத்துரைக்க வேண்டும். அதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* உண்மையை எடுத்துரைப்பதும், இடித்துரைப்பதும்தான் எதிர்க்கட்சித் தலைவரின் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கருத்துகள் சொல்வதிலே ஒன்றும் இல்லை. ஆனால் இங்கே பேசியவர்கள் யாருமே உண்மையைப் பேசவில்லை என்று ஒரு பொய்யான செய்தியை இங்கே சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் அழுத்தமாக இங்கே மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக மறுக்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை பேசியவர்கள் உண்மையைப் பேசவில்லை என்று நான் சொல்லவில்லை. யாராவது ஒருவர் உண்மையைப் பேச வேண்டும். அந்த உண்மையைப் பேசத்தான் நான் வந்திருக்கிறேன் என்றுதான் நான் சொன்னேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஆளுநர் உரை முழுவதிலும் மாநில அரசு பொறுப்பு ஏற்கவேண்டிய விஷயங்களுக்கு எல்லாம் பொறுப்பேற்காமல் அந்தப் பொறுப்பைத் தட்டிக்கழித்து



மத்திய அரசுமீது பழியைச் சுமத்தி இருக்கிறது. மத்திய அரசுமீது பொறுப்பைச் சுமத்தி இருக்கிறது. இவ்வாறு செய்வதனால் மாநில அரசு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைத் தட்டிக் கழித்திருக்கிறது என்றுதான் கூறவேண்டும். மாநில அரசு என்பது மக்களுடைய உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, உடனடி நிவாரணத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சில வீணான திட்டங்களுக்காக மக்கள் நிவாரணப் பணிகளுக்குச் செலவிட வேண்டிய நிதியை இத்தகைய திட்டங்களுக்கு வீணடிப்பதும் தவறே.

*முற்பகல் 10-55*

எங்கெல்லாம் மாநில அரசால் முழுமையாக மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியவில்லையோ, அங்கெல்லாம் மத்திய அரசின் உதவியையும், நிதி உதவியையும் நாடிப் பெறுவதில் தவறில்லை. ஆனால், இந்த ஆளுநர் உரையில் எதற்கெடுத்தாலும் மைய அரசைக் கேட்டிருக்கிறோம், மத்திய அரசிடம் கோரிக்கை வைத்திருக்கிறோம், மத்திய அரசு இதைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறோம் என்று பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படிப் பல விஷயங்களை எடுத்துப் பார்த்தால், எதுவுமே புதிய விஷயம் அல்ல. ஏற்கெனவே இருந்த அரசுகள், இதே கோரிக்கைகளை வரிசையாக மத்திய அரசுக்கு வைக்கத்தான் செய்திருக்கின்றன. உதாரணத்திற்கு, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், Finance Commission பரிந்துரைகள் மூலமாக மாநிலங்களுக்குத் தேவையான நிதி அதிகாரங்களை அனுப்புதல், தமிழ்நாடு போன்ற தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு உதவி செய்வதற்காக நதிகளை இணைப்பது போன்ற திட்டங்கள் புதிய பிரச்சினைகள் அல்ல; ஏதோ இந்த அரசுக்கு உதித்த புதிய யோசனைகளும் அல்ல.

தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும். தற்போது மத்தியில் இருக்கின்ற அரசு, மாநில மக்களின் கோரிக்கைகளை நிறைவேற விடாமல், மாநில மக்களின் உரிமைகளையெல்லாம் தட்டிக்கழித்து எப்படிப் போட்டு மிதித்தார்கள் என்பதைத் தமிழக மக்கள் மறந்துவிடவில்லை. நான் முதலமைச்சராக இருக்கின்றபோது, தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பலப்பல திட்டங்கள், மத்தியில் தி.மு.க. அமைச்சர்கள் இருந்த காரணத்தினால் தடுக்கப்பட்டன, தடை செய்யப்பட்டன. என்மீது இருந்த தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியைத்தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை. இதனால் தமிழக மக்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். 2006—ல் நடைபெற்ற தேர்தல்

நேரத்தில் மத்திய அமைச்சர்கள் செய்த பிரச்சாரத்தைத் தமிழக மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். என்ன சொன்னார்கள்? மத்தியிலும் அதே கூட்டணி ஆட்சியில் இருந்தால், மாநிலத்திலும் அதே கட்சி ஆட்சியில் இருந்தால், மாநிலத்திற்கு நிறைய நன்மைகள் கிடைக்கும். நிறைய நல்ல உதவிகள் கிடைக்கும் என்றார்கள். ஆனால், இன்று மத்தியிலும் தி.மு.க. இருக்கிறது, மாநிலத்திலும் தி.மு.க. இருக்கிறது. மத்தியிலும் காங்கிரஸ் போன்ற கூட்டணிக் கட்சிகள் இருக்கின்றன. இங்கேயும் அதே கட்சிகள் ஆதரவு கொடுக்கின்றன. ஆனால், இதனால் என்ன பார்க்கிறோம்? மத்திய அரசைத் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காக மாநில அரசு, மாநில உரிமைகளை விட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலும் அவர்களே ஆட்சியில் இருப்பதால் உறுதியாக, ஆணித்தரமாக வலியுறுத்தி சிலவற்றைக் கேட்டால், எங்கே மத்திய அரசு தவறாக எண்ணுமோ, எங்கே மத்தியில் ஆட்சியில் இருப்பவர்கள் மனம் நோகுமோ என்று பயந்து, மாநிலத்திற்காக தட்டிக் கேட்கவேண்டிய உரிமைகளைக்கூட விட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் நதி நீர் இணைப்பு போன்ற தமிழகத்திற்கு அத்தியாவசியமான திட்டத்தைக்கூட நிறைவேற்றவிடாமல் மத்திய அரசு தடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு மாநில அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

ஒரு மாநிலம் முன்னேற வேண்டுமானால், அரசின் எத்தகைய திட்டங்களாக இருந்தாலும், அவற்றை நிறைவேற்ற வேண்டுமானால், தொழில் ரீதியாக, கல்வி ரீதியாக, எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், நல்ல விதமான முன்னேற்றம் அடைய வேண்டுமானால், அதற்கு மிக மிக அவசியம் சட்டம்-ஒழுங்கு காக்கப்பட வேண்டும். 2006 ஆம் ஆண்டு வரை அமைதிப் பூங்காவாக இருந்த தமிழ்நாடு, இந்த அரசு வந்த பின்னர் சமூக விரோத சக்திகளுக்கும், குற்றவாளிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும், பயங்கரவாதிகளுக்கும் நல்லதொரு புகலிடமாக மாறிக் கொண்டிருக்கிறது. நான் முதலமைச்சராக இருந்தபோது, தீவிரவாத அமைப்புகளையும், பயங்கரவாத சக்திகளையும் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கினேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய ஆட்சிக் காலத்தில் தீவிரவாத, பயங்கரவாத நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் நிகழ்ந்தன என்ற பேச்சுக்கே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இருந்ததால்தான் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து மட்டுமல்ல, உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழிலதிபர்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க இங்கே



ஓடோடி வந்தார்கள். 2006 ஆம் ஆண்டு வரை அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகம் இன்று வன்முறைக் காடாக, ஆயுதக் காடாக மாறிவிட்டது.

முற்பகல் 11-00

இன்றுள்ள மாநில அரசால், பிற கட்சிகளின், தோழமைக் கட்சிகளின் தலைவர்களைக்கூட பாதுகாக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. மிக அண்மையில் காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர், அன்புச் சகோதரர் கிருஷ்ணசாமி அவர்கள் தாக்கப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது என்றே கருதுகிறேன். தினந்தோறும் பத்திரிகைகளைப் படித்தால், தொலைக்காட்சியைப் பார்த்தால், கொள்ளை, கொலை, கற்பழிப்பு என்று பலவிதமான குற்றங்கள் தொடர்ந்து நிகழ்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். என்னுடைய ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டிற்குள் நுழைய முடியவில்லை. ஆனால், இன்று அவர்கள் தமிழ்நாட்டில் தளம் அமைக்க ஆரம்பித்துவிட்டார்கள். இன்று, தமிழ்நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும், ஒட்டுமொத்த நன்மைக்கும் ஒரு பெரிய அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் என்ன செய்யலாம் என்பதில் அரசு கவனம் செலுத்தவில்லை. ஆளுநர் உரையில்கூட அரசு என்ன சொல்லியிருக்கிறது? பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு மிக நன்றாக இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறது. ஆகவே, சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று தமிழக அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எத்தனையோ மாநிலங்களில் சட்டம்-ஒழுங்கு சரியாக இல்லை. பல ஆண்டு காலமாகச் சரியாக இல்லை. அந்த மாநிலங்களோடு ஒப்பிடுகையில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்திலே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அன்றைய நிதி அமைச்சராக இருந்த, மறைந்த நாவலர் அவர்கள்கூட சட்டம்-ஒழுங்கு பற்றிச் சொல்கிறபோது, மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு, தமிழ்நாடு சிறப்பாக இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறார்; உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் அப்படித்தான் இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின்பு, தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு ஒட்டுமொத்தமாகச் சீர்குலைந்துவிட்டது என்று ஏற்கெனவே கூறினேன். இந்தச் சீர்குலைவு தி.மு.க. அரசு பதவியேற்ற அந்த நாள் முதலே தொடங்கிவிட்டது. சம்பவங்கள், குறிப்பிட்ட சம்பவங்கள் என்று சொல்லவேண்டுமானால், இன்று ஒரு நாள் போதாது, அத்தனைச் சம்பவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆகவே, அண்மையில் நிகழ்ந்த சிலவற்றை மட்டும் அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். 11-10-2007. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான், அவருடைய கட்சியைச் சார்ந்த பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அமைச்சராக இருந்தவர் அவருடைய ஆட்சியிலே கொல்லப்பட்டாரே; அது என்ன? சட்டம்-ஒழுங்கு காப்பாற்றப்பட்டதனுடைய அடையாளமா அது? *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* அமைதி, நான் பேசிக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-10-2007 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வன்னிய அரசு என்பவர் கைது செய்யப்பட்டார். தமிழ்நாட்டு காவல் துறையின் Q-Branch Police அவரைக் கைது செய்தது. குற்றச்சாட்டு என்னவென்றால், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உதவி புரிவதற்காக அவர் steering wheels, propellers போன்ற high-speed boat-களுக்கான உதிரிப் பாகங்களைப் பெற்று விடுதலைப் புலிகளுக்கு சப்ளை செய்தார் என்பது குற்றச்சாட்டு.

**திரு. கு. செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் குற்றச்சாட்டு என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து அவரைக் கைது செய்தபோதிலும், ஒரே நாளுக்குள் அவர் ஜாமீனில் வெளியே விடப்பட்டார். அதன் பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்த தமிழ்ச்செல்வன் இறந்ததற்கு, முதலமைச்சர் அவர்கள் இரங்கற்பா வெளியிட்டார். வன்னிய அரசு கைதும், விடுதலையும் 11-10-2007 அன்று நடந்தது. முதலமைச்சர், தமிழ்ச்செல்வனுக்கு, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்த தமிழ்ச்செல்வனுக்கு இரங்கற்பா எழுதி வெளியிட்டது 3-11-2007 அன்று. அது பத்திரிகைகளில் வெளி வந்தது 4-11-2007 அன்று. இதன்பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இது சட்டவிரோதமான செயல் என்பதை எடுத்துரைத்தது. இதன் பிறகு நாடு முழுவதும் இதற்குக் கண்டனம் எழுந்தது. காங்கிரஸ் கட்சியும் கண்டனம் தெரிவித்தது.

*முற்பகல் 11-05*

அதன் பின்னர் 26-11-2007 அன்று தமிழகக் காவல் துறைத் தலைவர், D.G.P., ஓர் அறிவிப்பை, எச்சரிக்கையை வெளியிட்டார். அது பத்திரிகைகளில் 27-11-2007 அன்று வந்தது. சுருக்கமாகச் சொல்கின்றேன், அந்த எச்சரிக்கை அறிக்கையில் D.G.P. என்ன சொல்லியிருந்தார்? விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு அல்லது அமைப்புகளுக்கு, எந்த வகையில் யார் ஆதரவு கொடுத்துச் செயல்பட்டாலும், அவர்கள்மீது Unlawful Activities (Prevention) Act-ன்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், அதன் பின்னர் D.G.P.-யினுடைய இந்த எச்சரிக்கை, இந்த அறிக்கை வெளிவந்த பின்னர், 25–1–2008 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு காவல் துறையினர் எப்படி அனுமதி அளித்தார்கள் என்பதுதான் கேள்வி. இந்த மாநாட்டில் திருமாவளவன் அவர்கள் பகிரங்கமாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்து பல கருத்துகளைச் சொன்னார். அதைப்பற்றி பலர் இங்கே பேசியிருக்கின்றார்கள். என்ன சொன்னார் என்பதை அனைவரும் பத்திரிகைகளில் படித்தோம். அனைவருக்கும் தெரியும். அதன் பின்னர் இது ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்தது. இந்தச் சட்டமன்றத்திலும் பல கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள்

இதைப்பற்றிக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துப் பேசினார்கள். "திருமாவளவனைக் கைது செய்" என்றுகூட இந்த அவையில் கோஷம் எழுப்பப்பட்டது. அதன் பின்னர் முதலமைச்சர் அவர்கள் 29-1-2008 அன்று இந்த அவையில் பேசினார். முதலமைச்சர் உரையிலிருந்து சில முக்கியமான வாசகங்களை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

"அருமை நண்பர் திருமாவளவனும் மற்றும் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுகின்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும், அவைகளை சட்டரீதியாகத்தான் சந்திக்க வேண்டியிருக்கிறது. வேறு வழியில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். பொடா சட்டம் பயன்படுத்தியும்கூட, அந்தப் பொடா சட்டத்தைப் பயன்படுத்தியது சரியா, அல்லவா என்ற வினா எழுந்தபோது, உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, அதுபற்றி என்ன வெளிவந்தது என்றால், 'தடை செய்யப்பட்ட எந்தவொரு இயக்கத்திற்கும் ஆதரவாகப் பேசப்படும் பேச்சு, குற்றம் ஆகாது' என்று உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலே ஒரு வரி வெளிவந்திருக்கிறது." மேலும் முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்—"விடுதலைப் புலிகளை ஆதரித்தோ அல்லது சில சம்பவங்களை ஆதரித்தோ பேசிவிடுவதால் கைது செய்வதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறதா என்றும் பார்க்கவேண்டும். நான் கைகழுவி விடவில்லை, சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள விரும்பவில்லை. யாராக இருந்தாலும் சரி, சட்டத்தை மீறி நடந்துகொண்டால் சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, தடை செய்யப்பட்ட எந்தவொரு இயக்கத்திற்கும் ஆதரவாகப் பேசப்படும் பேச்சு என்பது குற்றம் ஆகாது என்ற உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பில், இந்த P.O.T.A. சட்டத்தைப் பற்றிய விசாரணையின்போது வெளியிடப்பட்டிருக்கின்ற காரணத்தால், அதையெல்லாம் பார்த்து நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார். முதல் கேள்வி, P.O.T.A. வழக்கில் உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பில், தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றமல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறதா? அதைப் பார்ப்போமா? (குறுக்கீடு) பாருங்கள், பாருங்கள். உச்சநீதிமன்றத் தீர்ப்பிலிருந்து இப்போது வாசிக்கிறேன்.

"In this case, though several questions have been raised, two questions have been specifically urged, namely:



(1) whether Section 21(1) and (3) of the Prevention of Terrorism Act, 2002
are offending Article 19(1)(a) and 19(1)(c) of the Constitution of India and
therefore unconstitutional."

இரண்டாவது கேள்வி, "(2) Does the mere expression of sympathy for
Tamils in Sri Lanka for whom the Liberation Tigers of Tamil Eelam has become
the sole-representative recognised by the International Community, amount to
support to a terrorist organisation under the Prevention of Terrorism Act, 2002
thereby empowering the State to curtail the personal liberty?"

(முற்பகல் 11-10)

முதல் கேள்வி, Section 21 உட்பிரிவுகளைப் பற்றிச் சொல்கிறார்கள்.
"இது சட்டப்படி செல்லுமா? இந்திய அரசியல் சட்டத்திற்கு
எதிரானதா?" என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அந்த
Section-ல்தான் இந்தப் P.O.T.A. சட்டத்தின்கீழ் என்னவெல்லாம்
குற்றங்கள் என்று கருதப்படும்; அதற்கு என்னென்ன தண்டனைகள்
என்று கூறப்பட்டிருக்கிறது.

அதைப்பற்றி உச்ச நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது? "We
have upheld the Constitutional validity of Section 21 of P.O.T.A. in the
decision pronounced by us in Writ Petition (C) No. 389 of 2002 above and,
therefore, the first question does not survive for consideration." உச்ச
நீதிமன்றம் சொல்கிறது Section 21-ல் என்னவெல்லாம்
கூறப்பட்டிருக்கிறதோ, அதை இந்த உச்ச நீதிமன்றம் uphold செய்கிறது.
உறுதிசெய்கிறது. எனவே அந்தக் கேள்வி இதற்கு மேல் எழாது என்று
சொல்லிவிட்டார்கள். இரண்டாவது கேள்வி, விடுதலைப் புலிகள்
இயக்கத்திற்கு வெறுமனே ஆதரவு தெரிவித்துப் பேசுவது குற்றம் ஆகுமா
என்பது கேள்வி? அதற்கு உச்ச நீதிமன்றம் சொல்கிறது. "So far as the
second question is concerned, ...we have carefully considered the arguments
advanced by the Learned Counsel and that of the Learned Attorney General for
India on this aspect of the matter. We think the proper course that has to be
adopted in a case of this nature where a criminal case has already been lodged
and the same is pending consideration before the Special Court, it would not be
appropriate for us to express our views on the question of facts arising in this
case. We are sure that the Special Court will decide the matter in the light of the
decision pronounced by us in Writ Petition (C) No. 389 of 2002 above."
உச்ச நீதிமன்றம் என்ன சொல்கிறது? விடுதலைப் புலிகளை ஆதரித்துப்

பேசுவது குற்றம் ஆகுமா என்ற கேள்வி இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நாங்கள் தீர்ப்பு சொல்வது பொருத்தமாக இருக்காது. இந்தக் கேள்வி, இந்தப் பிரச்சினை ஏற்கெனவே தனி நீதிமன்றத்தின்முன் வந்துவிட்டதால் இதற்குத் தனி நீதிமன்றம்தான் தீர்ப்பு கூறவேண்டும்" என்று கூறி, உச்சநீதிமன்றம் இதற்குத் தீர்ப்பு கூறவில்லை. ஆகவே, முதலமைச்சர் இங்கே தெரிவித்ததுபோல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, P.O.T.A. வழக்கு தீர்ப்பைப் பற்றி புத்தகத்தை இங்கே அம்மையார் படிப்பதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், அந்தப் P.O.T.A. சட்டத்தில் உங்களால் கைது செய்யப்பட்டு பத்தொன்பது மாதம் சிறையில் வைத்திருந்தவரை உங்கள் கூட்டணியில் வைத்துக்கொண்டிருக்கிறீர்களே, அதற்குப் பதில் சொல்லிவிட்டு இதற்குப் பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கெல்லாம் பின்னால் வருவோம். இங்கே எதைப்பற்றி இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம்? முதலமைச்சர் இங்கே என்ன சொன்னார்? P.O.T.A. வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினால் அது குற்றம் ஆகாது என்று ஒரு வரி வந்திருக்கிறது என்று சொன்னார். ஆனால், முதலமைச்சர் தவறான தகவலை இந்த அவைக்குத் தந்திருக்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இங்கே வாசித்துக் காட்டியிருக்கிறேன். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது, உச்ச நீதிமன்றம் பதில் சொல்வது, பொறுத்தமாக இருக்காது என்று உச்ச நீதிமன்றம் சொல்லி, இதைத் தனி நீதிமன்றம்தான் முடிவு செய்யவேண்டும் என்று கூறிவிட்டது. ஆகவே, P.O.T.A. வழக்கில் கைது செய்த கைதிகளுக்குச் சாதகமாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறவில்லை என்பதை ஆணித்தரமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பற்றிச் சொன்னார். உச்ச நீதிமன்றம் அதுகுறித்து ஒரு முடிவு அறிவிக்க வேண்டுமென்று இருந்தால்



அதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், அந்த அதிகாரத்தை அவர்கள் விட்டுவிட்டு கீழே இருக்கக்கூடிய நீதிமன்றம் அதுபற்றி முடிவு செய்யலாம் என்று சொன்னால் அதற்கு என்ன பொருள்? கீழே இருக்கக்கூடிய *(குறுக்கீடுகள்)* நீதிமன்றம் அதிலே சம்பந்தப்பட்ட வைகோ அவர்களை விடுதலை செய்யும்போது அதைக் காரணம் காட்டி விடுதலை செய்திருக்கிறார்கள். உச்ச நீதிமன்றமே அப்படிச் சொல்லிவிட்ட காரணத்தினாலே அவரை விடுதலை செய்தார்கள். எனவே, அதற்கு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பொருள்தான் உண்மையான பொருள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான தகவலை இங்கே அவைக்குத் தந்துவிட்டு சமாளிக்கப் பார்த்தால் அதெல்லாம் எடுபடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் கேட்பது, அப்போது, எந்தக் காரணத்தின் அடிப்படையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்? எந்த நீதிபதி அந்தத் தீர்ப்பில் சொல்லியிருக்கிறார்? தனி நீதிமன்றம் என்ன தீர்ப்பைச் சொல்லியிருக்கிறது? அதைச் சொல்லுங்கள். எந்த அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்? நீங்கள் சொன்னது, அவர் பேசினார் என்பதால் கைது செய்தார்கள். பேசினார் என்பதற்காக கைது செய்தீர்கள். அவரை விடுதலை செய்ததற்கு என்ன காரணம்? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அதைச் சொல்லுங்கள். அதற்கு என்ன காரணம் நீதிமன்றம் சொல்லியிருக்கிறார்கள். சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* நீதிமன்றம் எந்த அடிப்படையிலே அவரை விடுவித்தது? அதற்கான காரணத்தைச் சொல்லுங்கள். ஜட்ஜ்மென்ட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? *(குறுக்கீடுகள்)* பதில் சொல்லச் சொல்லுங்கள்.

*முற்பகல் 11-15*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினை வைகோ கைது செய்யப்பட்டது பற்றியோ,

விடுதலை செய்யப்பட்டது பற்றியோ இல்லை. முதலமைச்சர் இந்த அவையில் என்ன பேசினார்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே...

**செல்வி ஜெ ஜெயலலிதா:** முதலமைச்சர் என்ன பேசினார்? உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் இப்படி ஒரு வரி உள்ளது. 'விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசுவது குற்றமாகாது' என்று உச்ச நீதிமன்றம் சொல்லி இருப்பதால், யார் மீதும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று சொல்லி இருக்கிறார். அது தவறு என்பதை ஆதாரபூர்வமாக நான் இங்கே நிரூபித்துக் காட்டியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது அதுதான். நாங்கள் வைகோ விடுதலை பற்றி, அதைப்பற்றிப் பேசவில்லை. வைகோ சம்பந்தப்பட்ட அந்த judgement-லே எதைச் சொல்லி அவரை விடுதலை செய்திருக்கிறார்கள்? அதைச் சொல்லுங்கள். அதைச் சொல்லுங்கள்(குறுக்கீடுகள்) அதைத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்கள் பேசும்போது நாங்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். அவர் படித்துக் காட்டியதில் உச்ச நீதிமன்றத்தில் தடை செய்யப்பட்ட இயக்கங்களைப் பற்றி யாராவது ஆதரித்துப் பேசினால் அவர்களுக்குத் தண்டனை உண்டு என்று எங்கேயாவது குறிப்பிட்டிருக்கிறார்களா?

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இதைப்பற்றி நாங்கள் தீர்ப்புக் கூற இயலாது என்றுதான் உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. இந்தக் கேள்வி ஏற்கெனவே Special Court முன் வந்துவிட்டதால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு simple question. (குறுக்கீடு) இது ஒரு simple question. ஒரு விவகாரம் என் முன்னால் வருகிறது. "இந்த விவகாரத்தில் உங்கள் தீர்ப்பு என்ன? உங்கள் கருத்து என்ன?" என்று என்னைக் கேட்கிறார்கள். "நான் இதிலே கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்." என்றால் என்ன அர்த்தம் அதற்கு? இது தப்பா, ரைட்டா என்று என்னைக் கேட்கிறார்கள். இதிலே (குறுக்கீடு) இல்லை. இல்லை. "நான் சொல்லவில்லை. நான் இதிலே சொல்ல விரும்பவில்லை. அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்" என்றால் அதில் நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை என்று பொருள்—அந்த நீதிமன்றம்—இந்தக் குற்றச்சாட்டு தப்பா, ரைட்டா, குற்றச்சாட்டா, இல்லையா என்று கேட்கிறான் என்னை ஒருவன். அப்பொழுது நான் என்ன சொல்ல வேண்டும்? இதிலே குற்றச்சாட்டு உண்டு, இல்லை என்று சொல்ல வேண்டும். "இதை அவரைக் கேட்டுக்கொள்ளுங்கள்" என்றால் இதிலே என்னுடைய கருத்தைத் தெரிவிக்க நான் விரும்பவில்லை என்றுதான், அதாவது அந்த நீதிமன்றம் விரும்பவில்லை என்றுதான் பொருள். இந்த simple question கூட முன்னாள் முதலமைச்சருக்குத் தெரியாமல் போய்விட்டதே! (குறுக்கீடுகள்)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பாணியில் பேசினால் அதனால் உண்மை மறைந்துவிடாது. என்மீது கோபப்பட...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, X or Y, கைது பண்ணுகிறீர்கள், சாட்டியிருக்கிற குற்றச்சாட்டு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இவர் பேசினார் என்று குற்றஞ்சாட்டி நீங்கள் P.O.T.A-லே arrest பண்ணி வைக்கிறீர்கள். அவர் அதிலே விடுதலை செய்யப்படுகிறார். அப்பொழுது என்ன அர்த்தம்? நான் திருடினேன் என்று சொல்லி என்னைக் கைது பண்ணுகிறார்கள். விடுதலை பண்ணுகிறார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம்? நான் திருடவில்லை. அதனால் விடுதலை பண்ணுகிறார்கள் என்றுதானே அர்த்தம்? இதைக்கூட புரிந்துகொள்ள முடியவில்லை என்றால் என்ன பண்ண முடியும்? அவர் பேசியது குற்றமில்லை என்ற அடிப்படையில்தான் வைகோ விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அது X or Y. (குறுக்கீடு) வைகோவை விட்டுவிடுங்கள். X or Y. அவர்மீது நீங்கள் சாட்டிய குற்றம், இவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசினார் என்று P.O.T.A-லே கைது பண்ணினீர்கள். அது வழக்காடு

[டாக்டர் க. பொன்முடி] [2008 பிப்ரவரி 1

மன்றத்திலே வந்தபோது அது தப்பில்லை என்று சொல்லி விடுதலை செய்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன பொருள்? அதைச் சொல்லுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைத் திசை திருப்ப முயற்சிக்கிறார்கள். நான் அடுத்த பாயின்ட்டுக்குச் செல்கிறேன். இதன் பிறகு தொடர்ந்து முதலமைச்சர் என்ன பேசியிருக்கிறார்? "இதற்குப் பிறகு இப்போது தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இத்தகைய செயல்கள் பற்றி தக்க, திறமையான, கற்றறிந்த வழக்கறிஞர்களுடைய குழுவிலே ஆராய்ந்து, அதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமேயானால் அதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, அதுபற்றி உங்களுடைய கருத்துகளை எல்லாம் தெரிவியுங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு, இந்த அளவில் இன்றைய பிரச்சினையைச் சுமுகமாக முடிப்பது நமக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். சுமுகமாக முடிப்பது நாட்டுக்கு நல்லதல்ல, அவருக்கு நல்லதாக இருக்கலாம். இதனைத் தொடர்ந்து அடுத்த நாள் சட்ட அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில் என்ன சொல்லியிருக்கிறார்?

*முற்பகல் 11–20*

"முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, இன்று," அதாவது 30–1–2008 அன்று—"காலையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில், நிதி அமைச்சர் பேராசிரியர், நான்"—அதாவது துரைமுருகன்—"தலைமைச் செயலாளர் எல். கே. திரிபாதி, அட்வகேட் ஜெனரல் மாசிலாமணி, உள் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர், டி.ஜி.பி., ஏ.டி.ஜி.பி. (புலனாய்வுத் துறை) ஆகியோர் கூடி விவாதித்தோம்" என்று கூறி இருக்கிறார். அதற்கு முதல் நாள் முதலமைச்சர் என்ன அறிவித்தார்? "கற்றறிந்த, திறமையான வழக்கறிஞர்கள், சட்ட நிபுணர்கள் குழுவிலே ஆராயப்படும்" என்றார். இதுதான் திறமையான கற்றறிந்த சட்ட மேதைகளின் குழுவா? முதலில் யார் வருகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)



2008 பிப்ரவரி 1]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எதிர்க்கட்சித் தலைவர் தயவுசெய்து உட்காருங்கள். உட்கார்ந்தால்தானே நான் பேசலாம், உட்கார்ந்தால் நான் பதில் சொல்கிறேன். ஒரு முறைக்காகச் சொல்கிறேன். தலைவர் அவர்களே, விதிப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இங்கே சொல்கிறபோது தேவைப்பட்டால் `மிகச் சிறந்த வழக்கறிஞர்களையெல்லாம் சேர்த்து ஆலோசிக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு முதல் கட்டமாக அரசைச் சார்ந்த அதிகாரிகள், அட்வகேட் ஜெனரல், அதேபோல் அமைச்சர்கள் கலந்து பேசி, இப்போது இருக்கிற சட்டம் போதும். இதைக்கொண்டே நடவடிக்கை எடுக்கலாம் என்று தீர்மானித்ததன் காரணமாக, வேறு சட்டம் தேவைப்படாத நிலையில், மிகச் சிறந்த வழக்கறிஞர்களையெல்லாம் அழைத்துப் பேசவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கற்றறிந்த, திறமையான வழக்கறிஞர்கள் குழுவிலே ஆராயப்படும் என்று சொன்னபோது, நான் ஏதோ கே.கே. வேணுகோபால், பி.பி. ராவ், பாலி நாரிமன், சாந்தி பூஷன், ராம் ஜெத்மலானி போன்ற சட்ட மேதைகளையெல்லாம் வரவழைத்து ஆலோசனை நடத்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இந்தக் குழுவிலே யாரெல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள்? நிதியமைச்சர், அதாவது பச்சையப்பா கல்லூரியில் உதவிப் பேராசிரியராக இருந்த பேராசிரியர் அன்பழகன். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் கல்லூரியில் நான் உதவிப் பேராசிரியராகத்தான் இருந்தேன். அது ஒன்றும் அவமானத்திற்குரிய காரியம் அல்லவே?

[2008 பிப்ரவரி 1

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கம் சொன்னார். எங்களுக்கு புதிய சட்டம் உருவாக்கத்தான் தெரியும். ஆனால் இவ்வளவு சிறந்த வழக்கறிஞர்கள் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்திய அளவிலே தெரியும், ஏனெனில் அடிக்கடி பல்வேறு வழக்குகளில் கோர்ட்டுக்குப் போய் வந்திருப்பதால் அவர்களைக் கேட்டிருக்கலாம். அவர்களைக் கேட்காதது தவறுதான். *(கூச்சல்–குழப்பம்)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதன் பின்னர் இந்தக் குழுவிலே யார் எல்லாம் இடம் பெற்றார்கள் என்று பார்த்தால், சட்ட அமைச்சர் துரைமுருகன் அவர்கள். அவரை சட்ட மேதை என்று சொன்னால் அவரே ஆச்சரியப்படுவார். அடுத்தபடி தலைமைச் செயலாளர் எல்.கே. திரிபாதி அவர்கள். இவர் சட்ட மேதையா?

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவிலே இடம் பெற்றவர்களையெல்லாம் சொல்கிறார்கள். அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகளை அவர்கள் ஆதரித்தார்கள், இவர்கள் ஆதரித்தார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் அதற்குள்ளே போகவில்லை. ஒன்றே ஒன்றுதான் கேட்கிறேன். விடுதலைப் புலிகளுக்கு கலைஞர் அரசும் ஒன்றும் செய்யவில்லை, மத்திய அரசும் ஒன்றும் செய்யவில்லை. பிரபாகரனுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால் தமிழினம் தாங்காது என்று இதே எதிர்க்கட்சித் தலைவி ஆங்கிலப் பத்திரிகையில் பேட்டி கொடுத்தார். அதற்கு என்ன பதில் சொல்கிறார்? *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். மற்றவர்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இன்றைக்கு ஒரு விதமாக வந்திருக்கின்றார். அதாவது, அவர் பேராசிரியரை... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.



2008 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேராசிரியரைப் பார்த்து பச்சையப்பன் கல்லூரியில் ஒரு துணைப் பேராசிரியர், இவரா பேராசிரியர் என்கிறார். ஒரு புரட்சியும் செய்யாத உன்னைப் போய் புரட்சித் தலைவி என்று சொல்கிறபோது அவரை ஏன் ஒரு பேராசிரியர் என்று சொல்லக் கூடாது?

முற்பகல் 11–25

நான் எதிர்க்கட்சித் தலைவருக்குச் சொல்லுகிறேன். "துரைமுருகன் சட்டமேதையா?" என்கிறார். நீங்கள் போட்ட சட்ட அமைச்சரைவிட ஆயிரம் மடங்கு இந்த துரைமுருகன் மேதைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். *(குறுக்கீடு)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இருங்கள். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை ஒருமையில் திட்டியதால் சட்ட அமைச்சர் துரைமுருகன் தன்னுடைய தரத்தை வெளிப்படுத்திவிட்டார். ஆகவே, அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள் என்றுகூட நான் கேட்கப் போவதில்லை. அடுத்தது *(குறுக்கீடு) (கூச்சல்–குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவரைத் தரம் தாழ்த்திவிட்டேன் என்கிறார். 84 வயதுக்கு மேலே இந்த நாட்டிலே அரசியலில் இருக்கிற ஒரு பேராசிரியரைக் கேவலமாகப் பேசி தரம் தாழ்த்திக் கொண்டிருக்கிற முன்னாள் முதலமைச்சரா என்னைப் பார்த்துக் கேட்பது? (குறுக்கீடு) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அனைவரும் உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்களை நான் கேவலமாகப் பேசவில்லை. பச்சையப்பன் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக இருந்தவர் என்பதைத்தான் சொன்னேன். அதை அவரே ஏற்றுக் கொண்டிருக்கிறார். இதில் என்ன கேவலம் இருக்கிறது? கேவலமாகப் பேசவில்லையே? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் பொன்முடி உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் உட்கார்ந்தால்தான் நான் பேசலாம். நீங்கள் நின்று கொண்டிருந்தால் நான் எப்படிப் பேச முடியும்? முறைக்காக உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) ஒரு முறை இருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் உதவிப் பேராசிரியராக இருந்தேன். என்னை அன்பு காரணமாகப் பல பேர் பேராசிரியர் என்று சொல்லிவிட்டார்கள். அது, அவர்கள் என்மீது வைத்த அன்பின் அடையாளமே தவிர, நான் பேராசிரியராக இருந்ததாக யாரிடத்திலும் சம்பளம் கேட்கவில்லை, யாரிடத்திலும் பென்ஷன் பெற நான் விண்ணப்பம் போடவில்லை. நான் உதவிப் பேராசிரியராக இருந்ததற்கு முன்னர் வெறும் மாணவனாகத்தான் இருந்தேன். ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து மாணவனாக இருந்தேன். அது ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏற்படுகிற முன்னேற்றத்தைப் பொறுத்து, மற்றவர்கள் வைக்கிற அன்பைப் பொறுத்து இப்படிப்பட்ட வார்த்தைகள், பேராசிரியர் என்று சொல்வது. இன்னும் சொல்லப்போனால், உதவிப் பேராசிரியர் என்று சொல்வதைவிட, பேராசிரியர் என்பது சுருக்கமாக இருக்கிறது. அதன் காரணமாகச் சொல்கிறார்கள். ஒருவேளை அது அம்மையாருக்குப் பிடிக்கவில்லை





என்றால், அவர் என்னை உதவிப் பேராசிரியர் என்றே சொல்லலாம். அதேபோல, 50 வருடங்களுக்கு முன்னால் யார், யார் என்னென்னவாக இருந்தார்கள் என்று நாங்கள் பேசலாமா? (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும், எனக்குத் தெரியாதா?

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் நின்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இருக்கைக்குப் போங்கள். திரு. ஜெயக்குமார், (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குப் போங்கள். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. ஜெயக்குமார். இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இருக்கைக்குப் போங்கள். போங்க சார். இந்த அவையை அமைதியாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு கொடுங்கள். (கூச்சல்–குழப்பம்) அமைச்சர், உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர், உங்கள் இருக்கைக்குப் போங்கள். Please, சொல்வதைக் கேளுங்கள். உங்கள் இருக்கைக்குப் போங்கள். திரு. சேகர்பாபு, போங்கள் (குறுக்கீடுகள்) இருக்கைக்குப் போங்கள். நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)

அவை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. அவை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) அவை முற்பகல் 11-40 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 11-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 11-40

முற்பகல் 11-40 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

[2008 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நடந்த பிரச்சினையில் ஒரு சில உறுப்பினர்கள் என்னுடைய இருக்கைக்கு முன்னாலேயே வந்து பேசினார்கள். அதெல்லாம் நல்ல வழக்கம் இல்லை. நான் வெளியேற்றியிருப்பேன். ஆனால், இந்த அவை நடவடிக்கைகள் சுமுகமாக நடக்க வேண்டுமென்பதற்காக நான் அவையை ஒத்திவைத்தேன். அதனால், இனி அமைதி காத்து, பிரச்சினையில்லாமல் அமைதியாக இந்தச் சபை நடப்பதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டுமென்று நான் அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் 40 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். மேலும், Five to ten minutes–லே உரையை முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் மேலும் கூறினார். "இதற்காக புதிதாகச் சட்டம் கொண்டுவர வேண்டுமா அல்லது ஏற்கெனவே உள்ள சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்க இயலுமா என்றெல்லாம் கலந்தாலோசிக்கப்பட்டு, இறுதியாக எடுக்கப்பட்ட முடிவு வருமாறு:

தடை செய்யப்பட்டுள்ள எந்த இயக்கமாயினும் அவற்றுக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதோ, செயல்படுவதோ, துண்டு அறிக்கைகள், சுவரொட்டிகள் வெளியிடுவதோ, ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணா நோன்புகள் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதோ, அவற்றில் கலந்துகொள்வதோ, The Unlawful Activities (Prevention) Act, 1967 (37 of 1967) சட்டப்படி குற்றமுடையதாகும். அத்தகைய குற்றமிழைப்போர் தனிப்பட்டவராயினும், சங்கம் அல்லது அமைப்புரீதியில் இயங்குவோராயினும் அவர்கள் அரசின் இந்த அறிவிப்பினை உரிய எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அதையும் மீறி மேற்கண்ட நடவடிக்கைகள் ஏதேனும் ஒன்றில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள சட்டத்தின்படி நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள்" என்று சட்ட அமைச்சர் கூறியிருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்த அரசுக்கு, இந்த முதலமைச்சருக்கு, விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் விருப்பமில்லை. The Unlawful Activities (Prevention) Act, 1967 என்ற சட்டம் ஏற்கெனவேயுள்ள ஒரு பழைய சட்டம். இந்தச் சட்டத்தைப் பற்றித்தான் டி.ஜி.பி. 26–11–2007 அன்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, ஏற்கெனவே



2008 பிப்ரவரி 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இந்தச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரிப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று டி.ஜி.பி. எச்சரித்த பின்னரும்கூட, திருமாவளவன் 25-1-2008 அன்று இந்த மாநாடு நடத்துவதற்கு, விடுதலைப் புலிகள் ஆதரவு மாநாட்டை நடத்துவதற்கு காவல் துறை ஏன் அனுமதி வழங்கியது? அதுமட்டுமல்ல, இதைப்பற்றி இந்த அவையில் பிரச்சினை எழுப்பப்பட்டபோது . . . (குறுக்கீடு)

**திரு. கு. செல்வம்:** தலைவர் அவர்களே, எங்கள் தலைவரைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. செல்வம், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பிரச்சினை எழுப்பப்பட்டபோது, முதலமைச்சர் பேசுகின்றபோது திருமாவளவனைக் கைது செய்வதற்கு எந்தச் சட்டமும் இல்லை என்று ஏன் சொன்னார்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உட்காருங்கள். முதல்வர் பேசுகிறபோது பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) முதல்வர் பதில் சொல்வார்கள், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சுப்ரீம் கோர்ட்டில் P.O.T.A. வழக்கைப் பற்றிய தீர்ப்பில் கூறப்படாததைக் கூறப்பட்டதாக முதலமைச்சர் ஏன் இங்கே அவையில் குறிப்பிட்டார்? (குறுக்கீடு)

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிஷம் அனுமதி கொடுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மீண்டும் சட்ட அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் (குறுக்கீடு) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உட்காருங்கள். முதலமைச்சர் பதில் சொல்வார்கள், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதே Unlawful Activities (Prevention) Act–ஐப்பற்றிக் குறிப்பிடுகிறார். ஏற்கெனவே Unlawful Activities (Prevention) Act–ன்கீழ் விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று டி.ஜி.பி. எச்சரித்தார். இப்போது சட்ட அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அதே Unlawful Activities (Prevention) Act–ன்கீழ் விடுதலைப் புலிகளை ஆதரித்தால்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2008 பிப்ரவரி 1

நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கிறார். அதாவது, இனிமேல் யாராவது ஆதரித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கிறார். ஏற்கெனவே இவ்வாறு செயல்பட்ட திருமாவளவன்மீது இந்தச் சட்டத்தின்கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போதுகூட திருமாவளவன்மீது நடவடிக்கை எடுக்க முடியும். Unlawful Activities (Prevention) (குறுக்கீடு)...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். (குறுக்கீடு) நீங்கள் அவரைக் குற்றச்சாட்டு சொன்னதால் சொல்கிறார்கள். திரு. செல்வம், சொல்லுங்கள்.

**திரு. கு. செல்வம்:** எங்கள் தலைவரைப் பற்றி குற்றச்சாட்டு சொல்லும்போது பேச வேண்டாமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தைச் சரியாகப் படிக்காமல் அரைகுறையாக இந்த அவைக்குத் தகவல் கொடுத்து வருகிறார். ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு, மறு ஆய்வுக் குழு சரியாகச் சட்டத்தை வெளியிட்டிருக்கிறது. அதைச் சரியாகப் படித்துவிட்டு வந்து சொல்லச் சொல்லுங்கள். பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எங்கள் கட்சியைப் பற்றியோ, எங்கள் தலைவரைப் பற்றியோ பேசுவதற்கு இவர்களுக்கு எந்தவித அருகதையும் கிடையாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கருத்துரிமையைப் பற்றித்தான் பேசுகிறோம். கருத்துரிமையைப் பற்றித்தான் வலியுறுத்துகிறோம். எங்கள் தலைவர் 4 கோடி ரூபாய் விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கவில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகளுக்கு 4 கோடி ரூபாய் கொடுக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவரே விடுதலைப் புலிகளை ஆதரித்தவர். இவர் தலைவர் 4 கோடி ரூபாய் பணம் கொடுத்தவர். நாங்கள் கருத்துரிமையைப் பற்றித்தான் சொல்கிறோம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. No. உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுங்கள்.



2008 பிப்ரவரி 1]

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.ஜி.பி. அவர்கள் விடுதலைப் புலிகளை ஆதரித்தால் அவர்கள்மீது The Unlawful Activities (Prevention) Act–ன்கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்த பிறகு திருமாவளவன் நடத்திய அந்தக் கூட்டம் நடைபெற்றது. அதில் அவருடைய பேச்சுகள் எல்லா நாளிதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும் வெளிவந்தன. அப்படி இருக்கும்போது காவல் துறை ஏன் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை? இப்போதும்கூட The Unlawful Activities (Prevention) Act Section 39–ன்கீழ் திருமாவளவனுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கமுடியும். (குறுக்கீடுகள்)

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன? திரு. செல்வம், சொல்லுங்கள்.

**திரு. கு. செல்வம்:** என்ன பேசுகிறார்கள் அவர்கள்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒரு கட்சியின் தலைவர்... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சும்மா எல்லாரும் எழுந்திருக்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. No. திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The Unlawful Activities Prevention Act 2004 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது, amend செய்யப்பட்டது. அந்த புதிய Amendment–ல் Terrorist Organisation என்று விடுதலைப் புலிகள்—L.T.T.E.—item 21 என்று Schedule–லிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, L.T.T.E. என்பது பயங்கரவாத அமைப்பு, அதை ஆதரித்து யார் பேசினாலும் இந்தச் சட்டத்தின் 39–வது பிரிவின்கீழ் நடவடிக்கைக்கு உரியவர்களாகிறார்கள். Section 39 என்ன கூறுகிறது? Section 39 (2) says "a person who commits the offence relating to support given to a terrorist organisation under sub-section (1) shall be punishable with imprisonment for a term not exceeding ten years or with fine or with both." ** (குறுக்கீடுகள்).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2008 பிப்ரவரி 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி. . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். முடித்துவிடட்டும். நேரமாகிவிட்டது. நீங்கள் முடியுங்கள் சீக்கிரம்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** முடிக்கப்போகிறேன். குறுக்கீடுகள் இல்லை என்றால் நான் முடித்துவிடுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் முடிக்கப் போகிறார்கள் உட்காருங்கள். உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினரைப் பார்த்துச் சொல்லுகிறேன். தி.மு.க.-வினரைப் பார்த்துச் சொல்லுகிறேன். நீங்கள் யார்? உங்கள் ஆட்சியின் தரம் என்ன என்பதை அனைவரும் அறிவர். மறந்து போனவர்களுக்கு நான் நினைவுகூர விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அவைத் தலைவரைப் பார்த்துத்தான் இந்த அவையில் யாரும் பேசலாம். அது அமைச்சராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, சாதாரண உறுப்பினராக இருந்தாலும் சரி, அவைத் தலைவரைப் பார்த்துப் பேசலாமே தவிர, "தி.மு.க—வினரைப் பார்த்து நான் சொல்லுகிறேன்" என்று அந்த அம்மையார் சொன்னார். அப்படிச் சொல்வதற்கு அம்மையாருக்கோ, வேறு யாருக்கோ தகுதி கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்—குழப்பம்).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 பிப்ரவரி 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. முடியுங்கள். முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஆளும் கட்சியினருக்குச் சொல்லிக்கொள்கிறேன் தி.மு.க.-வினர் யார், அவர்களுடைய ஆட்சியின் தரம் என்ன என்பதை அனைவரும் அறிவர். மறந்து போனவர்களுக்கு நினைவுகூர விரும்புகின்றேன். இந்தியாவிலேயே. . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க-வினர் யார், அவர்களுடைய தகுதி என்ன, தரம் என்ன என்றெல்லாம் மக்களுக்குத் தெரியும் என்று அம்மையார் சொல்கிறார், தி.மு.க.-விலிருந்து பிரிந்ததுதான் அ.தி.மு.க. என்பது நாட்டிலே உள்ள அனைவருக்குமே தெரியும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே ஊழலுக்காக டிஸ்மிஸ் செய்யப்பட்ட முதல் அரசு தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) திரு. கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழலுக்காக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்ல எனக்கு உரிமை உண்டு. தி.மு.க. அரசுதான் ஊழல் அரசு என்று முதன்முதலாக டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்று அம்மையார் சொன்னார். அப்படி டிஸ்மிஸ் செய்ததற்குப் பின்னர் நடைபெற்ற வழக்குகளிலே ஊழல் நிரூபிக்கப்படாத காரணத்தால், அவருடைய கட்சியினுடைய தலைவராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களே "அந்தக் குற்றச்சாட்டுகளைப்பற்றி நான் எந்த ஆதாரமும் சொல்லுவதற்கு என்னிடத்திலே ஆதாரம் இல்லை" என்று சொன்னதற்குப் பின்னர், ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாத நிலையிலேயும், அதற்கு தகுந்த சான்று இல்லாத நிலையிலேயும் குற்றச்சாட்டு இல்லை என்ற தீர்ப்பை நாங்கள் பெற்றோம். ஆனால், நீதிமன்றத்தாலே தண்டிக்கப்பட்டு,

(மேசையைத் தட்டும் ஒலி) அப்படி தண்டிக்கப்பட்டதற்குப் பின்னர் உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீட்டுக்குச் சென்று (குறுக்கீடுகள்) உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீட்டுக்குச் சென்று. . . (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, உட்காருங்கள். எச்சரிக்கிறேன் உங்களை. உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** உச்ச நீதிமன்றத்தில் குற்றச்சாட்டாகச் சொல்லப்பட்ட எல்லா விவரங்களையும் ஒவ்வொன்றாக இவை எல்லாம் உண்மையாகத் தெரிகிறது, இருந்தாலும் ஒரு முதலமைச்சராக உள்ளவர் இப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகி இருக்கக்கூடாது என்ற கருத்தை உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால் அப்படி விலைக்கு வாங்கிய நிலத்தை—டான்சியிலேயிருந்து வாங்கிய நிலத்தைத் திருப்பித் தருகிறேன் என்று சொல்லவேண்டிய நிலைமை இந்த எதிர்க்கட்சித் தலைவருக்கு ஏற்பட்டது. நிலத்தை வாங்கித் திருப்பித் தருகிறேன் என்று சொன்னால் வாங்கியது உண்மை என்று ஆகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த வழக்கையொட்டிய எல்லாவற்றையும் நான் இப்பொழுது பேச விரும்பவில்லை. என்னால் பேசமுடியும். குற்றச்சாட்டுக்கு ஆளாகி தண்டிக்கப்பட்டவர்கள், குற்றச்சாட்டு சொல்லப்பட்டு, (கூச்சல்—குழப்பம்) அந்தக் குற்றச்சாட்டு விசாரிக்கப்பட்டு, அந்தக் குற்றச்சாட்டு உண்மை அல்ல என்று சொன்னதற்குப் பின்னர், அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருப்பதிலே அர்த்தம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக முடியுங்கள் அம்மா. (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1991* ஆம் ஆண்டில் பயங்கரவாத அமைப்பான, வெளிநாட்டு அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தேசிய பாதுகாப்பு இரகசியங்களை வெளியிட்டதற்காக டிஸ்மிஸ் செய்யப்பட்ட அரசு திரு. கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு. (கூச்சல்—குழப்பம்) அன்றையதினம். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சொல்லுவது அப்பட்டமாக, உண்மைக்கு மாறான தகவல். அதுபோலச் சொல்லி என்னுடைய அரசை யாரும் டிஸ்மிஸ் செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு முதலிலே டிஸ்மிஸ் செய்யப்பட்டதற்குக் காரணம், Emergency—நெருக்கடி நிலையை எதிர்த்து ஜனநாயகத்தை நிலைநாட்ட போர்க் குரல் எழுப்பிய ஒரே காரணத்திற்காக (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சி அப்பொழுது டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அவர்கள் சொல்வதைப்போல இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்காகவோ அல்லது வேறுவிதமான குற்றச்சாட்டுக்காகவோ தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்படவில்லை என்பதை அருள்கூர்ந்து அம்மையார் அவர்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அம்மையார் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன் இன்று வந்தீர்கள், நாங்கள் வரவேற்றோம், மனதார வரவேற்றோம். பரவாயில்லை கவர்னர் உரையை மதித்தாவது இன்றைக்குப் பேச வந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியோடு இருந்தோம். ஆனால், வந்த பிறகு—எங்கேயாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா, எங்கேயாவது நடைபெற்றிருக்கிறதா?—ஒரு உறுப்பினர் மற்ற உறுப்பினர்களைப் பார்த்து, எதிர்த் தரப்பிலே அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து, எதிர்த் தரப்பிலே உள்ளவர்களைப் பார்த்து கேலி செய்வது, கிண்டல் செய்வது "நீ மகா மேதை, சட்ட மேதை" என்றெல்லாம் பேசுவது, "நீ உதவிப் பேராசிரியர்" என்று அறிஞர் அண்ணா அவர்களாலேயே பேராசிரியர் என்று அழைக்கப்பட்ட பெருமகனை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இதயம் எல்லாம் நொறுங்குகின்ற அளவுக்கு "நீ சின்ன பேராசிரியர், உதவிப் பேராசிரியர்" என்று சொல்வது இதெல்லாம் உகந்ததா என்பதை அருள்கூர்ந்து அம்மையார் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர், சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. தரப்பிலிருந்து என்னைப்பற்றி கேலியும், கிண்டலுமாக என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பதெல்லாம் அவைக் குறிப்புகளிலே இருக்கிறது. அதைப் பார்த்துக்கொள்ளலாம். அன்றையதினம், *1991*—ல், மத்தியில் திரு. சந்திரசேகர் தலைமையிலான மத்திய அரசு இருந்தது. அதற்கு திரு. இராஜீவ் காந்தி தலைமையிலான

காங்கிரஸ் கட்சி ஆதரவு கொடுத்தது. அன்று திரு. இராஜிவ் காந்தி அவர்களின் பரிந்துரையின்பேரில்தான் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது. அதன்பிறகு அதே விடுதலைப் புலிகள்தான் திரு. இராஜிவ் காந்தியைப் படுகொலை செய்தார்கள். அதில் ஜெயின் கமிஷன் கொடுத்த இடைக்கால. . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் பழங்கதைகளை எல்லாம் பேசுவது என்றால் நாங்களும் பேசக்கூடிய வாய்ப்பு எங்களுக்கும் ஏற்படும். நாங்களும் பேசியாக வேண்டும். இதே அவையில் ஜானகி அம்மையாரின் கட்சியும், ஜெயலலிதா அம்மையாருடைய கட்சியும் போட்டுக் கொண்ட சண்டையும், அதற்குப் பிறகு நடைபெற்ற அல்லல், அமளி இவைகளும் அதன்பிறகு 'நீ விஷம் கொடுத்தாய், நீ மோரிலே கலந்தாய், நீ பாலிலே கலந்தாய்' என்றெல்லாம் பேசிக்கொண்ட அவைகளையும் நாங்கள் பேசவேண்டிவரும். (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து அதோடு நிறுத்துங்கள். (கூச்சல்—குழப்பம்)

*முற்பகல் 11—55*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் தரமான பேச்சா? இது ஒரு முதலமைச்சர் பேசுகின்ற பேச்சு என்றால், அவைக் குறிப்பிலே இருக்கட்டும். (குறுக்கீடுகள்) நான் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்த அரசு சட்டத்தை மதிக்கவில்லை. இந்த முதலமைச்சருக்கு, இருக்கின்ற சட்டத்தைப் பற்றியும் தெரியவில்லை; பழைய சட்டத்தைப் பற்றியும் தெரியவில்லை. (குறுக்கீடுகள்) சட்டம் ஒழுங்கைக் காக்கத் தெரியவில்லை. இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் கேட்பாரற்று வாடுகின்றனர். தமிழ்நாடு கேட்பாரற்று சீரழிந்து வருகிறது. ஆகவே தி.மு.க. அரசுக்கு உங்கள்மூலமாக நான் சொல்லிக்கொள்வது, ஆளுகின்ற தார்மீக உரிமையை நீங்கள் இழந்துவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க.வினர் தாங்களாகவே ஆட்சியைவிட்டு ராஜினாமா செய்ய வேண்டும்; இல்லையேல் இந்த ஆட்சியை மக்கள் நீக்குகின்ற காலம் வெகு தொலைவில் இல்லை என்பதைச் சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)



## 6. அரசினர் தீர்மானங்கள்

### (ஆ) ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 13 (2)-ன்கீழ், ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்து சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றிய பின்பு ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு மாணபுமிகு முதல்வர் அவர்கள் பதில் அளிக்க இருக்கிறார்கள். அதற்கான தீர்மானத்தை முன்மொழியுமாறு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்து அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*நண்பகல் 12—00*

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2008), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் புத்தாண்டு என்பது தை முதல் நாள் என்று அறிவிக்கப்படுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதே சமயம், இது உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இல்லாமல், அறிவியலையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என்றும் விரும்புகிறோம். பூமியின் சுழற்சி, கதிரவனை அது சுற்றும் காலம் ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு வருடம், மாதம், நாள் ஆகியவை கணக்கில்கொள்ளப்படுகின்றன. இதில் போப் ஆண்டவர் கிரிகோரிக்கு முன்பு சில சிரமங்கள் இருந்தன. ஒரு வருடம் என்பது 365 நாட்கள், 8 மணி, 20 நிமிடங்கள் என்று இருந்தது. மணியும் நிமிடமும் ஆண்டுதோறும் அதிகரித்ததால் சில சிரமங்கள் ஏற்பட்டதன் காரணமாக சோவியத் புரட்சிபற்றிக் குறிப்பிடும்போது அவர்கள், ரஷியக்காரர்கள், அக்டோபர் புரட்சி என்று கூறுவர். பழைய காலண்டர் அடிப்படையில் அது அங்கே பேசப்பட்டது. நாம் நவம்பர் புரட்சி என்கிறோம். புதிய காலண்டர் அடிப்படையில் கூறுகிறோம். இந்த மாற்றங்கள் நிகழ்ந்ததற்கு கிரிகோரி அவர்கள் காரணம். தற்போது நாம் செய்யும் மாறுதல் பற்றி, இதேபோன்ற காரணங்கள் இருந்தால் அதையும் தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறோம். தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்பதை வரவேற்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தை முதல் நாளைக் கணக்கில்கொண்டு தமிழ்ப் புத்தாண்டு கொண்டாடப்படும் என்ற தமிழக அரசு பிறப்பித்திருக்கின்ற

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





சட்டமுன்வடிவை நான் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கிறேன். மாற்றம் என்பது நம்முடைய சமுதாயத்தினுடைய உரிமை. மாற்றங்கள் வருகிறபோதுதான் சமுதாயத்திலே முன்னேற்றங்கள் ஏற்படும். 'சென்னை ராஜதானி' என்று அழைக்கப்பட்ட இந்த பூமிக்கு, இந்த மாநிலத்திற்கு, வரலாற்றுச் சிறப்புமிக்க 'தமிழ்நாடு' என்று பெயரிட்டு இன்றைக்குத் தமிழ்நாடு அரசு என்று உலகம் முழுவதையும் விளம்பச் செய்திருக்கின்ற பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. அந்த வகையிலே பல மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலமாக புதிதாய்ப் பிறந்தோம் என்ற நவ சிந்தனையோடு இன்றைக்கு இருக்கின்ற மூத்தோரில் இளையவராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் முடிவெடுத்து செயல்படுத்துகின்ற இந்த முடிவினை காங்கிரஸ் பேரியக்கம் மனதார வரவேற்கிறது.

வடமொழிச் சொற்களைக்கொண்ட 60 ஆண்டுக் கணக்கை முடிவிற்குக் கொண்டுவந்து, இனிமேல் தமிழர்கள் தைத் திருநாளைத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடுவதிலே மிகச் சிறப்பு உண்டு என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, தமிழ்ப் புத்தாண்டிற்கு நம்முடைய அரசாங்கம் விடுமுறை அளிக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே அந்தப் புத்தாண்டு இன்றைக்கு முதல் நடைமுறைக்கு வருகிறது. மலையாள மக்களைப் பொறுத்தவரையிலே விஷு என்கிற ஆண்டு அந்த நாளிலே பிறக்கின்ற காரணத்தால், எப்படி தெலுங்கு ஆண்டினுடைய பிறப்புக்கு நாம் விடுமுறை அளிக்கிறோமோ, அதேபோல மலையாள ஆண்டாக இருக்கின்ற இந்த விஷு என்ற ஆண்டிற்காக விடுமுறையை, அப்படியே நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே, இன்னொரு கடமையையும் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் செய்து முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பத்தாண்டுகளுக்கு முன்பாக நடந்த ஒரு விழாவிலே எங்களுடைய ஐயா, மக்கள் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள், திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று தமிழ் மாமுனிவர் மங்களம் கிழார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே ஒரு கோரிக்கையாக விடுத்தார்கள். அதை நம்முடைய தமிழ்நாடு அரசு, டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பு அளித்த உரையின்மூலமாக உறுதி செய்திருக்கின்றார்கள்.

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [2008 பிப்ரவரி 1

பிற்பகல் 12–05

இந்த ஆண்டாவது திருக்குறளைத் தேசிய நூலாக ஆக்க மத்திய அரசை வலியுறுத்தி,—எப்படித் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்து வெற்றிபெறச் செய்தோமோ, அதேபோல, திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தி, வெற்றியை ஈட்டித் தரவேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களை நான் மனதாரக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களைப் பொறுத்தவரையிலே, பழமையினுடைய பெருமையும், புதுமையினுடைய வலிமையும் சேர்ந்த அற்புதமான ஒரு கலவை அவர். அவர் செய்கின்ற காரியங்கள், தமிழ்நாட்டு மக்களுடைய நலனை, தமிழ்நாடு மட்டுமல்ல; தமிழகத்திற்கு அப்பால் இருக்கின்ற, தமிழ்கூறும் நல்லுலகத்தில் இருக்கின்ற அத்தனைத் தமிழர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையாகத்தான் இருக்கும் என்கின்ற நம்பிக்கையினை, காங்கிரஸ் கட்சியின் சார்பில் மேலும் வலிமையாகத் தெரிவித்து, பதிவு செய்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழர் திருநாளாம் தை முதல் நாளை, தமிழ் ஆண்டின் முதல் நாளாக அறிவித்திருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ் பேசுகிற உலகெங்கும் பரவியிருக்கின்ற ஒட்டுமொத்த மக்களும், தை முதல் நாளைத் தமிழ் ஆண்டின் முதல் நாளாகக் கொண்டுவர வேண்டுமென்று தொடர்ந்து பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறார்கள். அந்தவகையிலே, தமிழ்கூறும் நல்லுலகிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுடைய நல்ல எதிர்பார்ப்பை, எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்துகிற இந்த முதல் நாளை, தமிழ் அறிஞர்கள், பல தலைவர்கள் மறைந்திருந்தாலும், அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்குத் தமிழ் வருடத்தின் முதல் நாளாகத் தைத் திங்கள் ஒன்றாம் நாளை அறிவித்திருக்கிறார்கள். அதற்காகப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2008 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைத் திங்கள் முதல் நாளை, தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்ததை, நான் ஆளுநர் உரையின்மீது பேசுகிறபோதே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்றிருக்கிறேன். இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று மகிழ்கிறோம். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்பதற்கானச் சட்டமுன்வடிவை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

1921–வது ஆண்டு, சுமார் 87 ஆண்டுகளுக்கு முன்பு, மறைமலை அடிகளார் தலைமையில், பேராசிரியர் நமச்சிவாயர் முன்னிலையில் நடைபெற்ற கருத்தரங்கில், அன்றையதினம் மூத்த தமிழறிஞர்களாக இருந்த, தமிழ்த் தென்றல் திரு. வி.க., தமிழ்க் காவலர் திரு. கா. சுப்பிரமணியம், சைவப் பெரியார் சச்சிதானந்தம், நாவலர் வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டு, தை முதல் நாளே, தமிழ் ஆண்டின் தொடக்க நாள் என்று முடிவு செய்தார்கள்.

1935–வது ஆண்டில், அகில தமிழர் மாநாட்டினைத் திருச்சியில், தந்தை பெரியார் முன்னின்று நடத்தினார். பசுமலை சோமசுந்தர பாரதியார் தலைமை தாங்கினார். அந்த மாநாட்டில், மறைமலை அடிகளார், திரு. வி.க., தமிழவேள் பி.டி. ராஜன், உமா மகேஸ்வரனார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, ஆற்காடு ராமசாமி முதலியார், பாவேந்தர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரிசாமி போன்ற தமிழ் அறிஞர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். அந்த மாநாட்டிலேதான், தமிழர் திருவிழாவான பொங்கல் திருநாளை, ஒரு சமய சார்பற்ற தமிழர் விழா எனவும், தை முதல் நாளே, தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்றும்

[திரு. மு. கண்ணப்பன்] [2008 பிப்ரவரி 1

தீர்மானத்தைத் தமிழவேள் பி.டி. ராஜன் அவர்கள் முன்மொழிய, திரு.வி.க. அவர்கள் வழிமொழிய, ஒருமனதாக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சமயத்திலேதான், திருவள்ளுவர் காலம், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு, 31 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தொடங்கிவிட்டது என்ற அறிவிப்போடு, தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் தை முதல் நாள் என்று 73 ஆண்டுகளுக்கு முன்பு, 18-1-1935-ல் உறுதி செய்யப்பட்டது.

பிற்பகல் 12-10

அதனுடைய தொடர்ச்சியாகத்தான் 1971-ல் தமிழக முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தமிழக அரசின் நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் திருவள்ளுவராண்டு எனத் தமிழ் ஆண்டு குறிப்பிடப்பட்டு வருகின்றது. கடந்த 87 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழறிஞர்களும், ஆன்றோர் பெருமக்களும் வலியுறுத்தி வந்த தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கு சட்டரீதியான அங்கீகாரத்தை உருவாக்கித்தர இந்தச் சட்டமுன்வடிவு வழிவகை செய்கிறது. இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று இதைக் கொண்டுவந்திருக்கின்ற தமிழக முதல்வர், முத்தமிழறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் வருடப் பிறப்பான தை ஒன்றாம் தேதியை, மறைமலையடிகள் போன்ற புலவர்கள் கண்ட கனவை நனவாக்கி, உலகத் தமிழர்களெல்லாம் மகிழ்ச்சியடைகின்ற வகையிலே, தமிழ் வருடப் பிறப்பாக நமக்கு இந்த ஆண்டு பரிசாக அளித்த நம்முடைய தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2008 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/ 2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2008), மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 30-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/ 2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அறிவிப்புகள்

### (அ) திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2008) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரச் சட்டங்கள் நிராகரிக்கப்படவேண்டுமென்னும் தீர்மானங்களைக் கொடுத்த உறுப்பினர்கள் அவையில் இல்லாததால் அத்தீர்மானங்கள் முன்மொழியப்பெறவில்லை.

### (இ) திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2008), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

---

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர்.

பிற்பகல் 12-15

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக்குகின்ற நல்ல அறிவிப்புக்கு காங்கிரஸ் பேரியக்கம் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏறத்தாழ 10,000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டித்தருகிற திருப்பூர் நகரிலே மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிற மாசுபடுத்துகிற கழிவு நீருக்கு ஒரு திட்டம் அறிவிக்கப்படாமல் இருக்கிறது. அதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இந்தச் சட்டமுன்வடிவை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே வரவேற்று, நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்னலாடைத் தொழில் வளர்ச்சியின் விளைவாக அபரிமிதமாக ஏற்பட்ட திருப்பூரின் பெரு வளர்ச்சியின் காரணமாகவும் தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த மக்கள் திருப்பூரிலே வேலைவாய்ப்பின் காரணமாகக் குடியேறி தற்பொழுது அது ஒரு பெரு நகரமாக மாறியுள்ள நிலையில், நம்முடைய திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுகிற தமிழக அரசினுடைய முடிவையும் இந்தச் சட்டமுன்வடிவையும் வரவேற்கிறேன். இந்த நகராட்சி மாநகராட்சியாக மாற்றப்படும் சூழலில் அந்த நகரத்திற்குள்ளே நிறைவேற்றப்படவேண்டிய பல்வேறு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இதன்மூலம் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற வகையில் இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் திருப்பூர் தொகுதி மக்களின் சார்பிலும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த வேண்டுகோளை நிறைவேற்றித் தந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருப்பூர் தொகுதி மக்களின் சார்பில் இந்தச் சந்தர்ப்பத்திலே நன்றியைத் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

[2008 பிப்ரவரி 1

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரை மாநகராட்சியாக அறிவித்திருப்பதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். "திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக அறிவிப்பதை இப்பேரவை நிராகரிக்கின்றது" என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் அ.இ.அ.தி.மு.க. சார்பிலே. இதைப் பதிவு செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் நான் இப்போது பேசுகிறேன். எதெதற்கு நிராகரிக்கின்றது என்பதைப்பற்றியே அறியாதவர்களாக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதற்குச் சான்று இது. நம்முடைய தமிழகத்தில் ஒரு மாநிலத்தில் ஒரு நகராட்சி மாநகராட்சியாக ஆகிறது என்பது வரவேற்கக்கூடியது. அதிலும் குறிப்பாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினரே கொடுத்திருக்கிறார் என்றால் அந்தக் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதையும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அ.இ.அ.தி.மு.க.வினுடைய அரசியல் நாகரிகம் அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



2008 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/ 2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2008 பிப்ரவரி 1

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2008) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2008), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின்... (குறுக்கீடு) முதலிலேயேதான் பேசிவிட்டீர்களே, உட்காருங்கள். திரு. விடியல் எஸ். சேகர், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை, இது ஈரோடு நகராட்சிபற்றியது. தந்தை பெரியார் பிறந்த பூமி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வருடைய குருகுலமாக தந்தை பெரியார் பிறந்த பூமியாக இருக்கிற ஈரோட்டை நகராட்சியிலிருந்து மாநகராட்சி ஆக்கி அவருடைய கனவை நிறைவேற்றியிருக்கிற தமிழக அரசுக்கு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 பிப்ரவரி 1] [திரு. விடியல் எஸ். சேகர்]

அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாநகராட்சியாக அறிவிக்கப்படும்போது நகரத்தினுடைய வளர்ச்சிக்கு இரண்டு பணிகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். ஒன்று ஈரோடு மாநகராட்சியினுடைய போக்குவரத்து நெரிசலைச் சமாளிப்பதற்கு இரண்டு மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஈரோடு மாநகரத்தைச் சுற்றி உள்வட்டப் பாதை அமைக்க வேண்டும், Ring Road அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, தந்தை பெரியாருடைய கனவை நிறைவேற்றியிருக்கிற தமிழக அரசுக்கு ஈரோடு மாநகரத்து மக்கள் சார்பிலே, ஈரோடு மாவட்டத்து மக்கள் சார்பிலே நன்றி தெரிவித்து காங்கிரஸ் பேரியக்கம் சார்பிலே வரவேற்று அமர்கிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய கனவை நனவாக்கும் வகையில், ஈரோடு நகரத்தை மாநகராட்சியாக மாற்றுகிற இந்தச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்தி, இன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களது திருக்கரங்களாலே தொடங்கி வைக்கப்பட்டதற்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோடு பகுதி, சுற்றியிருக்கின்ற ஜவுளித் தொழிலை நம்பியிருக்கின்றது. அந்த ஜவுளித் தலத்திற்கு தகுந்த உயர்வைத் தேடித் தருகின்ற வகையிலே—அங்கு மாசுபடிந்த நீராக இருக்கின்ற காரணத்தால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, இன்று ஜவுளித் துறை

முடங்கியிருக்கின்றது—அதை நம்பியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையிலே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக நசுங்கியிருக்கின்ற அந்தத் தொழிலை விரிவுபடுத்துகின்ற வகையிலே, இந்த அரசு அந்தத் தொழிலுக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகராட்சி மன்றம் தன்னுடைய தீர்மானமாக, 30-11-2004 அன்று ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக உயர்வு செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானத்தை இயற்றியிருக்கிறது. இதிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே குறிப்பிட்டு, பெருமையோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

1917 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 17 ஆம் தேதி அன்று, ஈரோடு நகராட்சியில் அன்றைக்குத் தலைவர் பொறுப்பில் இருந்த நம்முடைய ஈரோட்டுச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்கள் இந்தத் தீர்மானத்தை அப்பொழுதே கொண்டுவந்து, ஈரோடு நகராட்சியை விரிவுபடுத்த வேண்டுமென்று, அவரே கையொப்பமிட்டு, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த செப்டம்பர் மாதம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முப்பெருவிழா நிகழ்ச்சி, ஈரோடு நகரத்திலே நடைபெற்றபோது, நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அப்போது தந்தை பெரியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானத்தை, அந்தக் கூட்டத்திலே படித்துக்காட்டி, விரைவிலே அது மாநகராட்சியாக மாற்றப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலேதான் இப்பொழுது அந்த ஈரோடு நகராட்சி, ஏறக்குறைய 90 ஆண்டு காலத்திற்குப் பிறகு, தந்தை பெரியார் கண்ட கனவு, இன்றைக்கு இந்த ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/ 2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. தீவிரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்—உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றுமுன் இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே பதிவு செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்த ஒரு கருத்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களைப் பற்றி ஆதரித்திருப்பது குற்றமாகாது என்று சொன்னார். அது தவறு. அப்படி Supreme Court-லே சொல்லவேயில்லை" என்று ஒரு தவறான கருத்தை அவர் இங்கே பதிவு செய்திருக்கிறார். ஆனால், நான் அவருக்குத் தெரிவிக்க



விரும்புகிறேன். அவருக்குச் சாதகமான சில வரிகளைப் படித்தார். நான் தெளிவாக அந்த நீதிபதிகள் உரைத்த அந்தத் தீர்ப்பிலிருந்து ஒரு பகுதியை நான் படித்துக் காட்டுகிறேன்.

*பிற்பகல் 12-25*

"Therefore, it is obvious that the offence under Section 20 or 21 or 22 needs positive inference that a person has acted with intent of furthering or encouraging terrorist activity or facilitating its commission. In other words, these Sections are limited only to those activities that have the intent of encouraging or furthering or promoting or facilitating the commission of terrorist activities. If these Sections are understood in this way, there cannot be any misuse. With this clarification we uphold the constitutional validity of Sections 20, 21 and 22."

அதை அடிப்படையாக வைத்துதான் P.O.T.A. Review Committee-ல் வருகிறபொழுது, "expressing sympathy"—இவரும் Supreme Court Judge தான்—"and asking others to understand and appreciate or even share the miseries suffered by Eelam Tamils to espouse the cause of Tamilians, would not bring the address within the ambit of encouraging or furthering terrorists, terrorism or the terrorist activities of LTTE. The speech was mainly to support the cause of all Tamils including Eelam Tamils. This address will not fall within the ambit of encouraging support for all terrorists organisations under Section 21, P.O.T.A." என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, தெளிவாக இவ்வளவு சொன்னதை, போகிறபோக்கில் மறைத்துவிட்டு, அவருக்குச் சாதகமான ஒரு வரியைப் படித்துவிட்டு இந்த இடத்திலே தவறான ஒரு செய்தியைப் பதிவு செய்திருக்கிறார்கள். அதை மறுத்து, என்னுடைய கருத்தை இங்கு நான் பதிவு செய்திருக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2008), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2008), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 பிப்ரவரி 1

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-30

## (ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2008), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 பிப்ரவரி 1

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2008), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 பிப்ரவரி 1

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2008) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாய மக்களுடைய உயிர்நாடியாக இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள், கடந்த ஆண்டு காலத்திலே, தேர்தல் நடத்தி அதிலே நடந்த முறைகேடுகளின் காரணத்தினாலே கூட்டணிக் கட்சித் தலைவர்களினுடைய கோரிக்கையை ஏற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரத்து செய்து, ஆறு மாதத்திற்குள்ளாக மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய ஆலோசனையைப் பெற்று முறையான தேர்தலை நடத்துவோம் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு இன்னும் நிலுவையில் இருக்கிறது. எனவே, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் உயிர் பெறவேண்டுமென்று சொன்னால் அந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றுகிற செயலாளர்கள், அவர்கள் தொடர்ந்து அதே வங்கிகளில் பணியாற்றுவதால் பல்வேறு முறைகேடுகளுக்கு அது வழிவகுக்கிறது. எனவே, அவர்களை இடம் பரிமாற்றுவதற்கான சட்டத் திருத்தத்தையும் இந்த நிலையிலே கொண்டு வரவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேரகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செயலாளர்களை எல்லாம் மாற்றலாம் என்று தொடக்க

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 பிப்ரவரி 1] [திரு. சி. ஞானசேகரன்]

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி குறித்து, அரசு ஓர் ஆணை பிறப்பித்து. அவர்கள் உயர் நீதிமன்றம் சென்று ஓர் வழக்கைப் போட்டு விட்டார்கள். ஆனால், அதற்குப்பிறகு அரசு இதுவரை அந்தச் செயலாளர்களை மாற்றுகிற அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருந்துகொண்டிருக்கிறது. அந்தச் செயலாளர்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையோ, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையோ, நீங்கள் தொடக்க வேளாண்மை வங்கிகளில் மாற்றினால்தான் ஓரளவிற்கு நாம் நல்ல நிர்வாகத்தைச் செய்ய முடியும். காலையிலேகூட பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. மணி அவர்கள் பேசுகின்றபோது எங்கள் மாவட்டத்தில் கிரிசமுத்திரம் என்கிற கிராமத்தில், கூட்டுறவுக் கடன் தள்ளுபடி சான்றுகள் வழங்கப்படவில்லையென்று கூறினார். அதிலே ஏற்பட்ட சிக்கலே அங்கேயிருந்த செயலாளர் லோன் வாங்காத சிலருடைய பெயரை அவர்கள் லோன் வாங்கியதாக அவரே தயார் செய்து, பல முறைகேடுகளைச் செய்து, பல கோடி ரூபாய்களை அதிலே ஊழல் செய்துவிட்ட காரணத்தினால்தான் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டார். பிறகு அதுகுறித்த வழக்கு நிலுவையிலே இருக்கிற காரணத்தினால்தான், சில இடங்களில் அந்தச் சான்றுகள் இன்னும் வழங்கப்படாத நிலை அங்கே உருவாகி இருக்கிறது. ஆகவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் வங்கிச் செயலாளர்களை மாற்றுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தொடக்க வேளாண்மை வங்கியில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு ஆறு, ஏழு மாதங்களாக சம்பளமே வராத நிலை என்னுடைய மாவட்டத்திலே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, சம்பளம் இல்லாமல் அவர்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து நான் கவன ஈர்ப்புத் தீர்மானம்கூட விதி 55-ன்படி கொடுத்தேன். இன்னும் ஒன்றுகூட எடுக்கப்படவில்லை. நீங்கள் சட்டமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்துவிட்டீர்கள் என்று சொன்னால், நான் ஏற்கெனவே 250 முன்னறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன். அதன்பிறகு மீண்டும் ஒரு முறை நான் எழுதி. எழுதிக் கொடுப்பது சிரமமாக இருக்கும். ஆகவே, நீங்கள் prorogue செய்தாலும்கூட, அதற்கு உயிர் கொடுத்து அப்படியே அடுத்த கூட்டத் தொடரில் அதையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்கிற கோரிக்கை வைத்து நான் அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொல்வது அவ்வளவையும் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை விரைவிலே எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

பிற்பகல் 12–35

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற செயலாளர்களுக்கு இரண்டு ஆண்டுகள் கழித்தோ அல்லது மூன்று ஆண்டுகள் கழித்தோ மாறுதல் என்பதனை அரசு கட்டாயமாகச் செய்ய வேண்டும். தொடர்ச்சியாக அவர்களே அந்தப் பணியில் இருப்பதால் அதிகத் தவறுகள் அந்தத் துறையில் ஏற்படுகின்றன.

இன்னும் சொல்லப்போனால், முறையாகச் செயலாற்றுகின்ற பொறுப்பாளர்களாக அவர்கள் இருப்பதில்லை என்பதனையும், நடைமுறையில் அதிகத் தவறுகள் அங்கு நடைபெறுகின்றன என்பதனையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்தில் அந்தத் துறையில் பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் 7 மாதம், 8 மாதம் சம்பளமே இல்லாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசு சரி செய்ய வேண்டும். கூட்டுறவுத் தேர்தலை முறையாக நடத்துவதற்கு உள்ளாட்சித் தேர்தலுக்கு இருப்பது போன்ற ஒரு தேர்தல் ஆணையத்தை அரசு ஏற்படுத்த வேண்டும். அதற்குத் தனி அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டும். அந்தத் தேர்தல் ஆணையம் செயலாக்கத்திற்கு வரும்பொழுது வாக்காளர்களுக்கு அடையாள அட்டை கொடுப்பதற்கான ஒரு ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும் என்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பதியவைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திருப்பித் திருப்பி எல்லாம் கேட்க முடியாது. உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடு) நினைத்த நேரம் எல்லாம் வாய்ப்பு கொடுக்க முடியாது. உட்காருங்கள் முதலிலே.



2008 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2008). மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டம் 22/1959–ன் 6 ஆம் பிரிவில், உட்பிரிவு 18–ஐத் திருத்துவதற்காக அரசு கொண்டுவந்துள்ள இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்கிறேன். அதேநேரத்தில், இந்து அறநிலையத் துறை தொடர்பான விவாதத்தில் சட்டப் பேரவையில் நான் கடந்த ஆண்டு பேசியபோது. எங்கள் கடலூர் மாவட்டத்தில் இருக்கிற சிதம்பரம் கோயிலில் தேவாரம், திருவாசகம் தமிழில் பாடுவதற்கு அனுமதி வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திப் பேசினேன். அதுவும், பல கோயில்களில் "தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்" என்ற வரி இருந்ததை வலியோடு உள்வாங்கிய நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், அது என்ன "தமிழிலும்" என்ற இழிவான சொல், அது உடனடியாக அகற்றப்படும் என்று உத்தரவிட்டார். இன்றைக்கு அகற்றப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த நடராஜப் பெருமாள் கோயிலிலே திரு. ஆறுமுகச்சாமி என்ற ஓர் ஓதுவார் தேவாரம், திருவாசகம் அங்கு பாடுவதற்கு நிச்சயம் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், அந்தத் துறையினுடைய அலுவலர் பெருமக்களும், அந்தத் துறையும் இதுநாள் வரையில் அங்கு முதலமைச்சர் அவர்களுடைய உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்ததா என்று கேட்டால், பதில் நிச்சயமாக வருத்தம் அளிக்கக்கூடிய செய்தியாக இருக்கிறது.

இந்தச் சட்டமுன்வடிவிலே நான் கூற விரும்புவது, அதையொட்டி பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்திலே வருகின்றபோது, அரசினுடைய மூத்த வழக்கறிஞர்களோ—Advocate General அவர்களோ, அரசினுடைய நாம் இன்றைக்கு 76 கோடி ரூபாயில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று செம்மொழி ஆய்வு மையத்தை நிறுவுகின்ற, அதுவும் தமிழகத்தில் தலைவர் கலைஞரைத் தலைவராகக் கொண்டு நிறுவப்படுகின்ற. இந்தக் காலக்கட்டத்தில்கூட— அதற்கான முடிவு எட்டப்படாமல் பல ஆண்டு காலம் இழுத்தடிக்கிற நிலைமை இருக்கிறது. அரசின் சார்பாக எந்த வழக்கறிஞரும் நீதிமன்றத்திலே நம்முடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்குத் தயாராக இல்லை. திரு. காந்தி போன்றவர்களும், சிதம்பரத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண வழக்கறிஞர் திரு. ராஜு போன்றவர்களும் எடுத்து வைத்துள்ள வாதங்களை நீதிமன்றம் ஏற்றுக்[illegible] நிலையில், நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. "துறையி[illegible] என்ன சொல்கிறார்களோ, அதை ஏற்றுக்கொள்கிறோம்[illegible]

228078
Chennai-600 00[illegible]

நீதிமன்றம் சொன்னபோது, துறையின் ஆணையர் திரு. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் அங்கு தமிழில் பாடுவதற்கு எந்தவிதத் தடையும் இல்லை, பாடலாம் என்று அனுமதி அளித்திருக்கிறார். அனுமதியை எடுத்துக்கொண்டு பாடுவதற்கு ஓதுவார் செல்கின்றபோது, காவல் துறை போதிய பாதுகாப்பு தராமல் பாடச் சென்றவர்களை, அங்கு இருக்கின்ற 10 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆறரை கோடி தமிழர்களின் மனங்களைப் புண்படுத்துகின்ற வகையில் அடித்துத் துரத்துகின்ற அவலம் ஏற்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 12-40*

நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுவது, இப்போது அப்பீலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நம்முடைய அரசுச் செயலாளர் உத்தரவிட்டால் பாடலாம் என்று உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அரசுச் செயலாளர் உடனடியாக ஆணையிட்டு, முதலமைச்சர் அவர்களுடைய உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கும், பாடச் செல்கின்றவர்கள்—அது ஆறுமுகச்சாமியாக இருக்கலாம் அல்லது தமிழ்நாட்டில் பிறந்த எந்தத் தமிழனாகவும் இருக்கலாம்—அந்தத் திருக்கோயிலில் தமிழில் பாடச் செல்வதற்கு போதிய பாதுகாப்பு அளித்து, அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கும், செம்மொழி கண்ட தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு முன் வரவேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலில் தேவாரம், திருவாசகம் பாட வேண்டும் என்றும், அதில் துறை அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை, அதிகாரிகள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை, மூத்த வழக்கறிஞர்களை வைத்து வழக்காடவில்லை என்றெல்லாம் இங்கே ஒரு குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். ஆனால், நடைபெற்றது என்னவென்றால், துறையின் சார்பில் ஏற்கெனவே ஆணையர் அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதையும் அவர் ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, அந்தத் தீர்ப்பில் மேல் முறையீடு கோரி தீட்சிதர்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி (Single Judge) கொண்ட நீதிமன்றத்திற்குச் சென்றார்கள்.





பிறகு Bench-க்கும் சென்றார்கள். துறையைச் சார்ந்த அரசுச் செயலர் அவர்களே விசாரித்து முடிவெடுக்கலாம் என அந்த Bench தீர்ப்பு வழங்கியதன் அடிப்படையில் இப்போது செயலர் விசாரித்துக் கொண்டிருக்கிறார். உண்மை நிலை இவ்வாறு இருக்க அரசோ, துறையோ அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று உறுப்பினர் அவர்கள் கூறுவது முறையாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை, (சட்டமுன்வடிவு எண் 8/2008) வரவேற்கிற அதேநேரத்தில், கடந்த ஆண்டு நான் சட்டமன்றத்திலே ஒரு கோரிக்கையை வைத்தேன். நம்முடைய வரலாற்றுச் சிறப்புமிக்க டாக்டர் கலைஞர் அவர்கள், மரியாதைக்குரிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள்; சோளிங்கர் யோக நரசிம்மர் ஆலயத்திற்கு Rope Car வசதி செய்து தரப்படும் என்று. ஆனால், ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட பிறகும், இன்னும் அதற்கான தொடக்கப் பணிகளே ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன. நாங்கள் விசாரித்த வரையிலே, அதற்கு மறு மதிப்பீட்டிற்காக அனுப்பி இருக்கிறார்கள் அல்லது அரசாணைகள் வெளியிடப்படாமல் இருக்கிறது; அதனால்தான் அந்தப் பணிகள் தாமதமாகின்றன என்ற காரணத்தைச் சொன்னார்கள். அதேபோல, யோக நரசிம்மர் ஆலயத்திற்கு இன்னும் அறங்காவலர்கள் குழு அமைக்கப்படாமல் இருக்கிறது. அதைக் கேட்கின்றபோது, இதுகுறித்து High Court-லே case நிலுவையில் இருக்கிற காரணத்தால் அறங்காவலர்கள் குழு நியமிக்கப்படாமல் இருக்கிறது என்ற ஒரு காரணத்தையும் சொன்னார்கள். ஆனால், High Court-ல் இருக்கிற case-ம் தள்ளுபடியாகி ஏறத்தாழ ஒரு வருடம் கடந்துவிட்டது. இன்னும் அங்கே அறங்காவலர்கள் குழுவும் அமைக்கப்படாமல் யோக நரசிம்மர் ஆலயத்தின் பணிகளும் மிகவும் தாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறபடியால், இந்தநேரத்திலே அதை நீங்கள் கவனத்தில்கொண்டு, நல்லபடியாக முடித்துத் தரும்படியும், சோளிங்கர் யோக நரசிம்மர் ஆலயத்திற்கு Rope Car அமைக்கும் பணியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றும் என்னுடைய கோரிக்கையை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, Rope Car விட வேண்டுமென்று தொடர்ந்து பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்தார்கள். இந்தத் துறையும், அரசும் அதை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பி, அதற்கான ஆய்வறிக்கையைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, இப்போது RITES INDIA என்று சொல்லப்படுகிற டெல்லியைச் சார்ந்த மத்திய அரசினுடைய நிறுவனத்திற்கு அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் தந்த அந்த ஆய்வறிக்கையில் —feasibility report—அது சரியாக இல்லை, அது உகந்ததாக இல்லை என்று தந்திருக்கிறார்கள். இருந்தாலும், அந்த முயற்சியை மேற்கொண்டு, வெகு விரைவிலே அங்கே Rope Car அமைப்பதற்கு நாங்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12-45

## 6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2008) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஒ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2008). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 1-2-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஓ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2008), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 1-2-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பிரதாயத்திற்காக முதலமைச்சருடைய பதிலுரை என்ற தலைப்பில், மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே கடந்த ஒரு வாரமாகத் தெரிவித்துள்ள கவர்னர் உரை பற்றிய கருத்துகளுக்கு



என்னுடைய விளக்கத்தை, பதிலை அளிக்க விரும்புகின்றேன், மிகச் சுருக்கமாக. ஏனென்றால் இன்று ஆளுநர் உரைக்கு நன்றிகூறுகின்ற தீர்மானத்தின்மீது இறுதிநாள் விவாதமாகும். நம்முடைய அவைக்கு—ஆங்கிலத்திலே சொன்னால் Business Advisory Committee என்று ஒன்று இருக்கிறது—அலுவல் ஆய்வுக் குழு—அந்தக் குழு தங்களுடைய அறையிலே கூடி எடுத்த முடிவின்படி எந்தெந்தக் கட்சி எந்தெந்த நாளில் பேசுவது, இறுதியாக எந்தெந்தக் கட்சிகளுக்கு எவ்வளவு நேரம் அளிப்பது என்றெல்லாம் முடிவு செய்யப்பட்டு, அதன்படி நிகழ்ச்சிகள், உரைகள், நிகழ்த்தப்படுவது உண்டு. ஆனால், இந்தத் தடவை—திடீரென்று என்று சொல்லமாட்டேன்—திட்டமிட்டு, அந்த முறையை முறியடிக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்கிடையிலே தங்களுடைய ஆணையின்படி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின் அடிப்படையில் என்னுடைய கருத்துகள் சிலவற்றை இங்கே வைக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப்பொறுப்பிலே இருந்தாலும்கூட, தோழமைக் கட்சிகளுடைய அன்பான அரவணைப்போடும், அரசியல் ரீதியான உறவோடும், ஜனநாயக மாண்போடும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது, தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, இந்த ஒரு வார காலத்திலே, எந்தெந்தக் கட்சிக்கு, ஜனநாயக முறைப்படி பேசுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வது நலம் என்று கருதுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 7 பேர் இந்த வாரம் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். 7 பேருக்கு அளிக்கப்பட்ட நேரம் 1 மணி 41 நிமிடம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக 5 பேர் கலந்துகொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் 2 மணி 40 நிமிடங்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் 5 பேர் கலந்துகொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்ட நேரம், ஒரு மணி 52 நிமிடங்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் 5 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட நேரம், 1 மணி 26 நிமிடங்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே நான்கு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள், அவர்களுக்கு அளிக்கப்பட்ட மொத்த நேரம் 59 நிமிடங்கள். ம.தி.மு.க. சார்பில் 3 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட நேரம் 48 நிமிடங்கள். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் 2 பேர்

கலந்துகொண்டார்கள், அவர்களுக்கு *21* நிமிடம் மொத்த நேரம், சுயேச்சை உறுப்பினர் ஒருவர் *8* நிமிடம் உரையாற்றியிருக்கிறார். மொத்தம் *42* உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார்கள்.

தி.மு.க.—வுக்கு *7* உறுப்பினர்களுக்கு *1* மணி *41* நிமிடங்களும். எதிர்க்கட்சி அ.இ.அ.தி.மு.க. வுக்கு *10* உறுப்பினர்களுக்கு *3* மணி நேரம் *30* நிமிடங்களும் இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நமக்கு என்ன பெயர் என்றால் ஜனநாயகத்தை நாம் புறக்கணிக்கிறோம் என்பதுதான் நமக்கு அவர்கள் இடுகின்ற சிறப்புப் பட்டம். இது ஜனநாயகமா அல்லவா என்று அவர்களை சிந்திக்க நான் சொல்லவில்லை. அவர்கள் சிந்திக்கும் ஆற்றலை வேண்டுமென்றே புறக்கணிப்பவர்கள். அதனால் நான் அவர்களை சிந்திக்கச் சொல்லவில்லை. இதுபற்றி எல்லாம் செய்தி வெளியிடுகின்ற ஏடுகள், இதழாளர்கள், வார இதழ்கள் இவர்கள் இதைப் பற்றி கருத்தைச் சொன்னால்தான் இந்த அவை ஜனநாயக நெறியிலே தொடர்ந்து நடைபெறவும், இந்த அவையிலே நாட்டிற்குத் தேவையான, மக்களுக்குத் தேவையான, பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து அதன்படிச் செயல்படவும் இயலும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-55*

குறிப்பாக தமிழகத்திலே இருக்கின்ற ஏடுகள், திராவிட முன்னேற்றக் கழக அரசைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகின்றவன் அல்ல. எந்தச் செய்தியானாலும் அந்தச் செய்தியை விமர்சிக்க, சொன்ன கருத்தை மதிப்பிட, மக்களிடத்திலே எடுத்துச்சொல்ல அவர்களுக்கெல்லாம் உரிமை உண்டு. பத்திரிகை உரிமையை, பத்திரிகா தர்மத்தை மதிக்கின்ற நாங்கள் என்றைக்கும் அதன் குரல்வளையை நெரித்து அடக்கிப் போடவேண்டும் என்று கருதுகின்றவர்கள் அல்ல. ஆனால், பத்திரிகைக்காரர்கள், தமிழ்நாட்டிலே உள்ள பத்திரிகைக்காரர்கள், இந்தக் காட்சியையெல்லாம் கண்டார்கள். எப்படி நடந்தது, ஏறத்தாழ ஒரு வார காலமாக அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அவையில் இன்றைக்குத் திடீரென்று ஒரு புயல் கிளம்ப என்ன காரணம், இத்தகைய பூசல் எழ என்ன காரணம் என்பதை அவர்கள் எண்ணிப்பார்த்து, அதை மக்களுக்கு அச்சமின்றி விளக்க வேண்டும். அதுதான் பத்திரிகா தர்மமாக இருக்க முடியும் என்று நான் அவர்களுக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



இந்த கவர்னர் உரை பற்றித் தமிழகத்திலே உள்ள பத்திரிகைகள் எல்லாம் என்ன சிறப்புரைகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே திரும்பத் திரும்ப எடுத்துக்காட்ட விரும்பவில்லை. தமிழ்நாட்டிலே உள்ள முக்கிய ஏடுகள் இந்த ஆளுநர் உரை எவ்வாறு அமைந்துள்ளது, மக்களுக்கு எத்தகைய செய்திகளை, தகவல்களை, நன்மைகளைத் தரவல்லது என்பதை எழுதியிருக்கின்றார்கள், தலையங்கங்களிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதிலே ஆளுங்கட்சிக்கு அனுசரணையாக உள்ள ஏடுகள் என்ன சொல்லியிருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட எண்ணவில்லை. ஆளுங்கட்சியை நல்லவைகளுக்காக ஆதரித்து, அல்லவைகளுக்காக எதிர்த்துக் கருத்து சொல்கின்ற ஏடுகள், அந்த ஏடுகள் தோழமைக் கட்சிகளுடைய ஏடுகளாக இருந்தாலும் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தினமணி ஏட்டில் 'இனிக்கிறது ஆளுநர் உரை' என்று தலைப்பிட்டு "குற்றம் காண வேண்டும் என்று பார்க்காமல் ஆளுநர் உரைமூலம் அரசு மக்கள்முன் வைத்திருக்கும் தனது திட்டங்களைச் சற்று உற்று நோக்கினால், அரசின் எண்ண ஓட்டத்திலும், நோக்கத்திலும் நிச்சயமாகப் பழுது காணமுடியாது என்பதுதான் நமது கருத்து. ஒரு சில திட்டங்கள் அல்லது அரசின் முயற்சிகள் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியவை என்றுகூடக் கூறலாம்.

உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கப்படும் என்றும், இதற்காக அமைக்கப்பட்ட உயர் நிலைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்திருப்பதை இருகரம் கொட்டி வரவேற்க வேண்டும். அதிகாரப் பகிர்ந்தளிப்புமூலம் உள்ளாட்சி அமைப்புகள் பலப்படுத்தப்பட்டால் மட்டும்தான் கிராமப்புற வளர்ச்சியும், கிராமங்களின் சுயச் சார்பும் உறுதி செய்யப்படும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

புதிய தொழில் கொள்கைமூலம் சுமார் *20* இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்கின்ற உயரிய சிந்தனை அரசிடம் காணப்படுவதற்கு வாழ்த்துகள்.

*பிற்பகல் 1-00*

சுமார் ரூ.*15* ஆயிரம் கோடியில் *12* புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் MoU கையெழுத்திடப்பட்டு, நான்கு தொழிற்சாலைகள் செயல்படவும் தொடங்கிவிட்டதாக ஆளுநர் உரையிலே கூறியிருப்பதை அரசுக்குத் தரப்பட்ட நற்சான்றிதழாக ஏற்றுக்கொள்ளலாம்". *(மேசையைத் தட்டும் ஒலி)*

[கலைஞர் மு. கருணாநிதி] [2008 பிப்ரவரி 1

"சிறு தொழில்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கும் தனிக் கொள்கை என்பதுடன் நின்றுவிடாமல் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கும் சிறப்புச் சலுகைகள் என்பதைக் கேட்கும்போது நிச்சயம் சபாஷ் போடத் தோன்றுகிறது" என்று தினமணியே எழுதியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுவதிலே உள்ள ஆச்சரியத்தை நீங்கள் உணர்வீர்கள். உண்மையையும் நீங்கள் உணர்வீர்கள் என்றே கருதுகிறேன்.

அடுத்து, 'தமிழ் ஓசை'. பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஆதரவாக இருக்கின்ற ஏடு. இப்போது நமக்கும் அவர்களுக்கும் கொஞ்சம் ஊடல் இருந்தாலும்கூட (சிரிப்பு) இல்லையென்கிறார் மணி, 'ஊடல் இருந்தாலும்கூட' என்று சொன்னதை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்—ஆனாலும், அப்படி இருக்கும் என்று சொன்னதும் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். அப்படி இருக்கும் என்று சொல்லிவிட்டு அந்த பத்திரிகையிலே, தமிழ் ஓசை பத்திரிகையிலே, நல்ல எழுத்தாளர்கள் எல்லாம் அங்கே உண்டு, எனக்குத் தெரியும். அதில் சொல்கிறார்கள், "அமைதி நிலவி வரும் தமிழகம், சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துவிட்ட மாநிலமாக அ.தி.மு.க.வின் பார்வைக்குத் தெரிவதிலிருந்தே, அதன் அரசியல் குரோதம் எடுப்பாக வெளிப்படுகிறது.

தமிழர்களின் உணர்வுகளுக்கு ஈடு செய்யக்கூடிய சில அறிவிப்புகள் இந்த உரையில் இடம் பெற்றிருப்பதைப் பாராட்டவே வேண்டும். உள்ளாட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு உயர் நிலைக் குழுவின் அறிக்கை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது" என்று தமிழ் ஓசை குறிப்பிடுகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆதரவு ஏடு, தீக்கதிர். "தி.மு.க., தேர்தலில் கொடுத்த நலத் திட்ட வாக்குறுதிகளைப் பெருமளவு நிறைவேற்றி வருகிறது. அரிசி கிலோ 2 ரூபாய்க்கு வழங்குவது நன்று, வரவேற்கத்தக்கது. 20 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி இருப்பதாக அரசு அறிவித்துள்ளது. அதற்காக 15,083 கோடி ரூபாய் செலவில் 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் 1,37,140 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் கப்பல் கட்டும் தளம்மூலம் 10 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்றும், சிறு தொழில்மூலம் 10 இலட்சம் பேர் வேலை பெறுவார்கள் என்றும் ஆளுநர் உரை தெரிவிக்கிறது. ஏற்கெனவே இருந்த ஆட்சி எதையும் செய்யாத நிலையில் இது பாராட்டத்தக்கது" என்று தீக்கதிர் குறிப்பிடுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



2008 பிப்ரவரி 1] [கலைஞர் மு. கருணாநிதி]

அதுமாத்திரம் அல்ல, அவர்களுடைய கோரிக்கையாக இருந்த அருந்ததிய மக்களைப் பற்றியது. "அருந்ததிய மக்களுக்கு தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும் என்று அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்கது" என்று தீக்கதிர் குறிப்பிட்டிருக்கிறது.

ஜன சக்தி பத்திரிகை—"மாநிலத்திற்குட்பட்ட நதிகளை இணைத்திடும் திட்டத்தை மேற்கொள்வோம் என்ற அறிவிப்புடன் தென்னக நதிகளையாவது நிறைவேற்றும்படி நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளபடியும், உச்ச நீதிமன்றத்தின் தாக்கீதுபடியும் கோரப்பட்டிருக்கிறது. தேசபக்திமிக்க, வருங்கால சந்ததியின் வாழ்வுக்குரிய திட்டத்தை இந்தச் சந்ததி நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளது எனக் கூறியிருப்பது, வாழும் மனிதருக்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தைத் தமிழ் மக்கள் சார்பில் பிரகடனம் செய்கிறது.

அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 85,344 கோடி ரூபாய் அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, இவற்றைத் தமிழக மக்கள் வரவேற்பார்கள்.

எந்த அரசினாலும், ஓர் ஆண்டு அறிக்கையில் மக்களை வாட்டிடும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டிட முடியாது என்பதை அறிவோம். ஆனால், தீர்க்கும் திக்கு நோக்கி அடி எடுத்து வைக்க முயல வேண்டும். அந்த வகையில், தமிழக அரசு பிரச்சினைகளை அணுகியுள்ளதைப் பாராட்டுகிறோம்" என்று ஜன சக்தி எழுதியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

காலையில் எதிர்க்கட்சியின் சார்பில் எல்லோரும் பேசி— ஒருவர்தான் பேச வேண்டும் ஒரு கட்சியின் சார்பில் என்ற முறை இருந்தாலும், இலக்கணம் அதுவாக, சட்டமன்ற மரபாக இருந்தாலும்கூட—எல்லோருமே பேசி எங்களையெல்லாம், அமைச்சர்களையெல்லாம், ஆளுங்கட்சியிலே உள்ளவர்களையெல்லாம் எந்த அளவுக்கு அர்ச்சனை செய்யவேண்டுமோ, அந்த அளவுக்கு அர்ச்சனை செய்து, அவர்களுடைய பிரதான புரோகிதராக எதிர்க்கட்சியினுடைய தலைவர் அவர்கள் வந்திருந்து அவரும் அந்த அர்ச்சனையைத் தெளிவாகச் செய்துவிட்டு, நாங்கள் யாரை, எங்களுக்கு மூத்தவராக, அறிஞர் அண்ணாவுக்கு இளையவராக, இந்த அவையிலே

எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக மதித்து நடந்து வருகிறோமோ அந்த பேராசிரியப் பெருந்தகையை இழிவாக, கேவலமாக, கேலியாக, கிண்டலாகப் பேசவும், அதை நாங்கள் கேட்டுக்கொண்டு, பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதுமான நிலை, கேவலம் இந்த பதவியினால் அல்லவா எங்களுக்கு ஏற்பட்டது என்பதை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இந்த பதவிதான், முதலமைச்சர் என்ற பதவி அல்லது அமைச்சர்கள் என்கின்ற பதவி, எங்களை ஆடாமல், அசையாமல் இந்த அவையின் மதிப்பைக் காப்பாற்ற வேண்டும்; ஜனநாயகத்தினுடைய மாண்பைக் காப்பாற்ற வேண்டும்; 'அண்ணா வழியில் அயராது உழைப்போம்' என்று சூளுரைத்து பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாம் அதை மறந்துவிடக்கூடாது என்கின்ற அந்த ஒரே நிலையிலேதான் நாங்கள், பாஞ்சாலியைத் துகில் உரியும்பொழுது நெட்டை மரங்களாக நின்றார்கள் பஞ்ச பாண்டவர்கள் என்று வர்ணித்தானே மகாகவி, அந்த பாரதியினுடைய வர்ணனைக்கு ஏற்ப இன்றைக்கு நானும் மற்றவர்களும் இங்கே அமர வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

ஏனென்றால், திடீரென்று ஏற்பட்டதல்ல இந்தச் சூழ்நிலை; திட்டமிட்டு நடைபெற்ற இந்தச் சூழ்நிலை, "இன்றைக்கு முதலமைச்சர் பதிலளிக்கிறாரா? எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் பேசி முடிக்கிறார்களா? இந்த ஒரு வார காலம் சுமுகமாக நடைபெற்ற இந்த அவை முடியப் போகிறதே! அப்படி முடிய விடலாமா?" என்ற ஆத்திரத்தின் காரணமாக எற்பட்ட விளைவு அது. நாம் இந்த விளைவை, இன்று நேற்றல்ல, பல நேரங்களிலே இந்த அவையிலே கண்டிருக்கிறோம். அதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால், எதிர்க்கட்சியினுடைய தலைவர் அம்மையார் அவர்கள் கடந்த ஆண்டு கவர்னர் உரையைக் "குப்பைத் தொட்டி" என்று விமர்சித்தார்கள். இதுபோன்ற வார்த்தைகள்தான் அவர்களுக்கு வழக்கமாக வரக்கூடிய வார்த்தைகள். தாராளமாகப் பயன்படுத்தக்கூடிய வார்த்தைகள். நாகரிகமாகப் பேசவேண்டிய வார்த்தைகளை மறைத்துவிட்டு, மறுத்துவிட்டு, ஒதுக்கிவிட்டு, புறக்கணித்துவிட்டு, இதுபோன்ற சொற்களைப் பயன்படுத்துவது என்றால் அவர்களுக்குத் தனிச் சுவை. போன ஆண்டு "குப்பைத் தொட்டி" என்றார்கள். இந்த ஆண்டு, "கட்டுக் கதைகளின் கூட்டுத் தொகுப்பு" என்று ஆளுநர் உரையை விமர்சித்து தட்டச்சு செய்த ஒரு துண்டுத் தாளை அனுப்பி வைத்திருக்கிறார்கள். கவர்னர் உரையைப் பற்றி இங்கே பேசாமல், பேசவேண்டிய தேவையில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி, அந்த





அறிக்கையில் கருத்துரை என்ற பெயரால், இறுதியாக "எதற்கும் உதவாத கவர்னர் உரை, எதற்கும் உதவாத கட்டுக் கதைகளின் கூட்டுத் தொகுப்பு" என்று விமர்சித்திருக்கிறார்கள். பரவாயில்லை. அவர் சொல்கிறார்கள் செம்மொழி பற்றி—நேற்றைக்கு எல்லோரும் வாழ்த்துச் சொன்னீர்களே! அந்தச் செம்மொழியைப் பற்றிச் சொல்லுகிறார்கள். "செம்மொழி குறித்து ஆளுநர் உரையில் தம்பட்டம் அடித்திருக்கிறார் கருணாநிதி." ஆளுநர் உரையிலே செம்மொழியைப் பற்றி சொல்லப்பட்டதற்கு அந்த அம்மையாருடைய வருணனை இது. "தம்பட்டம் அடித்திருக்கிறார் கருணாநிதி. உண்மை நிலை என்னவென்றால் தமிழ்மொழி செம்மொழி என்று அறிவிக்கப்பட்டும் மத்திய அரசு கொடுப்பதாகச் சொன்ன 65 கோடி ரூபாய் இதுவரை கிடைக்கவில்லை. கனிமொழிக்குத் தருகிற முக்கியத்துவத்தைக்கூட கருணாநிதி செம்மொழிக்குத் தரவில்லை."

*பிற்பகல் 1-10*

செம்மொழிக்கும், கனிமொழிக்கும் என்ன? அவ்வளவு ஆத்திரம்; அவ்வளவு எரிச்சல்; அவ்வளவு பொறாமை. எனக்கும், என் மனைவிக்கும் வல்லமை இருக்கிறது, கனிமொழி பிறக்கிறது. "கனிமொழிக்குத் தருகின்ற கௌரவத்தைக்கூட, முக்கியத்துவத்தைக்கூட கருணாநிதி செம்மொழிக்குத் தரவில்லை"—இப்படி அவர்கள் பேசி, பத்திரிகையிலே வந்து, அவைக்கும் அந்தக் கருத்துகளை அச்சடித்து அனுப்பியிருக்கிறார்கள். பரவாயில்லை. எனக்கு அதிலே ஒரு மகிழ்ச்சிதான். எதிர்க்கட்சி என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆளுங்கட்சியைப் பார்த்து "என்ன செய்தாய்? ஏன் செய்யவில்லை?" என்று கேட்கவேண்டும். அதை விட்டுவிட்டு, கன்னாபின்னா என்று பேசாமல், முறையாக கருத்துகளை எடுத்து வைத்தால், அவர்களுக்கும் இலாபம், நாட்டுக்கும் இலாபம், ஆளுங்கட்சிக்கும் இலாபம், எதிர்க்கட்சிக்கும் இலாபம், எல்லாக் கட்சிகளுக்கும் இலாபம்.

நான் முன்பே சொல்லியிருக்கிறேன். சர் ஏ.டி. பன்னீர்செல்வம் என்று ஒருவர் இருந்தார், அறிஞர்—நான் அந்த பன்னீர்செல்வத்தைச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)—அவர் அறிஞர். ஐயாவுக்கு, தந்தை பெரியார் அவர்களுக்கு, வலது கையாக விளங்கியவர். அவர் இந்தியாவினுடைய ஆலோசகராக இலண்டனுக்குச் சென்றபோது வழியிலே, விமான விபத்தில் கடலிலே மூழ்கி மறைந்துபோனார். அந்த பன்னீர்செல்வம், இந்தச் சட்டசபையிலே வீற்றிருந்தபோது, அவரைப்பற்றி டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி—அவரை உங்களுக்குத்

தெரியும், ராமசாமி முதலியார் குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணசாமி—அவர் ஒரு புத்தகம் எழுதினார். Parliamentarian என்ற ஒரு புத்தகம். அதில் பன்னீர்செல்வத்தைப்பற்றி குறிப்பிடுகிறார். "நீங்கள் சட்டசபையிலே இருந்து எதை எடுத்தாலும் எதிர்த்துப் பேசியிருக்கிறீர்களே, காங்கிரஸ் ஆட்சி செய்கின்ற நண்பர்களை எல்லாம்கூட நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் பேசியிருக்கிறீர்களே?" என்றபோது, "ஆமாம், எதிர்க்கட்சி என்றால் அப்படித்தான் பேச வேண்டும், எதிர்க்கட்சிக்கு என்று சில இலக்கணங்கள் இருக்கின்றன" என்று இவர் சொன்னார். உடனே அவர் கேட்டார், "சரி, நாளைக்கு ஆதி திராவிட மக்களுக்கெல்லாம் ஆளுக்கு ஒரு வீடு கொடுப்பதாக காங்கிரஸ் அரசாங்கம் ஒரு சட்டம் போட்டால் அதை அவையிலே எதிர்ப்பீர்களா, ஆதரிப்பீர்களா?" "ஆதரிப்பேன், ஆதரித்துவிட்டு ஒரு யோசனை சொல்வேன்; வீடு கொடுத்தால் மாத்திரம் போதாது, ஒவ்வொரு வீட்டுக்கும் மாதம் 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் சொல்வேன், அதுதான் எதிர்க்கட்சிக்காரனுடைய இலக்கணம்" என்று பன்னீர்செல்வம் சொன்னார். அவர் இந்த மண்ணின் வாகு உள்ளவர், நாகரிகம் தெரிந்தவர். "நான் இதை எதிர்ப்பேன்; வீடே கூடாது என்று சொல்லமாட்டேன்; வீடும் கொடு. அவர்களுக்கு மாதந்தோறும் செலவுக்கு பணமும் கொடு என்று சேர்த்துச் சொல்வேன்" என்று சொன்னார். அவர் Parliamentarian; அவர் பாராளுமன்ற வித்தகர்; அவர் தந்தை பெரியாருடைய மாணவர்; அறிஞர் அண்ணா அவர்களுடைய தோழர், எங்களுக்கெல்லாம் தலைவராக இருந்தவர் திரு. பன்னீர்செல்வம்.

அதை எண்ணிப்பார்த்து, செம்மொழிக்காக இன்னும், முதலமைச்சர் கேட்டும்கூட, டெல்லியில் இருந்து ஏன் பணம் அனுப்பவில்லை என்று எங்களோடு சேர்ந்து கேட்கவேண்டிய எதிர்க்கட்சி—எதற்காகப் பணம் கேட்கிறார்—அவருடைய மகள் கனிமொழிக்கு கொடுக்கிற கௌரவத்தைக்கூட செம்மொழிக்கு கருணாநிதி கொடுக்கவில்லை என்று சொல்லி, கனல் கக்க ஒரு தாக்குதலை நடத்திவிட்டு, செம்மொழி இப்போது தேவையா என்று பேசுகின்றவர்களுக்கு இதிலே என்ன அக்கறை இருக்க முடியும்? ஆனால், நான் இதை இலாபமாக எடுத்துக்கொண்டேன். எப்படி என்றால், இவர்கள் பேசியிருக்காவிட்டால், 76 கோடி ரூபாய் இந்த வாரம் வந்திருக்குமா நமக்கு? (மேசையைத் தட்டும் ஒலி) 'பாவம், அவர் கேட்டுக் கேட்டு கடிதம் எழுதினார், நாம் அனுப்பவில்லை, எதிர்க்கட்சித் தலைவர்கூடப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே அவர் வருத்தப்படுவார்' என்று





அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இன்று காலையிலிருந்து இங்கு எவ்வளவு ரகளை செய்திருந்தாலும் ஜெயலலிதாவுக்கு இதற்காக நான் நன்றி கூறுகிறேன், தமிழ் மொழியின் சார்பாக. தமிழ் மொழி செம்மொழியாக வளர, வாழ வழிவகுத்துக் கொடுத்த அம்மையாருக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அடிக்கடி இதேபோல் செய்துகொண்டிருங்கள். உங்களுடைய புகழும், பெருமையும், உங்களுடைய நாகரிகமும் உலகத்தில் கொடிகட்டிப் பறக்கின்ற அளவுக்கு இதைச் செய்து கொண்டிருங்கள். எங்களுக்கு அதனால் கவலை கிடையாது, அதனால் நாங்கள் ஒன்றும் பயந்துவிடமாட்டோம்.

*பிற்பகல் 1-15*

நாங்களெல்லாம் அப்படிப்பட்ட இனத்திலேயிருந்து வந்தவர்கள்தான். பெரியார் அவர்கள் சொல்வார்கள் அடிக்கடி, "நாங்களெல்லாம் பாஷாணத்திலே புழுத்த புழுக்கள்" என்று. (மேசையைத் தட்டும் ஒலி) பாஷாணத்திலே புழுத்த புழுக்களைப் பாஷாணம் என்ன செய்துவிடும்? ஆகவே, அந்தத் துணிவோடு, அந்தத் தெளிவோடு ஆரம்ப காலத்திலே சுய மரியாதை இயக்கத்திலேயிருந்து வந்தவர்கள், சுய மரியாதையை ஓரளவுக்கு அடக்கிக்கொண்டு இங்கே அமர்ந்திருக்கிறோம் என்றால், அதற்கு ஒரேயொரு காரணம், ஜனநாயகத்தை வாழவைக்க வேண்டும், ஜனநாயகத்தை வளர்க்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அந்த எண்ணத்தால்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நமக்கென்று ஒரு பண்பாடு இருக்கிறது, நமக்கென்று ஒரு கலாச்சாரம் இருக்கிறது, நமக்கென்று ஒரு நாகரிகம் இருக்கிறது. அந்த நாகரிகத்தை, அந்தக் கலாச்சாரத்தை, அந்தப் பண்பாட்டைப் பழுதுபடாமல் காப்பாற்றவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிற காரணத்தினால்தான் கோழை என்று சொன்னாலும் பரவாயில்லை, நாங்கள் பண்பாட்டைக் காப்பாற்றுவோம், நாங்கள் எங்களுடைய நாகரிகத்தைக் காப்பாற்றுவோம், பழுதடைய விடமாட்டோம் என்கின்ற அந்த உறுதியோடுதான் இன்று காலை நிகழ்ச்சிகளிலே நானும் சரி, பேராசிரியரும் சரி மற்றும் நம்முடைய அன்புக்குரிய அமைச்சர் பெருமக்களும் சரி, ஆளுங்கட்சி உறுப்பினர்களும் சரி, அத்தனைபேரும் அமைதியாக இருந்தார்கள். அவர்கள் தாங்க முடியாமல் சில நேரங்களிலே தங்களுடைய கருத்துகளை வெளியிட்டாலும்கூட, இங்கே அமைச்சர்களின் சார்பிலே எழுப்பப்பட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியவில்லை.

சுப்ரீம் கோர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள், நான் தவறாகச் சொல்லிவிட்டேன் என்று. தம்பி துரைமுருகன் அதைப்பற்றி எடுத்துக்காட்டி, தவறு செய்தது கலைஞர் அல்ல, தவறு செய்து பேசியது நீங்கள்தான் என்பதை இங்கே நிரூபித்துக் காட்டியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் நீங்கள் ஞாபகத்திலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எதையெதையோ பேசியிருக்க வேண்டும். திசை திருப்பப்பட்டிருக்கிறது. இருந்தாலும், திசை திருப்பப்பட்டாலும்கூட, அது எங்கேயோ போய் ஒரு நல்ல கரையிலேதான் சேரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. திசை திருப்பப்பட்ட பல கப்பல்கள் உலகத்திலே பல நாடுகளையே அதிலிருந்த மாலுமிகளுக்குக் காட்டியிருக்கிறது என்பதை வரலாறுகளிலே எல்லாம் படித்திருக்கிறோம். அதைப்போல, திசை திருப்பப்பட்டாலும்கூட நாம் அடைய வேண்டிய திக்கு எது என்பதும், நாம் எதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம் என்பதும் உங்கள் எல்லோருக்கும் தெரியும் என்ற காரணத்தால், காலையிலிருந்து நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நம்முடைய கடமையை ஆற்றுவோம், மக்கள் தொண்டினை ஆற்றுவோம். இந்த கவர்னர் உரையிலே வந்திருக்கிற இந்தக் கருத்துகளுக்கெல்லாம் வலிமை ஏற்றுவோம் என்று கூறி என்னுடைய உரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மன்னிக்க வேண்டும். இரண்டு அறிவிப்புகள் உள்ளன.

அத்தியாவசியப் பொருள்களின் விலை சீராக இருக்கவேண்டும், இப்பொழுது உயர்ந்திருக்கின்ற அளவுக்கு மேலும் உயரக் கூடாது, கட்டுப்படுத்தப்படவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் ரேஷன் கடைகளில் பொது விநியோகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று கடந்த 4, 5 மாத காலமாக அறிவித்து இதுவரையிலும் அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனுடைய காலகட்டம் இத்தோடு முடிவடைகிறது. இருந்தாலும்கூட, வெளிச்சந்தை விலையை ஓரளவு கட்டுப்படுத்த, ஏழை, எளிய மக்கள் நியாய விலைக் கடைகளின் மூலமாக இந்த அத்தியாவசியப் பொருள்களைத் தொடர்ந்து பெறுவதற்கு இன்னும் 6 மாத காலத்திற்கு இந்தப் பொது விநியோகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)



பிற்பகல் 1-20

நேற்றைக்கே அறிவித்து—ஆதி திராவிட பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை அம்மாணவர்கள் பிளஸ் 2 தேர்வில் 60 சதவிகிதம் மதிப்பெண் பெற்றிருந்தால் மட்டுமே வழங்கப்படும் என்ற மத்திய அரசின் நெறிமுறையால், பல மாணவ, மாணவியர்கள் கல்வி உதவித் தொகை பெற இயலாத நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் தொழிற்பட்டப் படிப்புகளில் சேர்வதற்கு பிளஸ் 2 தேர்வில் தேர்வு பெற்றிருந்தாலே போதும் என்ற நிலையில், இந்தப் புதிய நிபந்தனையால் பல மாணவர்கள் உதவித்தொகை பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே, கல்வி உதவித்தொகைத் திட்டத்தை (Post-Matric Scholarship Scheme) தற்போதுள்ள விதிமுறைகளின்படியே தொடர்ந்து செயல்படுத்துமாறு மத்திய சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு 9-1-2008 அன்று கடிதம் எழுதியுள்ளேன்.

மத்திய அரசின் முடிவினை எதிர்நோக்கி, மாணவர்களின் படிப்பு தடைபடாமல் தொடரும் வகையில் பிளஸ் 2 தேர்வில் தேர்வு பெற்று தொழிற்படிப்புகளில் பயின்று வரும் அனைத்து ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும் தொடர்ந்து கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்பதையும், மத்திய அரசு விதிமுறைகள் ஒருவேளை மாற்றப்படாதபட்சத்தில் இதற்கான செலவை நமது மாநில அரசே தனது நிதியிலிருந்து ஏற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்தது, சிமெண்ட் விற்பனை பற்றியது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகக் குறைந்த விலையில் சிமெண்ட் விற்பனை செய்யும் திட்டத்தின்கீழ் இதுவரை, 20,000 மெட்ரிக் டன் சிமெண்ட் கிடங்குகளில் பெறப்பட்டு, 30-1-2008 வரை 1,540 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலமாக, பயனாளிகள் அனைவரும் எளிதில் சிமெண்ட் பெறும் வகையில், இத்திட்டத்தின் வழிமுறைகள் எளிமையாக்கப்பட வேண்டும் என்றும், வீடு கட்டும் நடுத்தரக் குடும்பங்களுக்கு 100 மூட்டைகளுக்கு மேலாகவும், அதிக அளவில் சிமெண்ட் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு சிமெண்ட் விற்பனை அளவு உயர்த்தப்பட வேண்டும் என்றும் சில கோரிக்கைகள் எழுந்துள்ளன.

[கலைஞர் மு. கருணாநிதி] [2008 பிப்ரவரி 1

இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து, இத்திட்டத்தின் பலன்களை அனைவரும் எளிதாகவும், போதிய அளவிலும் பெறும் வகையில், கட்டட வரைபடம் உள்ள பயனாளிகள் தனித் துணை வட்டாட்சியரை அணுகி ஒதுக்கீட்டுக் கடிதம் பெறாமல், நேரடியாகவே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிட்டங்கிகளில் கட்டட வரைபடத்தைச் சமர்ப்பித்து அதன் அடிப்படையில் சிமென்ட் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும் என்றும், தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விற்பனை அளவான ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் 100 மூட்டைகள் என்பது இனி 200 மூட்டைகளாக உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய மணி அவர்களும், மற்றவர்களும் ஒகேனக்கல் குடிநீர்ப் பிரச்சினைப்பற்றிக் கூறி அதில் தீர்வுகாண வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். பல நேரங்களிலே இதனை வலியுறுத்தியிருக்கின்றார்கள். அதுபற்றி ஓர் அறிவிப்பு.

பிப்ரவரி முதல் வாரத்தில் இத்திட்டம் குறித்து ஜப்பான் நாட்டில், டோக்கியோ நகரத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தையிலே கலந்துகொள்வதற்காக மத்திய அரசின் அதிகாரிகளும், தமிழக அரசின் அதிகாரிகளும் செல்ல இருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தைகளிலே, முடிந்தால் அங்கு, ஜப்பானுக்குச் செல்லவிருக்கின்ற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல முடிவு ஏற்பட்டு, ஒகேனக்கல் திட்டத்திற்கு விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. 31-1-2008 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



2008 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. ராஜசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** இல்லை.

[2008 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம. சுப்புராம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை



2008 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*'2008 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'*

என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்களால் *24-1-2008* ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

*பிற்பகல் 1-25*

## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) சட்டமன்றப் பேரவையின் அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பத்திரிகையாளர்கள் ஆலோசனைக் குழுவின் வேண்டுகோளினை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களுக்கு முதன்முறையாக பேனா மற்றும் சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் ஆகியவற்றை இந்த ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். இதற்கிணங்க சட்டமன்றப்

[பேரவைத் தலைவர்] [2008 பிப்ரவரி 1

பேரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்கள், பேனா மற்றும் சுருக்கெழுத்துக் குறிப்பேடுகளை சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி *25 (1)*-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-26* மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.



## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*31.* யாதொரு வணிகர், ஆந்திரப் பிரதேசம் ஸ்ரீ சத்யசாய் சென்ட்ரல் டிரஸ்டினால் நிறைவேற்றப்படும் சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு எல்லைப் பகுதியில் தொடக்கத்தில் இருந்து அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கால்வாய்களை வலுப்படுத்தி மேம்படுத்துவதற்காக ஒப்பந்ததாரர்கள் மற்றும் துணை ஒப்பந்ததாரர்கள் பணிகளை நிறைவேற்றுவதற்காக சிமிட்டி, உருக்கு மற்றும் ஏனைய இடுபொருட்கள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையுடன் இணைக்கப்பட்ட சான்றிதழை தாக்கல் செய்வதற்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி-2) துறையின் *5-7-2007* ஆம் நாளிட்ட *130* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *86 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*32.* சென்னையிலுள்ள தாய்லாந்து தூதரகம் மற்றும் அதன் தூதரக அதிகாரிகளுக்குத் தீர்வையில்லாத, கட்டுப்பாட்டிற்குட்பட்ட பொருட்களை வைத்திருக்கும் பண்டகசாலை விற்பனை செய்ததன்பேரில் வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி-2) துறையின் *30-7-2007* ஆம் நாளிட்ட *141* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *86 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*33.* பீடி, பீடி புகையிலை, புகையிலை, மூக்குப் பொடி, சுருட்டு ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி-2) துறையின் *8-8-2007* ஆம் நாளிட்ட *146* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *86 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*34.* ரெயின்போ கண் மருத்துவமனையால் ஊரக கிராமங்களில் இலவச கண் மருத்துவ முகாம்களை நடத்துவதற்கும், நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்துவரவும், திரும்ப அழைத்துச் செல்லவும் பயன்படுத்தப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம்

[2008 பிப்ரவரி 1

கருங்குழி கிராமத்திலுள்ள திருவாளர்கள் ஆர். கிறிஸ்டியன் நினைவு அறக்கட்டளையால் வாங்கப்பட்ட வண்டியின்மீது செலுத்தத்தக்க வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி)-2) துறையின் 24-9-2007 ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. யாதொரு வணிகர், ஆயத்த அடிப்படைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்கள் அல்லது துணை ஒப்பந்ததாரர்களால் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக பயன்படுத்தப்படும் யாதொரு பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியை சில நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி-2) துறையின் 27-9-2007 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. யாதொரு வணிகர், ஒப்பந்ததாரர் அல்லது துணை ஒப்பந்ததாரர்கள் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் யாதொரு பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியை சில நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி-2) துறையின் 11-10-2007 ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்) .

38. 2005-2006 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ். ஆங்கிலம்)



2008 பிப்ரவரி 1]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

66. 2006-2007 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

67. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2007-2008)

68. அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2007-2008)

69. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2007-2008)

70. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2007-2008)

71. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) ( வரிசை எண்கள் 1 முதல் 50)

D
Y24,31 P08
P08 41.2
228098

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner
of Stationery and Printing,
Chennai-600 002.